உதயன்
ரூபா 20.00
www.uthayan.com
சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 10 வியாழக்கிழமை (24.03.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 118



02
கலங்கியது மே.இந்தியத் தீவுகள்



03
நடப்புச் சம்பியனா? நடத்தும் நாடா?



09
குழந்தையின் சடலம் திருநகரில்



14
வாசுவின் புதிய கண்டுபிடிப்பு



16
கறுப்புச் சந்தையில் கடைகள்

# லிபியா மீதான வான் தாக்குதல்கள் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வாகாது

## ஐ.நா. சபையின் தீர்மானத்தை மறைமுகமாகச் சாடுகிறது இலங்கை

கொழும்பு,மார்ச்24

லிபியா மீது மேற்கொள்ளப்பட்டுள்ள சரமாரியான வான் தாக்குதல்கள் பிரச்சினைக்குத் தீர்வாகாது.

இராஜதந்திர ரீதியிலேயே தீர்வு காணப்படவேண்டும் என்பதே இலங்கை அரசின் நிலைப்பாடு.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் அமைச்சர் பீரிஸ் தெரிவித்த இந்தக் கருத்து ஐ.நாவின் தீர்மானத்தை மறைமுகமாகக் கண்டிப்பதாக அமைந்திருக்கின்றது என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

நேற்று நாடாளுமன்ற சபை ஒத்திவைப்பு வேளையின் போது ஆளும் கட்சி உறுப்பினர் ஏ.எச்.எம் அஸ்வரினால் முன்வைக்கப்பட்ட லிபியா மீதான கூட்டுப்படைகளின் தாக்குதல் தொடர்பான பிரேரணைக்குப் பதிலளித்து உரையாற்றும் போதே பேராசிரியர் பீரிஸ் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் -

உலக நாடுகளில் பொதுமக்களுக்கு பெரும் பாதிப்புக்கள் ஏற்படும் வேளையில் ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானத்துக்கு இணங்க நேச நாடுகள் உதவும் வகையில் தலையிடலாம். ஆனால் லிபியா மீதான இக் கூட்டுப் படைத்

(32ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 24

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விக்கிரமபாகு கருணாரத்ன மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராகப் பொலிஸார் நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்து இன்று கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

டிசம்பர் மாதம் 7ஆம் திகதி லண்டன் சென்று திரும்பிய புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதல் குறித்து முறைப்பாடு செய்தும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை.

இன்றைய ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊர்வலமாகச் சென்று பொலிஸ் மா அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட உள்ளது. (ஒ-சி)

உள்ளே பீற்றர்ஸனின் வர்ணப்படம் இணைப்பு





உங்கள் உதயனுடன் தொடர்ச்சியாய் வீரர்களின் வர்ணப் படங்கள் எதிர்பாருங்கள்

## 2 இலங்கையருக்கு அகதி அந்தஸ்து

கொழும்பு, மார்ச் 24

ஆஸ்திரேலியாவில் புகலிடம் மறுக்கப்பட்டு கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்த இரு புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

குறித்த இருவரையும் இலங்கைக்கு நாடு கடத்துவதால் ஆபத்து ஏற்படும்

(29ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு கைப்பற்றிய சபைகளில் கூடுதல் விருப்பு வாக்குகளைப் பெற்றவர்களே தவிசாளர்கள்

### நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் முடிவு

கொழும்பு, மார்ச் 24

உள்ளூராட்சிச் சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்ற 12 உள்ளூராட்சி சபைகளுக்கும் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றவர்களே தவிசாளர்களாகவும், தலைவர்களாகவும் நியமிக்கப்பட உள்ளனர்.

நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் 15 சபைகளில் போட்டியிட்டு 12 சபைகளைக் கைப்பற்றி

(32ஆம் பக்கம் பார்க்க)

## காப்பாற்றப்பட்டது ரணிலின் தலைமை ஐ.தே.க. பிரதித் தலைவரானார் சஜித்!

கொழும்பு,மார்ச் 24

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியில் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் நீடிப்பார். அத்துடன், பிரதித் தலைவர்களாக சஜித் பிரேமதாஸவும், கரு ஜெயசூரியவும் செயற்படுவர்.

- இவ்வாறு நீண்ட இழுபறிக்குப் பின்னர் நேற்று கூடிய கட்சிச் செயற்குழுக் கூட்டத்தில் பொது இணக்கப்பாட்டுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதுகுறித்து ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தவை வருமாறு-

ஐ.தே.கட்சியின் புதிய யாப்பின் பிரகாரம் கட்சித் தலைவர் பதவி உட்பட முக்கிய ஐந்து பதவிகளுக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் இறுதி

(29ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் வெறும் தேர்தல் பிரசாரம் மட்டுமே

### சபையில் தயாசிறி எம்.பி. சாடல்

கொழும்பு, மார்ச் 24

அரசின் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் அனைத்தும் தேர்தல் காலப் பிரசாரங்களுக்கு மட்டுமே. அதன்பின்னர் அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அரசின் அபிவிருத்திக் கருத்திட்டங்களை மக்களுக்கு கேட்க முடியுமே தவிர, கண்களால் பார்க்க முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற

(29ஆம் பக்கம் பார்க்க)




## இஸ்லாமிய ராணுவங்கள் அனைத்தும் லிபியாவுடன் இணைய வேண்டும்

### திடீரெனத் தோன்றி கடாபி அறைகூவல்

திரிபோலி,மார்ச்24

"உலக நாடுகளிலுள்ள அனைத்து இஸ்லாமிய இராணுவங்களும் என்னோடு இணைய வேண்டும்" - இப்படி லிபியத் தலைவர் மும்மர் கடாபி செவ்வாய்க்கிழமை மாலை திடீரெனத் தோன்றி அறைகூவல் விடுத்தார்.

'கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கூட்டுப் படைகளால் அவரது கட்டளைப் பணியகம் நிர்மூலமாக்கப்பட்ட பின்னர், கேணல் கடாபி தலைமறைவாக இருந்தார். அவரது தலைமறைவு தொடர்பாகப் பலத்த வதந்திகளும் ஊகங்களும் பரவத் தொடங்கின.

இந்நிலையில் கடாபி, பப் அல் அஜிஜியா வளவில்

(29ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பாகிஸ்தானின் சுழலில் கலங்கியது மேற்கிந்தியத் தீவுகள்


பிஸ்சுவின் விக்கெட் வீழ்த்தப்படுகையில்.


சந்தர்போல்

- டிலீப் -

எதிர்பார்க்கப்பட்டது பரபரப்பான ஆட்டமாய். முடிந்தது சோர்வான ஆட்டமாய். பாகிஸ்தான் சுழலில் சிக்கி சின்னாபின்னமானது தீவுகளின் ஆட்டம். அரையிறுதிக்குள் சிக்கலின்றி நுழைந்தது பாகிஸ்தான்.

பத்தாவது உலகக் கிண்ணம் நெருங்குகின்றது முடிவை நோக்கி. மிர்பூரில் நடந்தது முதலாவது காலிறுதி ஆட்டம். பாகிஸ்தானுக்கும் மேற்கிந்தியத்தீவுகளுக்குமிடையில் பரபரப்பில்லாத மோதல். தீவுகளும் - பங்களாதேஷும் மோதின லீக்கில் மிர்பூரில். தீவுகள் மடக்கியது பங்களாதேஷை. சுருண்டது பங்களாதேஷ் 58 ஓட்டங்களுடன். பாடம் படித்திருந்தும் தீவுகளின் முடிவு தவறியது நேற்று. தீவுகள் வென்றனர் நாணய சுழற்சியில், எடுத்தனர் முடிவு துடுப்பெடுத்தாட.

களத்துக்கு துடுப்புடன் வந்ததும் வில்லங்கம் விளங்கியிருக்கும். கெயில் மீண்டும் வந்ததால் தீவுகள் அதிரடி காட்டும் என்று பலரது நினைப்பு. வந்தவர் குல்லின் பந்தில் தூக்கிக் குடுத்து விட்டுப்போனார். 14 ஓட்டங்களில் பறிக்கப்பட்டது தீவுகளின் முதலாவது விக்கெட். பாகிஸ்தானுடன் இறுதிவரை சமர் புரிந்த ஸ்மித் மறுமுனையில் நீண்டநேரம் ஆடிக்களைத்து விட்டார். ஏழு ஓட்டங்களுடன் விடைபெற்றார் உலகக் கிண்ணத்திலிருந்து. பகுதிநேரம் சுழல் பந்து வீசும் ஹபீஸ் அழைக்கப்பட்டார் இரண்டாவது ஓவர். ஹபீஸின் இரண்டாவது ஓவரில் ஸ்மித் வீழ்த்தப்பட்டார். களத்துக்கு வந்தார் இளம் லாரா என்றழைக்கப்படும் டரன் பிராவோ. வந்த வேகத்தில் ஹபீஸ் பந்தில் அதே ஓவரில் ஆட்டம் முடிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

5.4 ஓவர்கள் 16 ஓட்டங்கள் 3 விக்கெட்டுக்கள் இழந்த இக்கட்டான நிலைமை. தடுமாறியபோது கைகொடுத்தனர் சர்வான்-சந்தர்போல் ஜோடி. நிலைத்து நீடித்து அதிரடியாய் பின்னர் ஆடுவது அவர்கள் எண்ணம். களத்தில் நிலைத்து நின்றது. ஆட்டத்தில் அதிரடியில்லை. ரசிகர்களின் ஆரவாரத்துக்கு மட்டும் குறைவில்லை. ஓட்டங்கள் ஒற்றை ஓட்டங்கில் மட்டும் தங்கியிருந்தது. அதிரடிக்கு முனைந்தால் பறிக்கப்படும் விக்கெட். இக்கட்டு நிலையில் ஆட்டம் தொடர்ந்தது தீவுகள். நீண்ட நேரம் நிலைப்பு. அப்ரிடி பந்தில் அதிரடிக்கு முயற்சி. வீழ்ந்தது சர்வானின் விக்கெட். 58 ஓட்டங்களில் சரிக்கப்பட்டது சர்வான் விக்கெட். விக்கெட் வீழ்த்தப்படுகையில் 24.1 ஓவர்கள்.

சர்வான் விக்கெட் சரிந்ததும் தொடர்ந்து வீழ்ந்தது தீவுகளின் விக்கெட்டுக்கள். அதிரடி மன்னன் பொலாட் பெற்றுக் கொண்டது ஓர் ஓட்டம். அப்ரிடியால் முடிக்கப்பட்டது அவர் ஆட்டம். விக்கெட் காப்பாளர் தோமஸ் இறக்கம். அப்ரிடியின் முதல் பந்தில் வெளியேற்றம். 'ஹட்றிக்' வாய்ப்பு அப்ரிடிக்கு நெருக்கம். இருந்தும் சமியால் பறிக்கப்பட்டது அவர் வாய்ப்பு. அப்ரிடி வாய்ப்பை பறித்த சமி அஜ்மலின் பந்தில் அடுத்த ஓவரிலேயே வெளியேற்றம். உள் நுழைந்த பிஸ்சூ, அஜ்மலின் 'தூஸ்ரா' பிடுங்கியது விக்கெட்டை. முடிவை நெருங்கியது தீவுகளின் ஆட்டம். 71 ஓட்டங்கள் எட்டு விக்கெட்டுக்கள்.

றோச் - சந்தர்போல் இணைந்தனர். பாகிஸ்தானின் சுழலை சமாளித்து ஆடியது இந்த ஜோடி. திக்குமுக்காடி முடிவை நெருங்கிய தீவுகளுக்கு ஆறுதல். அதிரடி இந்த ஜோடியின் இணைப்பிலும் இல்லை. இதனால் ஆட்டத்தில் சூடு இல்லை. இணைப்பை உடைத்தெறிய பாக். மாற்றியது வியூகங்கள். 40 ஓட்டங்கள் பகிர்ந்த நிலையில் அப்துல் ரஷாக் பந்தில் பிரிந்தது ஜோடி. றோச் 16 ஓட்டங்களில் பவிலியனுக்கு திருப்பம். ராம்போல் களத்துக்கு வருகை. அப்ரிடியின் பந்தில் வெளியேற்றம். 112 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது தீவுகளின் ஆட்டம்.


ஆட்டநாயகன் விருது பெற்ற ஹபீஸ்

பந்து வீச்சில் பாக். கலக்கல். அப்ரிடி எடுத்தது 4 விக்கெட்டுக்கள். சுழலில் அப்ரிடியுடன் இணைந்து தாக்கிய ஹபீஸ், அஜ்மல் இரண்டு விக்கெட்டுக்கள்.

பாகிஸ்தானின் அதிரடிக்கு இலக்கு தூசு. வந்தார்கள் கம்ரான் அக்மல்-ஹபீஸ் ஜோடி. வென்றார்கள் 20 ஓவரில். ஹபீஸ் ஆட்டம் அதிரடி. கம்ரான் அக்மல் துணை நின்று அளவான அதிரடி. தீவுகள் பாக்.கின் பல பிடிகளை கோட்டை விட்டது. அதிரடி ஆட்டத்தால் விரைவாய் நெருங்கியது இலக்கு. இணைப்பு இறுதிவரை பிரிவின்றி முடிவு. ஹபீஸ் கடந்தார் அரைச்சதம். அக்மல் தவறவிட்டார் 3 ஓட்டங்களால் அரைச்சதம். கலக்கல் பந்து வீச்சு, அதிரடி ஆட்டம் இதனால் ஹபீஸுக்கு கிடைத்தது ஆட்டநாயகன் விருது.

அமர்க்களமாய் அரையிறுதிக்குள் பாக். நுழைவு. இதனால் இந்தியாவுக்குள் 2007 ஆம் ஆண்டின் பின் நுழைவு.

## 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண முதலாவது காலிறுதி ஆட்டம்

ஆட்டம்: மே.தீவுகள் Vs பாகிஸ்தான் — நாணயச் சுழற்சி: மே.தீவுகள்
முடிவு: பாகிஸ்தான் 10 விக்கெட்டுக்களால் வெற்றி — ஆட்டநாயகன்: ஹபீஸ்

மேற்கிந்தியத்தீவுகள்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஸ்மித் | lbw b மொஹமட் ஹபீஸ் | 07 | 14 | 1 | 0 |
| கெயில் | c அப்ரிடி b உமர்குல் | 08 | 09 | 2 | 0 |
| சர்வான் | c உமர்குல் b அப்ரிடி | 24 | 68 | 2 | 0 |
| டரன்பிராவோ | lbw b மொஹமட் ஹபீஸ் | 00 | 03 | 0 | 0 |
| சந்தர்போல் | ஆட்டமிழப்பில்லை | 44 | 106 | 0 | 1 |
| பொலாட் | c கம்ரான்அக்மல் b அப்ரிடி | 01 | 07 | 0 | 0 |
| தோமஸ் | lbw b அப்ரிடி | 00 | 01 | 0 | 0 |
| சமி | lbw b அஜ்மல் | 01 | 03 | 0 | 0 |
| பிஸ்சூ | b அஜ்மல் | 00 | 03 | 0 | 0 |
| றோச் | c யுனிஸ் b அப்துல்ரஷாக் | 16 | 43 | 2 | 0 |
| ராம்போல் | b அப்ரிடி | 00 | 05 | 0 | 0 |
| உதிரிகள் | (lb 2, w 7, nb 2) | 11 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| உமர்குல் | 07 | 13 | 1 | 1 |
| மொஹமட்ஹபீஸ் | 10 | 16 | 2 | 3 |
| வகாப்றியாஸ் | 06 | 29 | 0 | 0 |
| அப்ரிடி | 9.3 | 30 | 4 | 1 |
| சயிட்அஜ்மல் | 08 | 18 | 2 | 1 |
| அப்துல் ரஷாக் | 03 | 04 | 1 | 1 |

TOTAL - 112/10 (43.3)

1-14 (கெயில்), 2-16 (ஸ்மித்), 3-16 (பிராவோ), 4-58 (சர்வான்), 5-69 (பொலாட்), 6-69 (தோமஸ்), 7-71 (சமி), 8-71 (பிஸ்சூ), 9-111(றோச்), 10-112(ராம்போல்)

பாகிஸ்தான்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கம்ரான்அக்மல் | ஆட்டமிழப்பில்லை | 47 | 61 | 7 | 0 |
| மொஹமட்ஹபீஸ் | ஆட்டமிழப்பில்லை | 61 | 64 | 10 | 0 |
| அஷாட் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| யுனிஸ்கான் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மிஷ்பாஉல்ஹக் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உமர்அக்மல் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| அப்துல்ரஷாக் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| அப்ரிடி | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உமர்குல் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| வகாப்றியாஸ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சயீட்அஜ்மல் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 1, lb 4) | 05 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| றோச் | 5.5 | 39 | 0 | 0 |
| ராம்போல் | 5 | 28 | 0 | 1 |
| பிஸ்சூ | 5 | 24 | 0 | 1 |
| சமி | 5 | 18 | 0 | 1 |

TOTAL - 113/0(20.5)

c - பிடியெடுப்பு   b - பந்துவீசியவர்   st - ஸ்ரொம்

# ஓட்டங்கள் குவிக்க அனுமதியில்லை!



மிர்பூர்,மார்ச் 24

'காலிறுதியில் நியூஸிலாந்தின் ஓட்ட வேட்டையை தடுத்து, அணியின் வெற்றிக்கு முக்கிய பங்குவகிப்பேன். இவ்வாறு தென்னாபிரிக்க சுழற்பந்துவீச்சாளர் ஜொகன் போத்தா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பத்தாவது உலகக் கிண்ண தொடர், இந்தியத் துணைக் கண்டத்தில் இடம்பெற்று வருகின்றது. மிர்பூரில் நாளை நடக்கும் 3 ஆவது காலிறுதியில் தென்னாபிரிக்கா-நியூஸிலாந்து அணிகள் மோதுகின்றன.

இதுகுறித்து தென்னாபிரிக்க சுழற்பந்துவீச்சாளர் ஜொகன் போத்தா கூறியதாவது:

தென்னாபிரிக்க அணியில் மூன்று சுழற்பந்து வீச் சாளர்கள் உள்ளனர். இதில் இம்ரான் தாகீர், றொபின் பீற்றர் சன் விக்கெட் வேட்டை நடத்துகின்றனர். ஆனால் எனது பந்துவீச்சு மூலம் எதிரணியின் ஓட்ட வேட்டையை தடுக்கிறேன். இது நியூஸிலாந்துக்கு எதிரான காலிறுதியிலும் தொடரும். இந்த ஆட்டத்தில் முழுத் திறமையை வெளிப்படுத்தி, நியூஸிலாந்துக்கு சிக்கல் அளிக்க முயற்சிப்பேன். ஸ்ரெய்ன், மோர்க்கல் உள்ளிட்ட இரண்டு திறமையான வேகப் பந்துவீச்சாளர்கள் இருப்பது தென்னாபிரிக்காவுக்கு சாதகமான விஷயம்.

காலிறுதியில் சந்திக்க உள்ள நியூஸிலாந்து அணியில் திறமையான நிறைய துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். ரெய்லர், குப்தில், மக்கலம், ரைடர் உள்ளிட்டோர் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்டம் சேர்க்கும் திறமை படைத்தவர்கள். இவர்களது விக்கெட்டை விரைவில் கைப்பற்றிவிட்டால், நியூஸிலாந்து அணியை சொற்ப ஓட்டங்களில் சுருட்டி விடலாம். அணித்தலைவர் டானியல் விற்றோரி, சிறந்த சுழற்பந்துவீச்சாளர் என்பதால் இவரது பந்துவீச்சை மிகுந்த கவனமுடன் எதிர்கொள்ள வேண்டும். எங்கள் அணியில் திறமையான துடுப்பாட்ட வீரர்கள் இருப்பதால் வெற்றோரியின் சுழல் குறித்து கவலைப்பட தேவையில்லை- என்றார். (15)

Watch cricket on LCD TV
EUROSTAR®
Live your Life®
CONSUMER ELECTRONICS,
HOME & KITCHEN APPLIANCE
UKAAYE (PVT) LTD.
No. 216A, Sea Beach Road, Colombo 11.
Tel: 011-2323646 Fax: 011-2459599 e-mail: ukaayece@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்புச் சம்பியனா? நடத்தும் நாடா?



-அருண்மொழி-

காலிறுதி ஆட்டங்களில் இன்று இடம்பெறப் போகும் ஆட்டம் கிட்டத்தட்ட இறுதி ஆட்டத்துக்குச் சமனானது என்று இரு அணிகளும் தெரிவித்துள்ளன. இதிலிருந்தே இந்த ஆட்டம் எவ்வளவு தூரம் முக்கியமான ஆட்டம் என்பது உங்களுக்கு விளங்கியிருக்கும்.

எவருமே எதிர்பாராத வகையில் இந்த இரு அணிகளும் காலிறுதியில் மோதுவது ஒரு வகையில் அதிசயம்தான். ஏனெனில் இந்த முறை உலகக் கிண்ண போட்டியில் முன்னணி அணிகளுக்குச் சாதகமாகவே அட்டவணை அமைக்கப்பட்டிருப்பதாக சுனில் கவாஸ்கர் தெரிவித்தார். இதனைவிட வர்த்தக ரீதியில் இந்திய அணி இறுதி ஆட்டம்வரை விளையாடினால் மாத்திரமே பெருமளவான விளம்பரங்கள் கிடைக்குமெனவும் ஐ.சி.சி தெரிவித்தது. இதனால் இந்தியாவுக்கு சாதகமான போட்டி அட்டவணை தயாரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தச் சாதகமான போட்டி அட்டவணை எவ்வாறு அமையப் போகின்றதென்பது இன்று தெரிந்து விடும்.

இன்றைய ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி பெறுமா? இல்லை ஆஸ்திரேலிய அணி பாகிஸ்தானுடனான தனது தோல்வியின் பின்னர் மீண்டும் எழுச்சி பெறுமா?

இந்திய அணிக்கு தனது சொந்த மண்ணில் தனது ரசிகர்களின் மத்தியில் விளையாடுவதுதான் பலமும், பலவீனமும். வெற்றி பெற்றால் மட்டும் கிண்ணத்தை பற்றி நினைத்துப்பார்க்கலாம் என்ற நிலையிலேயே இரு அணிகளினதும் நிலை அமைந்துள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரையில் சொந்த நாட்டில் போட்டி நடத்துவதால் கிண்ணம் வெல்வார்கள் என்று பல கோடி ரசிகர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள். இந்த எதிர்பார்ப்பு இந்தியாவுக்கு நெருக்கடிகளைக் கொடுக்கும். இதனாலேயே இவர்கள் தோற்பதற்கான சந்தர்ப்பங்களும் நிறையவே இருக்கின்றன. இந்திய அணி கிண்ணம் வெல்லாமல் தோற்றால், ஒவ்வொரு உலகக் கிண்ணத்திலும் இந்திய ரசிகர்கள் இந்திய அணி வீரர்களை எவ்வளவு தூரம் கௌரவப்படுத்தியுள்ளனர் என்ற வரலாறு இங்கு சொல்லப்படத் தேவையில்லை.

இந்திய அணி இந்த ஆட்டத்தில் வெல்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த வாய்ப்புக்களை அந்த சரிவரப் பயன்படுத்துவதன் மூலமே வெற்றியை நெருங்க முடியும். முதல் சுற்று லீக் ஆட்டங்களில் இந்திய அணி ஆறு ஆட்டங்களில் விளையாடி நான்கில் வெற்றி பெற்றிருக்கின்றது. ஓர் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்திருக்கின்றது.

பலவீனமான அணிகளுக்கு எதிராக போராடியே வெற்றிபெற்றது இந்திய அணி. பலமான தென்னாபிரிக்க அணியிடம் தோல்வியைத் தழுவியது. பலமான அணி என்ற பெயருடன் இருக்கின்ற பலவீனமான அணியான மேற்கிந்தியத்தீவுகளுடன் மாத்திரம் அபார வெற்றியைப் பதிவு செய்தது. இந்திய அணி உலகக் கிண்ண ஆட்டங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னதாக பலமான அணியாகக் கணிக்கப்பட்டாலும் தற்போது பலவீனமான அணியாகவே கணிக்கப்பட்டுள்ளது.

இந்திய அணியின் துடுப்பாட்டம்தான் அந்த அணிக்கு பலமென்று சொல்லப்பட்டாலும் அதுதான் அந்த அணிக்கு பலவீனமாகியுள்ளது. முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் பெற்றுக் கொடுக்கும் ஓட்டங்கள்தான் அந்த அணியின் ஓட்ட எண்ணிக்கையாக மாறி வருகின்றது. ஏனெனில் மத்திய வரிசை, பின்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டங்கள் பெற்றுக் கொடுப்பதென்பது இல்லாமல் போய்விட்டது. அதிலும் குறிப்பாக ஏனைய அணிகள் ஓட்ட வேகத்தை அதிகரிப்பதற்காக பயன்படுத்தும் 'பட்டிங் பவர்பிளே' இந்திய அணியைப் பொறுத்தவரையில் விக்கெட்களை விரைவாக இழப்பதற்கான 'பவர்பிளேயாகவே' இருக்கின்றது. களத்துக்குள் வருகின்ற எந்தவொரு இந்திய வீரரும் அதிரடியாக ஆட வேண்டும் என்று நினைப்பதாலேயே இந்த இழப்பு ஏற்படுகின்றது. இந்த போக்கில் மாற்றம் ஏற்படாத வரையில் இந்திய அணி பலமான எந்தவொரு அணிக்கும் எதிராக வெற்றியினைப் பெற்றுக்கொள்ள முடியாது.

மறுபுறம் இந்திய அணியின் பந்து வீச்சும் அதே நிலைமையில்தான் இருக்கின்றது. சகீர்கான் என்கின்ற தனியொரு பந்து வீச்சாளரை மட்டுமே நம்பியிருக்கின்றது. இதுவரை நாளும் பியூஸ் சாவ்லாவை அணியில் இணைத்து அணியில் ஓர் இடத்தை வீணடித்துக் கொண்டிருந்தார் டோனி. இதற்கு கடுமையான விமர்சனங்கள் எழவே அஸ்வினுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அஸ்வின் தனக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தை சரிவரப் பயன்படுத்தியிருக்கிறார். களத்தடுப்பும் சொல்லும்படியாக இல்லை.

மற்றைய அணியான ஆஸ்திரேலியாவைப் பொறுத்தவரையில் சகல துறைகளிலும் பிரகாசித்து வருகின்றது கூடவே சர்ச்சைகளிலும்தான். முதல் சுற்றில் இந்திய அணியைப் போன்று நான்கு ஆட்டங்களில் வெற்றி பெற்றிருக்கின்றது. பாகிஸ்தானுடனான ஆட்டத்தில் மாத்திரம் தோல்வியைத் தழுவியுள்ளது. ஏனைய ஆட்டங்கள் அனைத்திலும் தனது திறமையை சரிவர நிரூபித்திருக்கின்றது. உலகக் கிண்ணப் போட்டி ஆரம்பிப்பதற்கு முன்பாக கிண்ணம் வெல்லாத அணியாக கணிக்கப்பட்ட ஆஸி. தற்போது கிண்ணத்துக்கு சவால் விடும் அணியாக மாற்றமடைந்திருக்கின்றது. இந்திய மைதானங்களில் ஆடிய அனுபவங்கள் நிறையவே ஆஸிக்கு உள்ளதால் இன்றைய ஆட்டம் ஆஸிக்கு சவாலாக இருக்காது. இந்திய ரசிகர்களின் கூச்சலை சமாளிப்பதே ஆஸிக்கு பெரும் வேலையாக இருக்கும். அத்துடன் இந்திய அணியின் சுழல் பந்தை சமாளிப்பதோடு, முன்னணி துடுப்பாட்ட வீரர்களை வேகமாகச் சரித்தால் வெற்றியை பெற முடியும். இருப்பினும் இந்திய அணியை சமாளிப்பதென்பது சுலபமானதும் அல்ல.

ஆஸ்திரேலிய அணியின் தொடர் வெற்றிக்கு பாகிஸ்தான் முற்றுப்புள்ளி வைத்ததைப் போல இந்திய அணி, ஆஸ்திரேலியாவின் தொடர் கிண்ண வேட்டைக்கு முற்றுப்புள்ளி வைக்குமா? இல்லை இந்தியாவின் கிண்ணக் கனவு இன்றோடு கலையுமா?



## எங்களின் திட்டங்கள் இந்தியாவை தவிடுபொடியாக்கும்

இந்திய கிரிக்கெட் வீரர் சேவாக்கை வீழ்த்த புதிய திட்டம் தயாராக உள்ளதாக ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

சேவாக் போன்ற வீரர்களுக்குப் பந்து வீசுவது சவாலான விஷயம். உடலை குறிவைத்து வீசப்படும் 'ஷோட்பிட்ச்' பந்துவீச்சில் அவர் தடுமாறுவார் என்பதால் அந்த வகையான பந்துகளை கையாள திட்டமிட்டுள்ளோம்.

அவரை விரைவிலேயே ஆட்டமிழக்கச் செய்துவிட்டால் எங்களுக்கு சிறப்பாக இருக்கும். சேவாக்கை குறிவைத்து பல்வேறு திட்டங்களைப் வகுத்திருக்கிறோம். அவை அனைத்தும் சரியான முறையில் கைகொடுத்தால் ஆட்டம் எங்கள் கையில் இருக்கும்.

சேவாக் மட்டுமல்லாது இந்திய அணியின் துடுப்பாட்டம் நீண்டவரிசையாக உள்ளது. சச்சின், கம்பீர், ஹோக்லி, யுவராஜ் என எல்லோருமே மிரட்டக் கூடியவர்கள்தான். எனினும் பந்துவீச்சை பொறுத்தவரை நாங்கள் அதிக நம்பிக்கையுடன் உள்ளோம்.

140 கி.மீ வேகத்தில் கூட பந்து வீசுவோம். 3 விக்கெட்டுகளை விரைவாக வீழ்த்தி விட்டால் ஆட்டத்தை கட்டுக்குள் கொண்டு வந்துவிடலாம். இவ்வாறு அவர் கூறினார். (15)


இறுதிப் போட்டிக்கான சிறப்பு பரிசு

EUROSTAR ®

Live your Life ®

CONSUMER ELECTRONICS, HOME & KITCHEN APPLIANCE




மாபெரும் இறுதிப் போட்டி

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

..............................................................

போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?

..............................................................

பெயர் : ....................................................

தே.அ.இல. : ..............................................

முகவரி : ..................................................

..............................................................

போட்டி முடிவுத் திகதி


25.03.2011


| அதிகூடிய ஓட்டங்கள் | M | R | 50's | 100's | H.S | Avg. |
|---|---|---|---|---|---|---|
| சங்கக்கார(இலங்கை) | 06 | 363 | 02 | 01 | 111 | 121.00 |
| ரொரட்(இங்கிலாந்து) | 06 | 336 | 04 | 00 | 92 | 56.00 |
| ஸ்ரோரஸ்(இங்கிலாந்து) | 06 | 329 | 01 | 01 | 158 | 54.83 |

| அதிகூடிய விக்கெட்டுக்கள் | M | W | Best |
|---|---|---|---|
| அப்ரிடி (பாகிஸ்தான்) | 07 | 21 | 05/16 |
| சகீர்கான்(இந்தியா) | 06 | 15 | 03/20 |
| பீற்றர்ஸன் (தென்னாபிரிக்கா) | 06 | 14 | 04/12 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாத்திரத்தால் கிண்ணத்தை வெல்லும் இந்தியா



மும்பை,மார்ச் 24

டோனிக்கு சாதகமாக கிரகங்களின் அமைப்பு இருப்பதால், இந்த முறை இந்திய அணி உலகக் கிண்ணத்தை வெல்ல வாய்ப்புக்கள் இருப்பதாக, சோதிடரின் கணிப்புத் தெரிவிக்கின்றது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் லீக் ஆட்டங்கள் முடிந்து, காலிறுதி ஆட்டங்கள் இன்று முதல் ஆரம்பமாகின்றன. நாளை வியாழன் நடக்கும் இரண்டாவது காலிறுதியில் இந்திய அணி 'நடப்பு சாம்பியன்' ஆஸ்திரேலியாவைச் சந்திக்கிறது.

இந்தச் சூழலில் இந்தியாதான் கிண்ணம் வெல்லும் என மும்பை சோதிடர் ஒருவர் கணித்துள்ளார். இதற்கு அணித்தலைவர் டோனியின் பிறந்த ஆண்டு பலமாக இருப்பது தான் காரணம். இவர் 1981 இல் பிறந்துள்ளார். இதே ஆண்டில் பிறந்த ஸ்பெயின் காலபந்து அணியின் தலைவர் [illegible]ல்லாஸ். 2010 இல் உலகக் கிண்ணத்தை வென்றார். தற்போது பொலிவூட்டில் பிரபலமாக உள்ள ஷாகித் கபூர் 1981, ரன்பீர் கபூர் 1982 இல் பிறந்தவர்கள்தான். அதாவது அனைத்துத் துறையிலும் 1981 இல் பிறந்தவர்கள் தான் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

கடந்த 1974 இல் பிறந்த ஆஸ்திரேலியாவின் பொன்டிங், ஏற்கனவே இரண்டு முறை கிண்ணம் வென்று விட்டார். இதனால் இந்தத் தொடரில் 1981 இல் பிறந்த இந்திய அணித் தலைவர் டோனி, தென்னாபிரிக்க அணித்தலைவர் ஸ்மித் ஆகியோரில் ஒருவருக்குக் கிண்ணம் வெல்லும் வாய்ப்புள்ளது.

சூரியன், செவ்வாய் கிரகங்களின் ஆதிக்கம் நிறைந்த இலங்கை அணித்தலைவர் சங்கக்காரவுக்கு (பிறப்பு-1977), இந்த முறை உலகக் கிண்ணம் கிடைக்காது. இங்கிலாந்தின் ஸ்ரோரஸ்ஸுக்கு (பிறப்பு-1977), ஆஷஸ் வெற்றியுடன் எல்லாம் முடிந்து விட்டது. இதனால் தான் அடுத்து வந்த ஒருநாள் தொடரில் மோசமாகத் தோற்றார். பாகிஸ்தான் அணித்தலைவர் அப்ரிடி (பிறப்பு-1980) சிறப்பாக செயற்பட்டாலும், இவர் இம்ரான்கான் ஆகமுடியாது. நியூஸிலாந்தின் வெற்றோரி (பிறப்பு-1979), மேற்கிந்தியத்தீவுகளின் சமிக்கும் (பிறப்பு-1983) கிரகபலன்கள், அவ்வளவு அனுகூலமாக இல்லை.

ஆஸ்திரேலிய அணி பார்ப்பதற்கு வலிமையாக இருந்தாலும், பொன்டிங்கிற்கு மீண்டும் கிண்ணம் வெல்லும் அதிர்ஷ்டம் இல்லை. ஒருவேளை காயம் காரணமாக பொன்டிங் விலகி, 1981 இல் பிறந்த மைக்கல் கிளார்க் அணித்தலைவர் பதவியேற்றால் மீண்டும் கிண்ணம் வெல்ல வாய்ப்பு ஏற்படும்.

தற்போதுள்ள இந்திய அணி 'நொக் அவுட்' சுற்றில் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்த காத்திருக்கிறது. அரையிறுதியில் பாகிஸ்தானை சந்திக்க நேர்ந்தாலும், மீண்டும் வெற்றி பெறுவது உறுதி.

கிரகங்களில் வலிமையானதாக உள்ள புளுட்டோ தான், 1983 இல் கபில்தேவுக்கு சாதகமாக இருந்தது. யாரும் எதிர்பார்க்காத வகையில் கிண்ணம் வெல்லச் செய்தது. தற்போது இதே பலன்கள் டோனிக்கு ஊக்கமாக அமைவதால், ஆஸ்திரேலியாவின் வெற்றி நடைக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். இந்தியாவுக்கு உலகக் கிண்ணம் வெல்வதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

(15)

## சின்னதாய் சில அறிவிப்புக்கள்...

✱ நடப்பு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் மிக வெற்றிகரமாக அமைந்துள்ளது. ஆட்டங்கள் மிகவும் சுவாரசியமாக உள்ளன. ஒரு நாள் போட்டிகளுக்கு ரசிகர்களிடையே இருக்கும் ஆதரவு கொஞ்சம் கூட குறையவில்லை என்பது இந்த தொடரின் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தலைவர் சரத் பவார் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

✱ நியூஸிலாந்து அணியில் காயம் அடைந்த வேகப்பந்து வீச்சாளர் ஹமிஷ் பெனாட்டுக்குப் பதிலாக டேரில் டபி சேர்க்கப்பட்டுள்ளார். அணித் தலைவர் விற்றோரி, கைல் மில்ஸ் ஆகியோரும் காயத்தால் அவதிப்பட்டு வருவது நியூஸிலாந்து அணிக்கு பெரும் பின்னடைவாக அமைந்துள்ளது. தென்னாபிரிக்க அணியுடன் இடம்பெறவுள்ள கால் இறுதியில் விளையாட முடியும் என்று நம்புவதாக வெற்றோரி தெரிவித்துள்ளார்.

✱ காலிறுதி ஆட்டங்களுக்கான நடுவர் பட்டியலில் இலங்கையைச் சேர்ந்த அசோக டிசில்வா இடம் பெறவில்லை. சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் 'எலைட்' நடுவர்கள் குழுவில் இடம் பெற்றுள்ள 12 பேரில் டி சில்வா மட்டுமே கால் இறுதிக்கு சேர்க்கப்படவில்லை. அயர்லாந்து வீரர் வில்ஸனுக்கு சர்ச்சைக்குரிய வகையில் எல்.பி.டபிள்யூ ஆட்ட மிழப்பு கொடுத்ததால், டி சில்வாவுக்கு கடும் எதிர்ப்பு எழுந்தது குறிப்பிடத்தக்கது.

✱ சிம்பாப்வே அணியுடன் நடந்த லீக் ஆட்டத்துடன் கென்ய வீரர் ஸ்டீவ் டிகோலோ (39வயது) சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார். அவர் 134 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 3421 ஓட்டங்கள் (அதிகம் 111, சராசரி 28.99, சதம் 3, அரைசதம் 24), 94 விக்கெட்டுக்கள் எடுத்துள்ளார். உலகக் கிண்ண 28 ஆட்டங்களில் விளையாடியுள்ள அவர் 768 ஓட்டங்கள் மற்றும் 15 விக்கெட்டுக்கள் எடுத்துள்ளார்.

## ஆஸியை வீழ்த்த முடியாதா?

1987க்குப் பின்னர் உலகக் கிண்ணப் போட்டியில் ஆஸ்திரேலியாவை வென்றதில்லை என்ற மோசமான சாபக் கேட்டில் இருந்து இந்த முறை இந்திய அணி விமோசனம் பெறுமா? என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் இந்தியா - ஆஸ்திரேலிய அணிகள் மோதிய ஆட்டங்களின் முடிவுகள் விவரம்:

**1983:** லீக் சுற்றில் ஆஸ்திரேலியாவிடம் தோற்றாலும், 'நொக் அவுட்' சுற்றில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி அசத்திய கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி கோப்பையையும் வென்று சாதனை படைத்தது.

**1987:** லீக் ஆட்டத்தில் 1 ஓட்ட வித்தியாசத்தில் தோற்றாலும், 'நொக் அவுட்' சுற்றில் டெல்லி பெரோஸ் ஷா கோட்லா மைதானத்தில் நடந்த ஆட்டத்தில் இந்தியா 56 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. 1992 மற்றும் 1996 லீக் சுற்றில் ஆஸ்திரேலியாவிடம் தோல்வி. 1999 சுப்பர் சிக்ஸ் சுற்றில் தோல்வி.

**2003:** தென்னாபிரிக்காவில் நடந்த உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் சவுரவ் கங்குலி தலைமையிலான இந்திய அணி தோல்வி. அதற்கு முன்னர் நடந்த லீக் ஆட்டத்திலும் ஆஸ்திரேலியாவிடம் வாங்கிக் கட்டியது இந்தியா.

(15)

## நான் 'ஜென்டில்மன்' இல்லை




கொழும்பு,மார்ச் 24

நடுவர் ஆட்டமிழப்பு என தெரிவித்தால் மட்டுமே வெளியேறுவேன், நானாக முன்வந்து களத்தில் இருந்து வெளியேற மாட்டேன் என்று ஆஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் கூறியுள்ளார்.

கொழும்பில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் பொன்டிங் 19 ஓட்டங்கள் எடுத்திருந்த போது முஹமட் ஹஃபீஸ் பந்தில் கம்ரான் அக்மலிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

களத்தில் இருந்த நடுவர் மரியஸ் இதற்குப் முதலில் ஆட்டமிழப்புக் கொடுக்கவில்லை. ஆனால் பாகிஸ்தான் வீரர்கள் யூ.டி.ஆர்.எஸ் மூலம் முறையீடு செய்தனர். அதில் ஆட்டமிழப்பு எனத் தெரிந்ததால் பொன்டிங்குக்கு ஆட்டமிழப்புக் கொடுக்கப்பட்டது. ஆனால் சிறிது நேரத்தில் களத்திலேயே நின்று அடம்பிடித்த பின்னர்தான் பொன்டிங் வெளியேறினார்.

இந்த நிலையில் இது குறித்து பொன்டிங் கூறியதாவது:

பந்து துடுப்பு மட்டையில் பட்டது என்பது எனக்குத் தெரியும். எனினும் நான் எப்போதும் நடுவரின் முடிவின் படியே செயற்படுவேன். நடுவர் முதலில் ஆட்டமிழப்புக் கொடுக்காததால் நான் வெளியேறவில்லை. எப்போதும் இது போன்றுதான் நான் விளையாடி வருகிறேன் என்று பொன்டிங் கூறியுள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் நடுவர் ஆட்டமிழப்புக் கொடுக்காத நிலையிலும், தனக்கு ஆட்டமிழப்பு எனத் தெரிந்ததால், சச்சின் தானாகவே முன்வந்து வெளியேறினார்.

இதன் மூலம் எதிரணியான மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர் சமியால் 'ஜென்டில்மன்' எனப் புகழப்பட்டார்.

அதே நேரத்தில் ஆஸ்திரேலிய அணித்தலைவர் பொன்டிங், தனக்கு ஆட்டமிழப்பு என்று தெரிந்த போதிலும் நடுவர் ஆட்டமிழப்புக் கொடுத்தால் மட்டுமே வெளியேறுவேன் என்று கூறியுள்ளார்.

(15)

### பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்

துர்க்கா புத்தகசாலை
சுன்னாகம்.

ரூபன் பல்பொருள்
அளவெட்டி.

இணுவில் பத்திரிகை
முகவர்
இணுவில்.

இந்திரா பல்பொருள்
வாணிபம்
வேலணை.

அம்பாள் பல்பொருள் வாணிபம்
புங்குடுதீவு.

கந்தசாமி கடை
காரைநகர்.

சிறிமுருகன் களஞ்சியம்
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை

மலர் கடை
இளவாலை.

நகுலேந்திரன் பல்பொருள்
வாணிபம்.
முழங்காவில்.

அன்பரசன் புத்தகசாலை
ஒட்டுசுட்டான்.

மதுரா ரெயிலர் கடை
நாச்சிக்குடாச் சந்தி
முன்பாக, நாச்சிக்குடா.

உதயன் அலுவலகம்
கரடிப்போக்குச் சந்தி.

சூரியா பார்மஸி.
அச்சுவேலி.

கிருபா போட்டோ
மல்லாகம்.

**பருத்தித்துறையில்**
கவின் போட்டோ
கவிதா ரேடர்ஸ்

**நெல்லியடியில்**
மொடோன் ஸ்ரோர்ஸ்
ராஜலக்சுமி புத்தகசாலை
சதா பொன்ஸ்

**மந்திகையில்**
நாவலர் புத்தகசாலை

**உடுப்பிட்டியில்**
ரஜினி பீடா

**வல்வெட்டித்துறையில்**
கலைச்சோலை பான்சி கவுஸ்

**தென்மராட்சியில்**
அருள்நாயகி புத்தகசாலை
மணியம் ஸ்ரோர்ஸ்
ஸ்ரீ கருணா மல்ரி சொப்
கஜனன் மல்ரி சேர்விஸ் சென்ரர்
அல்லாரை ஆர்.டி.
உதயன் காரியாலயம்
சிறீராம் மல்ரி சென்ரர்

**கிளிநொச்சியில்**
பிள்ளையார் புத்தகசாலை
அறிவுநதி புத்தகசாலை
சோமசுந்தரம் மல்ரி சென்ரர்
புவனேஸ்வரி புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது இந்தியாவில் அல்ல; இலங்கையில் தான்....





இலங்கை - இங்கிலாந்து அணிகள் மோதும் காலிறுதி ஆட்டத்துக்கான கிரிக்கெட் விற்பனை மாளிகாவத்தை பி.டி.சிறிசேன மைதானத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றபோது...

# பறி போகிறது பொன்டிங்கின் "திமிர்ப்" பதவி

சிட்னி,மார்ச் 23

ஆஷஷ் டெஸ்ட் தொடரை இழந்ததுமே அணித் தலைவர் பதவியில் இருந்து பொன்டிங் நீக்கப்படுவது ஏறக்குறைய உறுதியானது. எனினும் உலகக் கிண்ணப் போட்டி நடைபெறும் இந்தச் சமயத்தில் அவரை நீக்கினால் அது அணியில் பாதிப்பை ஏற்படுத்தி விடும் என ஆஸ்திரேலிய நிர்வாகம் கருதியது.

இந்த நிலையில் உலகக் கிண்ணத் தொடரில் பொன்டிங்கின் செயற்பாடு படுமோசமாக அமைந்துள்ளது. இதுவரையில் ஆறு ஆட்டங்களில் ஆடிய பொன்டிங்கின் சராசரி 20 க்கு அண்மையாகவே இருக்கின்றது. சிம்பாப்வேக்கு எதிரான ஆட்டத்தில் ரன்அவுட்டான விரக்தியில் தொலைக்காட்சியை உடைத்தார்.

பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் பந்து மட்டையில் பட்டபோதும் ஆட்டமிழப்பு இல்லையென களத்தில் வாக்குவாதம் செய்தார். கனடாவுக்கு எதிரான ஆட்டத்தில் சக அணிவீரர் ஸ்டீவன் ஸ்மித்திடமே பிரச்சினை ஏற்படுத்தினார்.

இந்த செயல்களால் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அதிருப்தியடைந்துள்ளது. இந்த நிலையில் அணியின் எதிர்காலத்தை கணக்கில் கொண்டு முக்கிய மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. இதனால் பொன்டிங்கின் அணித் தலைமை பதவி பறிக்கப்படும் என அணியின் முக்கிய நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார். (15)

## இன்றைய ஆட்டம்

அகமதாபாத் பி.ப.2.30

ஆஸ்திரேலியா - இந்தியா



**நாளைய வர்ணப்படத்தில் அதிரடி நாயகன் யுவராஜ் இணைந்திருங்கள் உதயனுடன்....**




## தினமொரு பரிசுப் போட்டி

தென்னாபிரிக்க- நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான நாளைய (25.03.2011) ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி எது?

..............................................

பெயர் : ..............................................

தே.அ.இல : ..............................................

முகவரி : ..............................................

..............................................

இந்தக் கேள்விக்கான விடையை இந்தக் கூப்பனில் எழுதி நாளை (25.03.2011) பிற்பகல் 2 மணிக்கு முன் தினமொரு பரிசு, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தபாலிலோ அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கவும்.

CiCT GATEWAY CENTRE JAFFNA வழங்கும் 4 1/2 லட்சம் ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன்கள் 48 பேருக்கு தலா 9 ஆயிரம் ரூபா பெறுமதியானவை

பங்குபற்றுங்கள் போட்டிகளில் வென்றுகொள்ளுங்கள் பணப்பரிசில்களை

உதயன் வழங்கும்

வெல்லுங்கள் 1 1/2 லட்சம் ரூபா பணப் பரிசு

1ஆம் பரிசு

2ஆம் பரிசு 1 லட்சம் ரூபா பணப் பரிசு

உங்களுக்காகவே காத்திருக்கின்றன லட்சங்கள்.

எட்டமுடியாத லட்சங்கள் உங்களுக்காக

காலிறுதிப் போட்டிக்கான பரிசில்கள்

கம்ப்யூட்டர் ருடே வழங்கும்

தினமும் வெல்லும் ஒருவருக்கு ஒரு வருடத்துக்கான கம்ப்யூட்டர் ருடே இலவச சந்தா

உதயன் வழங்கும் தலா 10 ஆயிரம் வீதம் 5 பேருக்கு.

## மாபெரும் இறுதிப் போட்டி

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

..............................................

போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?

..............................................

பெயர் : ..............................................

தே.அ.இல. : ..............................................

முகவரி : ..............................................

..............................................

போட்டி முடிவுத் திகதி 25.03.2011

மாபெரும் இறுதிப் போட்டி 10 ஆறுதல் பரிசுகள்

அள்ளுங்கள் ஆறுதல் பரிசில்களை

SINGER PLUS No.01 STANLY ROAD JAFFNA வழங்கும் EGG BEATER

SINGER HOSPITAL ROAD JAFFNA வழங்கும் FAN

SINGER PLUS CHUNNAKAM வழங்கும் FAN

SINGER PLUS NELLIYADEY வழங்கும் FAN

SINGER PLUS CHAVAKACHCHERI வழங்கும் TOASTER

PC SOLUTION KASTHURIYAR ROAD JAFFNA வழங்கும் COLOUR PRINTER

PC POWER UNIT LUXAN PLAZA KASTHURIYAR ROAD வழங்கும் Rs. 5000 GIFT VOUCHER

BARANABAS 247, Stanly Road, Jaffna வழங்கும் SINSUNG DVD PLAYER

சரவணா ரெக்ஸ் 770, 772, கே.கே.எஸ் வீதி, (குட்டாதெருச் சந்தி) யாழ்ப்பாணம் Rs. 5000 GIFT VOUCHER

கிருபா லேணர்ஸ் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Rs. 5000 GIFT VOUCHER

### போட்டி விதிகள்

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தே.அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் தே.அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்களோ அவர்களது குடும்பத்தவர்களோ போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி உதயனில் அறிவிக்கப்படும். சகல போட்டிகளுக்குமான பெயர்களை இடது மேல் மூலையில் குறிப்பிட்டு, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் சேர்க்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியன் உச்சத்துக்கு வருவதே அதிகரித்த வெப்பநிலைக்கு காரணம்

## டீ. ஏ. ஜயசிங்க ஆராச்சி தெரிவிப்பு

கொழும்பு மார்ச் 24

அதிகரித்துக் காணப்படும் வெப்ப நிலைக்கு சூரியன் உச்சத்துக்கு வருவதே காரணம்"என்று காலநிலை அவதானிப்பு பிரதம விஞ்ஞானி யான டீ.ஏ. ஜயசிங்க ஆராச்சி தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டின் உள்ளகப் பிரதேசங்களில் காற்று வீசும் தன்மை இடம்பெறாமை, காற்று மண்டலத்திலுள்ள நீர் ஆவியாகிச் செல்லும் அள வுப் பிரமாணம் அதிகரித்துள்ளமை நாட்டில் நிலவும் அதிகரித்த வெப்ப நிலைக்குக் காரணி களாக அமைகிறது.

ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் இலங்கையின் நேர் உச்சியில் சூரியனின் சஞ்சாரம் அமைவதன் காரணமாக ஏப்ரல் மாதத்தின் நடுப் பகுதிவரையிலும் அதிகரித்த வெப்பநிலை காணப் படும்.

இதனிடையே உள்ளகப் பருவப் பெயர்ச்சியும் இன்னும் சில தினங்களில் நிலைகொள்ளவுள்ளதால் இலங்கையின் சகல பிரதேசங்களிலும் மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

இந்த நிலைப்பாடு ஏப்ரல் மாதத்தின் இறுதி வரையிலும் நிலவுவதோடு மின்னல் தாக்கங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் மக்கள் எச்சரிகையுடன் செயற்பட வேண்டியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளகப் பருவப் பெயர்ச்சிக் காலத் தில் இலங்கையின் பெருமளவு பிரதேசங்களில் கடும் காற்று வீசக் கூடுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-22)

# நாளாந்தக் கடமைகளில் பொலிஸார் கனரக ஆயுதங்களைத் தவிர்க்க முடிவு

கொழும்பு, மார்ச் 24

மக்களுடனான நட்பின் நகர்வாக பொலிஸார் தமது வழமையான நாளாந்தக் கடமை வேளைகளில் கனரக ஆயுதங்களின் பாவனையைத் தவிர்ப்பதற்கு காவல்துறை திணைக்களம் முடிவு செய்துள்ளது என்று பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

புதிய ஒழுங்குபடுத்தலின் கீழ் பொலிஸார் தமது நாளாந்த காவல் கடமைச் சுற்றுகளின் போதும், சோதனை நிலையங்களிலும் ரி.56 இயந்திரத் துப்பாக்கிகள் போன்ற கனரக ஆயுதங்களைக் கொண்டு செல்ல மாட்டார்கள்.

ஏனெனில் பிந்திய நிலைமையின்படி வன்முறைச் செயல்கள், பாதாள உலக நடவடிக்கைகள் மற்றும் ஆயுத முனைக் கொள்ளைகள் என்பன குறிப்பிடத்தக்க வகையில் குறைவடைந்துள்ளன என பொலிஸ்மா அதிபர் பாலசூரியா கூறியுள்ளார்.

பொலிஸ் திணைக்களம் பொலிஸாரை முற்றாகவே நிராயுதபாணிகளாக்கப் போகின்றது என்று இதனைக் கருதலாகாது. கனரக ஆயுதங்கள் தேவையேற்படுமெனக் கருதப்படும் சம்பவங்களின்போது அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படும்.

பொலிஸாருடன் பொதுமக்கள் பாதுகாப்புடனும் மற்றும் இயல்புடனும் உறவாடு வதற்குரிய உணர்வினை ஏற்படுத்துவதும் அத்துடன் பொது மக்கள் தத்தமது நாளாந்தத் தேவைகளுக்காக பொலிஸ் நிலையங்களுக்கு பயம் இன்றியும் எவரின் உதவி இன்றியும் வரச்செய்வதுமே எமது நோக்கமாகும் என்று பொலிஸ்மா அதிபர் பாலசூரியா மேலும் தெரிவித்தார்.

## கேள்வி கோரல்

எமது சங்கத்தில் பின்வரும் விவரப்படியான வெற்றுப் பொருள்கள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க விரும்புவோர் கிழமை நாள்களில் அலுவலக நேரத்தில் வெற்றுப் பொருள்களை பார்வையிட்டு கேள்விப்பத் v µ[ Po ¡ 31.03.2011 இற்கு முன் சமர்ப்பிக்கவும்

50 கிலோ மா பை 647 மிளகாய் சாக்கு 11
25 கிலோ மா பை 2065 ஏனைய சாக்கு 19
50 கிலோ ஏனைய பை 3320

பொது முகாமையாளர்,
சாவ. ப.நோ.கூ.சங்கம்.

(சி/57483) (45)

## தவக்காலச் சிந்தனை



## தினமும் சிறிது நேரம்

தினமும் சிறிது நேரம் உங்களுக்கென ஒதுக்குங்கள். காலையிலும் மாலையிலும் சிறிது நேரம் உங்கள் வாழ்வைப் பற்றிச் சிந்திக்க கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் வாழ்வை நிறைவானதாக்கவும் உங்கள் வெளிப்பாட்டை உச்சமாக்கவும் இது உதவிசெய்யும்.

இருவர் ஒன்றாக விறகு வெட்டப் புறப்பட்டனர். ஒருவர் காலையில் இருந்து மாலைவரை சளைக்காமல் வெட்டிக் கொண்டே இருந்தார். இரண்டாமவர் சிறிது ஓய்வெடுத்து ஓய்வெடுத்து வெட்டிக் கொண்டிருந்தார். தான் ஓய்வெடுக்கும் வேளையில் அவர் தனது கோடரியையும் தீட்டிக் கொள்வார். மாலைப் பொழுதில் இருவர் வெட்டியிருந்த விறகையும் ஒப்பிட்டு பார்த்த போது ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் வெட்டியவருடைய விறகைவிட ஓய்வெடுத்து வெட்டியவர் அதிகம் வெட்டியிருந்தார். ஓய்வுவேளையில் அவரது உடலும் மனமும் புத்துயிர் பெற்றதும் அவரது கோடரி கூர்மையாக்கப்பட்டதும் தான் அவரது வெற்றிக்குக் காரணம்.

இவ்வாறு தான் மனிதர் நாங்கள் ஓய்வு ஒழிச்சல் இல்லாது உழைத்து களைக்கின்றோம். ஆனால், எதுவும் மிஞ்சுவதாகக் காணவில்லை. ஆகவே நாங்கள் நாளாந்தம் சிறிது நேரம், மாதம் ஒரு நாள், வருடத்திலே சில நாள்கள் ஓய்ந்திருந்து எம்மைப் பற்றிச் சிந்திக்கவும் எமது முன்னேற்றங்கள் பின்னடைவுகளைச் சீர்தூக்கிப் பார்க்கவும் நேரம் செலவழிப்பது அவசியம்.

ஒவ்வொரு வருடமும் எமக்குக் கிடைக்கும் தவக் காலம் இதற்கு அரிய ஒரு சந்தர்ப்பமாகும். ஓரிரு அடையாள தவ முயற்சிகளோடு திருப்தி காணாது எம்மையே இக் காலத்தில் மீள் விசாரணைக்கு உட்படுத்துவோமெனில் நிறைந்த பயனைக் காண்போம். நாம் ஒரு புதுப்படைப்பாகவே மாறுவோம்.

அருட்பணி
ம.வி.இ.இரவிச்சந்திரன்

திருநெல்வேலி சாலினி உணவகம் -
(மது) சாலினி அரைக்கும் ஆலை நிறுவனத்தாரின்
மனம் மகிழ்ந்த வாழ்த்துக்கள்



கால நேரம் பாராது
கடமையே கண்ணெனக் கொண்டு
மக்கள் துயர் துடைத்து வரும்
கண்ணியவானான
எமது கிராம அலுவலர்
சிவசம்பு பாலசுப்பிரமணியம்

அவர்கள் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றுள்ளமையை வாழ்த்துவதுடன் மேலும் பல பதவிகள் பெற்று மண்ணில் நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துக்களுடன்:
நகுலேஸ்வரன் குடும்பம்
S. விக்கினேஸ்வரன் குடும்பம்
"மதி ஒளி"
உடுவில் தென்கிழக்கு,
இணுவில். (2339) (45)(20-22)

මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

22.03.2011

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2373

வெற்றி எழுத்து C
வெற்றி எண்கள் 3 9 5 6 1 5

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | C | 3 | 9 | 5 | 6 | 1 | 5 | ரூபா.23,101,724/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 3 | 9 | 5 | 6 | 1 | 5 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 9 | 5 | 6 | 1 | 5 | ரூபா. 100,000/= | பரிசுகள் 15 |
| 3 பரிசுகள் | | | | 5 | 6 | 1 | 5 | ரூபா. 10,000/= | பரிசுகள் 129 |
| 4 பரிசுகள் | | | | | 6 | 1 | 5 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1309 |
| 5 பரிசுகள் | | | | | | 1 | 5 | ரூபா. 100/= | பரிசுகள் 13514 |
| 6 பரிசுகள் | | | | | | | 5 | ரூபா. 20/= | பரிசுகள் 133568 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 3 | 9 | 5 | 6 | 1 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 14 |
| 8 பரிசுகள் | | 3 | 9 | 5 | 6 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 140 |
| 9 பரிசுகள் | | 3 | 9 | 5 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1356 |
| 10 பரிசுகள் | | 3 | 9 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13359 |
| 11 பரிசுகள் | C | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 53476 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 14,274,830.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு
Rs. 23,309,213.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

## மணி விழாக்காணும் ஆசிரியை

திருமதி சிவகுரு விஜயலட்சுமி
அவர்களின்
சேவை நலன் பாராட்டு
24.03.2011



அவனியில் பெற்ற
அரும் பணியாம்
ஆசிரியப் பணியை
ஆர்வமுடன் நீர் புரிந்து
ஓய்வுபெறும் இவ்வேளை
சேவை நலன் பாராட்ட
அதிபர், ஆசிரியர்களுடன்
கல்வி சாரா ஊழியரும்
மாணவரும் ஒன்றிணைந்து
மனம் நிறைந்து மலர் சொரிந்து
மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம் - உம்
ஓய்வு பெறும் காலம்
இனிதாகத்தான் மலர இறையாசி வேண்டி
இனிதாக வாழ்த்துகின்றோம்.

யா/ மீசாலை
விக்கினேஸ்வரா ம.வி., மீசாலை.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

(188) (45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பேச்சுக்களில் காலதாமதம் வேண்டாமே

❋ உள்ளூராட்சித் தேர்தல் தந்திருக்கும் படிப்பினையைப் புரிந்து கொண்டு, எதிர்க்கட்சிகள் அபிவிருத்திப் பணிகளில் அரசுடன் இணைந்து செயற்படுவதற்கு முன்வரவேண்டும்.

❋ ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் மற்றும் தற்போது நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் வரையிலும் மக்கள் வழங்கியுள்ள ஆணையை சகல அரசியல் கட்சிகளும் மதிக்க வேண்டும். குறிப்பாக எதிர்க் கட்சியினர் மதிக்க வேண்டும்.

❋ மக்கள் வழங்கியுள்ள இந்த ஆணை எமக்கும் எதிர்க்கட்சியினருக்கும் சிறந்த படிப்பினைகளைத் தந்துள்ளது. எமது அபிவிருத்தித் திட்டங்களுக்கு மக்கள் ஆதரவு தந்துள்ளனர். எங்கள் அபிவிருத்தித் திட்டங்கள் மீது அவர்கள் நம்பிக்கை வைத்துள்ளனர் என்பது இதன் மூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

❋ நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியை நாட்டில் வாழும் அனைத்து மக்களும் அனுபவிக்கும் வகையில் வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் அபிவிருத்தியை மேற்கொள்வோம்.

❋ அபிவிருத்திப் பணியில் எதிர்க்கட்சிகளையும் இணைத்துக் கொண்டு செயற்படவே விரும்புகிறோம்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நிதி அமைச்சர் என்ற வகையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே ஜனாதிபதி, அபிவிருத்திப் பணிகளில் இணைந்து செயற்பட வருமாறு எதிரணிகளுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

ஜனாதிபதியின் இந்த அழைப்பு அர்த்தம் நிறைந்தது. நாடளாவிய ரீதியில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் அரச தரப்பு அமோக வெற்றியீட்டி உள்ளது. அதற்கு முன்னர் நடைபெற்ற இரண்டு தேர்தல்களிலும் தென்னிலங்கை மக்கள் ஆளுங்கட்சியையே ஆதரித்தனர்.

பிந்திய தேர்தலில் - வாக்களிப்பு நாளில் - சகல அம்சங்களிலும் நேர்மையும் நேர்த்தியும் பூரணமாக இருந்தனவா என்பது குறித்த நிலைமை வெளிப்படவில்லை. எவ்வாறாயினும் தேர்தலில் தென்னிலங்கை மக்கள் அரசுக்கு பேராதரவு வழங்கினர் என்பதில் மாற்றமில்லை.

மூன்று தேர்தல்களிலும் தமக்குக் கிடைத்த வெற்றியை வைத்துக் கொண்டு, அரசு நினைத்தால் எதிர்க்கட்சிகளைப் பொருட்படுத்தாமலே அபிவிருத்திப்பணிகள் உட்பட்ட சகல மக்கள் நலத்திட்டங்களையும் முன்னெடுக்க இயலும். ஆனால் எதிர்க்கட்சிகளையும் அரவணைத்துக் கொண்டு செயற்பட ஜனாதிபதி முன்வந்திருப்பது பாராட்டத்தக்கதாகும், அவரது பரந்த மனப்பாங்கை, தாராளத் தன்மையை இது பிரதிபலிக்கிறது என்றும் கொள்ளலாம்.

எனினும், ஜனாதிபதியின் இந்த அழைப்பு உள் நோக்கம் கொண்டது, தமது கட்சிகளை முழுங்கி விடுவதற்கான, அழித்து விடுவதற்கான ஆரம்பம் என்று எதிர்க்கட்சிகள் கருதினால் அதனையும் தப்பெனக் கொள்ள முடியாது.தென்னிலங்கை அரசியல் கட்சிகள் தமது எதிர்காலத்தை புதைப்பதற்கான சூழ்ச்சி என்று கருதியும் மஹிந்தவின் இந்த அழைப்பை காதில் போட்டுக் கொள்ளாமலும் விடலாம்.

எது எப்படியோ, நாட்டினை அபிவிருத்தி செய்வதற்கு, அதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு நல்காவிடில் அவற்றின் மீது மக்கள் வெறுப்படைவர் என்ற சமன்பாடு உண்டு என்பதனையும் மறந்துவிடுவதற்கில்லை; மறைத்து விடவும் முடியாது.

மக்கள் அவர்தம் வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதற்கு, நாட்டில் அபிவிருத்தி அவசியம். தென்னிலங்கையைப் பொறுத்த வரை, அங்கு வாழும் மக்களுக்கான அரசியல் உரிமைகள் நிரம்பவே உண்டு.அதன் காரணமாக அவர்கள் அபிவிருத்தியில் மட்டும் அக்கறை காட்ட வேண்டும் என்பது ஏற்புடையதே.

ஆனால், இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளை இழந்தவர்களாகவே, அவை இந்நாட்டு அரசுகளால் அடுத்தடுத்துப் பறிக்கப்பட்ட நிலையிலேயே, வெறுமனே பெயருக்கு ஜனநாயக உரிமைகள் உடையவர்கள் என்ற வெளிப்பூச்சுடன் வாழ நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளார்கள்.

ஆகையால், வெறும் அபிவிருத்தி என்ற வட்டத்துக்குள் மட்டும் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள இயலாது. அரசியல் உரிமைகளுக்கு அடுத்தே அவர்கள் அபிவிருத்தியை நாடும் தேவை எழுந்துள்ளது. அதுவே அவர்களுக்கான அடிப்படைத்தேவை.

இதனைக் கருத்தில் கொண்டு, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வழங்குவதற்கு, அதற்கு முன்னுரிமை தந்து செயற்பட அரசு முன் வர வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தங்களின் சார்பில் பேச வல்லது- தங்களின் தலைமைத்துவத்துக்கு உரியது - என்று கடந்த வாரம் நடந்து முடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தீர்ப்பு வழங்கி உள்ளனர். பொதுத் தேர்தலுக்கு அடுத்து இரண்டாவது முறையாகவும் ஆணை வழங்கியுள்ளனர்.

தென்னிலங்கையில் ஆளும் கட்சி பெற்ற அமோக வெற்றி போன்று, தமிழ்ப் பகுதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அமோக வெற்றி கிடைத்துள்ளது.

ஆகையால், பேச்சுவார்த்தை என்ற பெயரால் காலம் கடத்துவது, தட்டிக் கழிப்பது என்ற சூட்சுமங்களைத் தவிர்த்து, தமிழர்களின் அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

இப்போதைய அரசின் முந்தியபதவிக்காலத்தில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பது என்பது வெறும் ஏய்க்காட்டும் கலை என்று அரசு நிரூபித்ததை தமிழ் மக்கள் இலகுவில் மறந்துவிட மாட்டார்கள்.

நாடாளுமன்றத்திலும் சரி, உள்ளூராட்சி சபைகளிலும் சரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே வடக்கு- கிழக்குத் தமிழ் மக்கள் தமது முதன்மைப் பிரதிநிதிகளாக சந்தேகத்துக்கு இடம் வைக்காமல் இனங்காட்டியுள்ளனர்.

அதனைக் கருத்தில் கொண்டு, கூட்டமைப்புடன் அரசு தாமதித்து ஆரம்பித்த பேச்சுக்களை துரிதகதியில் நடத்தி தமிழர்களுக்கு ஏற்புடைய ஒரு தீர்வுக்கு வழி செய்ய வேண்டும். தமிழ் மக்கள் சிறுபான்மையினர் என்பதால் அவர்களின் தலைகள் மீது மிளகாய் அரைக்கலாம், ஏய்க்காட்டலாம் என்று நினைப்பது தவறு. வழமை போல் அவர்களுடைய உரிமைகளை நசுக்கும் உத்தேசத்தைக் கைவிட்டு உருப்படியான தீர்வு ஒன்றை வகுக்கவேண்டும்.

அதற்கான திறந்த மனமும், நேர்மையும் இனியும் காலம் தாழ்த்தாது அரசிடம் பிறக்க வேண்டும்.

# சாதாரண தரப் பரீட்சையில் மோசடிகள் நடந்துள்ளன

### பரீட்சை ஆணையாளர் தகவல்

கொழும்பு, மார்ச் 24

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

பரீட்சைப் பெறுபேறுகள் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 6 ஆயிரத்து 430 பரீட்சார்த்திகளின் விடைத்தாள்கள் குற்ற விசாரணைத் திணைக்களத்திடம் கையளிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பரீட்சை விதிகளை மீறி நடந்துள்ளமை, பரீட்சையில் மோசடிகள் புரிந்துள்ளமை, அடையாளப்படுத்தல் ஆவணங்களில் மாற்றங்களைச் செய்துள்ளமை, வேறு நபர்களுக்காகப் பரீட்சையில் தோற்றியுள்ளமை, பரீட்சை நிலையங்களில் குழப்பங்களை விளைவிக்கும் விதமாக நடந்து கொண்டமை போன்ற காரணங்களின் கீழ் இந்த மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் இடை நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் மேலும் கூறியுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் மேற்படி மாணவர்கள் சம்பந்தமாகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் ஒரு சில மாணவர்களுக்கு அவர்களது வாழ்நாள் முழுவதிலும் பரீட்சைகளுக்குத் தடைவிதிக்கப்படக் கூடுமெனவும் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். (எ-22)

# கதிர் வீச்சு குறித்துப் பரிசீலித்த பிறகே உணவுகள் நாட்டுக்குள் அனுமதி

### சுகாதார அதிகாரிகள் தகவல்

கொழும்பு, மார்ச் 24

இறக்குமதி செய்யப்படும் எல்லாவித உணவுப் பொருள்களும் நாட்டுக்குள் அனுமதிக்கப்படும் இடங்களிலேயே கதிர் வீச்சுத் தாக்கம் இருக்கின்றதா என்பது குறித்து அவை பரிசீலிக்கப்பட்டே அனுமதிக்கப்படுகின்றன என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானிலிருந்து இலங்கை பெரும் அளவில் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதில்லை. ஆனால் அதன் அண்டை நாடுகளில் இருந்து உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்தப் பொருள்கள் கொழும்புத் துறை முகத்திலேயே பரிசீலிக்கப்படுகின்றன. உணவு மாதிரிகள் தேசிய அணுசக்தி அதி கார சபைக்கு அனுப் பிவைக்கப்படுகின்றன. அதிகாரசபையிட மிருந்து அனுமதி கிடைத்தவுடன் கொழும்புத் துறைமுகத்திலிருந்தே அவை விடுவிக் கப்படுகின்றன என்று அதிகாரிகள் தெரிவித் தனர்.

இதுவரை கதிர்வீச்சுத் தாக்கத்துக்குள்ளான.உணவுப் பொருள் எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லையென்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (ப)

### 1997 2009 வரையான அமைதி உடன்பாடு குறித்த ஆய்வு

# நோர்வே சுயேச்சைக்குழுவின் அறிக்கை மே நடுப்பகுதியில் வெளியாகும் எனத் தகவல்

கொழும்பு, மார்ச் 24

நோர்வீஜியன், சுதந்திர பகுப்பாய்வுக் குழு இலங்கையில் அமைதி உடன்பாடு அமுலில் இருந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக மேற்கொண்டு வரும் ஆய்வுகள் குறித்த அறிக்கை இந்த வருடம் மே மாதம் நடுப்பகுதியில் வெளியிடப்பட விருப்பதாகத் தெரியவருகின்றது.

இந்தக் குழுவில் நோர்வே அரசாங்கமோ கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகமோ சம்பந்தப்பட்டிருக்கவில்லை. இந்தப் பகுப்பாய்வுக் குழுவின் செயற்பாடுகள் யாவுமே சுயேச்சையானவை என்று பெயர் குறிப்பிட விரும்பாத நோர்வேத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையில் நோர்வே அனுசரணை மூலமாக 1997 இல் இருந்து 2009 ஆம் ஆண்டுவரை அமுலில் இருந்த அமைதி உடன்பாட்டுகாலத்தில் அந்த நாடு பெற்றுக் கொண்ட தனித்துவமான அனுபவங்களை இந்தக் குழு ஆராய்ந்து வருவதாகவும் அதனை ஓர் அறிக்கையாக வெளியிடவிருப்பதாகவும் தெரியவருகின்றது.

உலக நாடுகளில் ஏற்படும் உள்ளக முரண்பாடுகளைத் தவிர்த்துக்கொள்வது தொடர்பாக சர்வதேச விவாதங்களை நடத்துவதற்கு இந்தக் குழு வெளியிடவிருக்கும் அறிக்கை பயன்பட விருப்பதாகவும் கூறப்படுகின்றது. அமைதிச் செயற்பாடு அமுலில் இருந்த காலத்தில் நோர்வே அரசு வழங்கிய தாகக் கருதப்படும் (2.5 மில்லிய குரோனோர்) நிதி பற்றியும் இந்தக் குழு ஆராயவிருக்கின்றது என்று தமிழ் இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் குழுவின் நகல் அறிக்கை இந்த மாதம் நடுப்பகுதியில் இலங்கை அரசிடம் கையளிக்கப்படவிருப்பதாக அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது. (ப)

# கோபம்

நீ சினத்துடன் இருக்கும்போது நீ மகிழ்ச்சியுடன் இருக்க இயலாது. நீ சினத்தை விலக்கும்போது உனக்கு மகிழ்ச்சியும் ஆனந்தமும் கிடைக்கின்றன. சினம் மனிதனின் மிகப்பெரும் எதிரி. சினம் உனது உடல் நலம், செல்வம், மேன்மை அனைத்தையும் குலைக்கிறது. மனிதர்கள் உனது எதிரிகளாக மாறுகிறார்கள். சினம் காரணமாக மனிதன் ஒவ்வொன்றையும் இழக்கின்றான். வெல்லுவதற்குப் பதிலாகத் தோல்வியடைகிறான். அனைத்துப் பாவச் செயல்களிலும் ஈடுபடுகிறான். சினம் ஒருவனது எதிரி. தனக்குள் சினம் நிறைந்தவன் மகிழ்ச்சியோ, ஆனந்தமோ அனுபவிக்க இயலாது. சினம் வீட்டினுள் இருக்கும் பாம்பு போன்றது. உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால்வரை சினம் பரவியிருந்தால் புத்தி, நட்பு, சக்தி அனைத்தும் குறைகின்றன. 1-3 மாதங்களில் ஏற்றுக் கொண்ட உணவினால் ஏற்பட்ட வலிமை அனைத்தும் சினத்தின் சுழற்சியில் வீணாகிவிடுகின்றது. சினத்தின் காரணமாக இரத்தம் கெடுகிறது. அது பழைய நிலைக்கு வர 3 மாதங்களாகின்றது.

*(நன்றி: சாயி அருளமுதம்)*



சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
24 மார்ச் 2011 வியாழக்கிழமை

# அரச திணைக்களங்களில் நடைபெறும் கட்டட நிர்மாணப் பணிகள் திருப்தி

## ஆளுநர் சந்திரசிறி பாராட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 24

வடமாகாணத்திலுள்ள அரச திணைக்களங்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்களின் நிலைப்பாடு தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியினால் கடந்த செவ்வாய்க்கிழமை ஆராயப்பட்டது.

கட்டட நிர்மாணத் திணைக்களத்தின் வட மாகாணச் செயலாளர் எஸ். ராஜேந்திரன் தலைமையில் வடமாகாணத் திணைக்களத் தலைவர்கள், பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஒப்பந்தகாரர்கள் ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

யாழ்.பொது நூலகத்திலுள்ள வடக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது வடமாகாண ஆளுநர் கலந்து கொண்டு திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்டுவரும்வேலைத் திட்டங்களின் முன்னேற்றச் செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தார்.

ஒப்பந்தத் திகதிக்கு முன்னர் முடிக்கப்படாத ஒரு சில வேலைத் திட்டங்களுக்கு மேலும் ஓரிரு மாத கால அவகாசம் வழங்கி அந்த வேலைத் திட்டங்களைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் அது தவறின் தான் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் ஆளுநரால் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்போது மண், கிரவல் பற்றாக்குறை இருப்பதாக ஆளுநருக்கு ஒப்பந்தகாரர்களால்சுட்டிக் காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் வடமாகாணத்தில் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் மிகவும் திருப்தி கரமாக உள்ளன எனவும் ஆளுநரால் விதந்து பாராட்டப்பட்டது.

வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை திருப்திகரமான முறையில் முன்னெடுத்துச் செல்ல அர்ப்பணிப்பான ஈடுபாட்டைக் காட்டி அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்ட ஆளுநர் ஒரு சில வேலைத் திட்டங்களை விட ஏனைய அனைத்துத் திட்டங்களும் திருப்பதிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வேலைத் திட்டங்களை நேரில் சென்று பார்வையிடவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

(ஒ-14)

# மீசாலை இளம்யுவதி எங்கே?

தென்மராட்சி, மார்ச் 24

மீசாலை மேற்கைச் சேர்ந்த இளம்யுவதி ஒருவர் கடந்த திங்கட்கிழமை முதல் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீசாலை கிழக்கில் உள்ள வீடொன்றுக்கு 5ஆம் ஆண்டு மாணவர்களுக்கு கற்பிக்கச் சென்றபோது ரஜிதா (வயது-25) என்ற இந்த யுவதியே காணாமற் போயுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பிரஸ்தாப யுவதியின் தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது ஆண் ஒருவர் பேசியதாகவும் அந்த யுவதி கிளிநொச்சியில் வசிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் கடத்தப்பட்டுள்ளதாக மீசாலையில் பரவலாகப் பேசப்பட்டபோதும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

(ஒ-எ-207)

# வீதியில் சமாந்தரப் பயணம் இருவருக்கு அபராதம்

தென்மராட்சி, மார்ச் 24

வீதியில் சமாந்தரமாகச் சைக்கிளில் சென்ற இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸாரால் மட்டுவில் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட இருவரையும் செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் ஆஜர் செய்தபோது வழக்கை விசாரித்த நீதிவான் மா.கணேசராசா, இரு வரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்துத் தலா ஆயிரம் ரூபா வீதம் இருவருக்கும் அபராதம் விதித்தார்.

அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் தலா ஒரு மாதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ம-207)

# தொட்டியினுள் வீழ்ந்து மரணம்

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் கோபுர நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருந்தவேளை, சிமெந்து குழைப்பதற்கென தண்ணீர் எடுத்துவரச் சென்றிருந்தவர் தவறுதலாகத் தண்ணீர் தொட்டியினுள் வீழ்ந்து மரணமானார். இவருக்கு சிலவேளைகளில் வலிப்பு நோய் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் மட்டக்களப்பு களுதாவளையைச் சேர்ந்த சின்னத்தம்பி சுந்தரலிங்கம் (வயது-50) என்பவரே மரணமானார்.

அன்றைய தினம் காலையிலேயே மட்டக்களப்பிலிருந்து வந்து வேலையில் இணைந்து கொண்டார். இந்த நிலையில் சிமெந்து குழைப்பதற்கென 3 அடி உயரமான தொட்டியினுள் தண்ணீர் எடுக்கச் சென்றிருந்த போது இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

(ஒ-4)

## வாழ்வாதார உதவி...



பச்சிலைப்பள்ளி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் பயிற்சி பெற்ற 5 மாணவிகளுக்கு சுயதொழிலை மேற்கொள்வதற்காக ஆச்சி துணை அருளகத்தினால் தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. (ற)

# சைக்கிள் திருடன் மாட்டிக் கொண்டான்

சைக்கிள் திருட்டுக்களுடன் தொடர்புடைய நபர் ஒருவரை சுன்னாகம் பொலிஸார் நேற்றுமுன்தினம் பி.ப 2 மணியளவில் கைது செய்துள்ளனர்.

சுன்னாகம் சந்திப் பகுதியில் உள்ள இலங்கை வங்கியின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றைத் திருட முற்பட்ட போதே மேற்படி நபர் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

இதே வேளை, கடந்த வாரமும் இதே பகுதியில் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட ஒருவரைப் பொலிஸார் கைது செய்து விசாரித்ததில், அவரிடம் இருந்து 22 சைக்கிள்கள் மீட்கப்பட்டுள்ளன. இதே போன்று இவரும் பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவராக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

(ஒ-15-86)

# பாடசாலைகள், மாணவர் வீடுகளில் காய்கறித் தோட்டம் அமைக்கும் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

பாடசாலைகள், மாணவர்களின் வீடுகளில் காய்கறித் தோட்டம் அமைக்கும் கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்தைத் துரிதகதியில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் யாழ். பொது நூலகத்திலுள்ள வடமாகாண சபையின் கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, மாகாண விவசாய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கமலராஜ், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், கல்வி வலயங்களின் பணிப்பாளர்கள், விவசாய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்டோர் இதன்போது கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் 'இன்று பயிரிடுவோம் நாளை அறுவடை செய்வோம்' என்ற தொனிப்பொருளிலான வேலைத் திட்டத்தின் கீழ் நாட்டில் 500 மில்லியன் காய்கறி மரக்கன்றுகள் நடும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் சித்திரை வருடப் பிறப்பு தினத்தன்று இந்த வேலைத் திட்டம் நாடளாவிய ரீதியாக முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் காய்கறி மரக்கன்றுகள் மூலம் பாடசாலைகளிலும் பாடசாலை மாணவர்களின் வீடுகளிலும் தோட்டம் அமைக்கப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சு சுற்று நிருபம் மூலம் பாடசாலைகளுக்கு அறிவித்திருந்தது.

நாட்டில் காய்கறி விலை உயர்வைத் தடுக்கும் வகையிலேயே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளிலும் மாணவர்களது வீடுகளிலும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ள வழிவகைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

வலயக்கல்விப் பணிப்பாளர்கள் தாம் முன்னெடுக்கவிருக்கும் செயற்றிட்டம் குறித்து ஆளுநருக்கு விளக்கமளித்தனர்.

அடுத்தமாதம் 6 ஆம் திகதி 'இன்று பயிரிடுவோம் நாளை அறுவடை செய்வோம்' என்னும் தொனிப்பொருளிலான நிகழ்வை யாழ்ப்பாணத்தில் நடத்தி அன்றே பாடசாலைகளுக்கு மரக்கறி விதைகள், கன்றுகள் வழங்கவுள்ளதாகவும் அதன்போது ஆளுநரால் கூறப்பட்டது.

காய்கறித் தோட்டத்துக்கான உள்ளீடுகளை விவசாய அமைச்சின் ஊடாகப் பெற்றுத் தருவதாகவும் ஆளுநர் உறுதியளித்தார்.

(ம-14)

# கணித செயற்பாடு போட்டிகள்

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கிடையிலான கணித செயற்பாடுகள் போட்டி 2011 வலயத்தினால் நடத்தப்படவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் தெரிவு செய்யப்பட்ட கணித செயற்பாட்டுக்கான கேத்திர கணித ஆக்கங்களை எதிர்வரும் ஏப்ரல் ஐந்தாம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அபிவிருத்திப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

போட்டியில் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டிக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-209)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைமாதத்தில் பிரசவிக்கப்பட்ட குழந்தை சடலமாக திருநகரில் நேற்று மீட்கப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 24

குறைமாதத்தில் பிரசவிக்கப்பட்ட நிலையில் கடதாசியால் சுற்றப்பட்டுக் கிடந்த சிசுவின் சடலம் ஒன்று நேற்றுக் காலை யாழ்.திருநகர் இராஜசிங்கம் வீதியில் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி திய கெலிநாவலவுக்குக் கிடைத்த தகவலை அடுத்து நேற்றுக் காலை சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குடிமனைகளுக்கு மத்தியில் இடிந்த நிலையில் இருந்த வீடொன்றில் இருந்து சிசுவின் சடலத்தை மீட்டுள்ளனர்.

குறைமாதத்தில் பிரசவிக்கப்பட்ட அந்தச் சிசு கருவுற்று ஐந்து மாதங்கள் நிரம்பியிருந்ததாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

நேற்றுப் புதன்கிழமை அதிகாலை தினசரிப் பத்திரிகை ஒன்றினால் சுற்றப்பட்ட நிலையில் சிசுவின் சடலம் காணப்பட்டுள்ளது.





அந்தச் சிசுவின் சடலத்தை இடிந்த நிலையில் உள்ள வீட்டில் வைத்துவிட்டுச் சென்றது யார் என்று தமக்குத் தெரியாது எனப் பொலிஸ் விசாரணையில் அயல் வீட்டுக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பொலிஸார் நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி சகிதம் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

மரபணுப் பரிசோதனை மற்றும் பிரேத பரிசோதனைகளை மேற்கொள்ளவென சிசுவின் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் சம்பவ இடத்தைச் சூழவுள்ள பகுதிகளில் பெண் பொலிஸார் மூலம் சோதனை நடத்தி இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட நபரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிட்டார். (ம-14)

## பனம்பொருள் கொள்வனவில் மும்முரம்

வரணி, மார்ச் 24

வரணிப் பிரதேசத்தில் தற்சமயம் புளுக்கொடியல் மற் றும் ஒடியல் என்பவற்றைக் கொள்வனவு செய்வதில் வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணப் பிரதேச வியாபாரிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

சிறிய ஹன்ரர் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றில் பலர் இங்கு வருகை தந்து வீடு வீடாகச் சென்று ஒடியல் மற்றும் புளுக் கொடியல்களைக் கொள்வனவு செய்கின்றனர்.

நெல் அறுவடை வேலைகள் முடிவடைந்த பின்னரே இந்தப் பிரதேச மக்கள் பனம் கிழங்குகளை பிடுங்குவது வழக்கம்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெளியூர் வியாபாரிகளின் பிரசன்னம் அதிமாகக் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (எ-122)

## பாடசாலை நூலகங்களுக்கு நூல்கள் கையளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளின் நூலகங்களுக்கான புத்தகங்கள் கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ. ஏ. சந்திரசிறியினால் இந்தப் புத்தகங்கள் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்படவுள்ளன. எனவே பாடசாலை அதிபர்கள் தவறாது கலந்துகொண்டு பாடசாலை நூலகங்களுக்கான புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஒ-14)

# கசூரினா பீச்சில் மதுபோதையில் சேஷ்டை விட்ட நால்வர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 24

காரைநகர் கசூரினா கடற்கரையில் நீராடிக் கொண்டிருந்த வேளை இளைஞர்கள் சிலர் இளம் பெண் ஒருவருடன் அநாகரிகமாக நடந்துகொண்டனர்.

அதைத் தொடர்ந்து அந்தப் பெண்ணின் குடும்பத்தாருடனும் இளைஞர்கள் தகராறில் ஈடுபட்டனர்.

மதுபோதையில் இருந்த அந்த இளைஞர்கள் பெண்ணின் தந்தையைத் தாக்கவும் முற்பட்டனர் எனக் கூறப்பட்டது.

இது குறித்து அங்கு கடமையில் நின்ற பொலிஸாரிடம் சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் முறைப்பாடு செய்தனர்.

உடனடியாகப் பொலிஸாரால் குறிப்பிட்ட இளைஞர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

இந்த நால்வரையும் பொலிஸார் திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

யாழ். நகரைச் சேர்ந்த எம். காந்திக், ஆர். ராமதீபன், ரி.விஷ்ணுகாந், எம்.றமணன் ஆகிய நால்வரும் குற்றத்தை ஏற்க மறுத்தனர். அதை அடுத்து அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ஒ-93-323)

## சட்டவிரோத மணல் ஏற்றியவருக்கு அபராதம்

வேலணை அராலிச் சந்தியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிவந்தவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

ஊர்காவற்றுறைப் பொலிஸார் கடந்த 8 ஆம் திகதி மேற்கொண்ட வீதிச் சோதனை நடவடிக்கையின்போது சட்ட விரோதமாக மணல் ஏற்றிவந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

மணலைக் கைப்பற்றியதுடன் அதனை ஏற்றி வந்தவரையும் கைதுசெய்த பொலிஸார் கடந்த திங்கட்கிழமை ஊர்காவற் றுறை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கினை விசாரணை செய்த ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா 25 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ம-9-93)

# மணல் ஏற்றும் தொழிலில் மும்முரமாக ஈடுபடும் நலன்புரி முகாம் மக்கள்

கொடிகாமம், மார்ச் 24

கொடிகாமம் பிரதேசத்தில் இயங்கும் அல்லாரை, இராமாவில் இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாமில் வதியும் இளைஞர்கள், குடும்பத்தவர்கள் பலர் மணல் ஏற்றும் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கட்டுமானத் தேவைகளுக்கான மணல் விநியோகம் அம்பன் பிரதேசத்தில் கொட்டோடை எனும் பகுதியில் இடம்பெற்று வருகின்றது.

முன்னர் இந்தத் தேவைகளுக்கு மணல் ஏற்றும் பணிகள் மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில் இடம்பெற்று வந்தன. அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையை அடுத்து அம்பன் பிரதேசம் தெரிவுசெய்யப்பட்டு அங்கு மணல் விநியோகப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

தற்சமயம் அல்லாரை இராமாவில் நலன்புரி முகாமில் வதியும் இடம்பெயர்ந்த மக்களில் இளைஞர்கள், குடும்பத்தவர்கள் எனப் பலர் அம்பன் பகுதிக்கு மிதிவண்டிகளில் சென்று மணல் ஏற்றும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (எ-122)

## நோயாளரை பார்வையிடுவோர் வெயிலில் நிற்கும் அவலம்

யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிடச் செல்வோர் கொளுத்தும் வெயிலில் காத்துநிற்க வேண்டியுள்ளதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலைக்கு நண்பகல் 12 மணிக்கு முன்னதாகவே வருகை தருகின்ற பார்வையாளர்கள் 12.30 மணிக்கு உள்ளே அனுமதிக்கப்படும் வரை வெயிலில்நின்றுகாய நேர்வதாகத் தெரிவிக்கின்றனர்.

ஆகவே பிணர் இந்த விடயம் சம்பந்தமாக உடனடி நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்ற னர். (எ-160)

## மின்விளக்குகள் இல்லாமையால் இருளில் மூழ்கும் பிரதான வீதிகள்

ஊர்காவற்றுறை, மார்ச் 24

ஊர்காவற்றுறைப் பிரதான வீதிகளில் மின்விளக்குகள் இல்லாமையால் இரவுவேளைகளில் அந்த வீதியூடாகப் பிரயாணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இரவு வேளைகளில் அவசர தேவை கருதி மருத்துவமனைக்கோ அல்லது கடைத் தொகுதிகளுக்கோ செல்ல முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதியூடாக இரவு நேரங்களில் துவிச்சக்கர வண்டியில் பிரயாணம் செய்யும் மக்கள் எதிரேவரும் கனரக வாகனங்களின் வெளிச்சத்தைத் தாண்டிச் செல்லும் போது விபத்துக்கள் நேர்வதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிரதேச மக்களின் தேவையைக் கவனத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது. (எ-325)

# உரும்பிராயில் மீட்கப்பட்டன இலத்திரனியல் பொருள்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 24

உரும்பிராயில் சட்டவிரோத சாராய உற்பத்தியினைப் பிடிக் கச் சென்ற கோப்பாய்ப் பொலிஸார் குறித்த இடத்தில் இருந்து உரிமை கோரப்படாத பல்வேறு வகையான இலத்திரனியல் உபகரணங்களைக் கைப்பற்றி யாழ்.நீதிமன்றில் ஒப்படைத் துள்ளனர்.

உரும்பிராய் தெற்கில் உள்ள வீடொன்றில் சட்ட விரோத சாராயம் விற்பனை செய்யப்படு வதாகக் கிடைத்த தகவலை யடுத்து அங்கு பொலிஸார் விரைந்தனர்.

சாராயம் எதையும் மீட்காத நிலையில் அங்கு டிஸ் அன்ரனா, றேடியோ, கணினிசார் உப பொருள்கள் எனப் பல்வேறு இலத்திரனியல் உபகரணங்களைக் கைப்பற்றினர்.

பொருள்கள் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது, உரியவர்கள் 3மாத காலத்துக்குள் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் அவையாவும் அரச உடைமையாக்கப்படும் என்று யாழ். நீதி மன்றப் பணிப்பாளர் அ.வன்னியசிங்கம் அறிவித்துள்ளார். இதுதொடர்பாக மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுசுட்டானில் பிரதேச சபை அமைவது பிரதேசத்தின் வளர்ச்சிக்கு பேருதவியாகும்

*(நேற்றைய தொடர்ச்சி)*

கற்சிலைமடு பதிவுகாரராகக் கடமையாற்றி அகால மரணமடைந்த பி.நவரத்தினத்தின் இடத்துக்கு இதுவரை எவரும் நியமிக்கப்படாது தற்காலிகமாக உதவி அரச அதிபர் பிரிவில் பதிவுகள் நடைபெற்று வருகிறன.

அத்துடன் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் பிரிவுகள் மாங்குளம், மேல் பற்று வடக்கு ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

**வணக்கஸ்தலங்கள்**

வணக்கஸ்தலங்கள் பல மக்களின் வழிபாட்டுக்குரியனவாக அமைந்துள்ளன. வரலாற்றுப் புகழ்மிக்க ஒட்டுசுட்டான் தான் தோன்றீசுவரர் ஆலயம் ;இந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

**வீதிகள்**

ஏ-9 வீதியில் 22 கிலோ மீற்றர் தூரமும் பி-தர வீதிகளில் முல்லைத்தீவு, வெள்ளாங்குளம் வீதியில் சுமார் 33 கிலோ மீற்றர் தூரமும் தண்ணீரூற்று புளியங்குளம் வீதியில் 08 கிலோமீற்றர் தூரமும் இப்பிரதேசத்துக்குள் அடங்குவனவாகவுள்ளன.

மேலும் இந்த மாவட்ட மக்களின் வீட்டுத் தேவைக்கான ஓடு, செங்கல் என்பனவற்றை உற்பத்தி செய்யும் ஓட்டுத் தொழிற்சாலை கூளாமுறிப்பு என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

அத்துடன் கால்நடை வளர்ப்போரின் தேவைக்கேற்ப ஒட்டுசுட்டானில் கால்நடை வைத்தியரின் அலுவலகமும் பால் சேகரிப்பு நிலையமும் அமைந்துள்ளன. தபால் போக்குவரத்துக்கு ஏதுவாக ஒட்டுசுட்டான் மாங்குளம் ஆகிய இடங்களில் தபாற் கந்தோர்களும் திருமுறிகண்டி முத்துஜயன்கட்டு, கரிப்பட்டமுறிப்பு ஆகிய கிராமங்களில் உப தபாலகங்களும் நிறுவப்பட்டுள்ளன.

> ஒட்டுசுட்டானில் பிரதேச சபை அமைவது இந்தப் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும். இதனால் அந்த மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். இங்கு பிரதேச சபை அமைய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது மக்களின் அவா.

மக்களது பங்கீட்டுப் பொருள்களைப் பெறுவதற்காக முத்துஜயன்கட்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் அதன் 08 கிளை நிறுவனங்களும் கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டு மக்களுக்கான சேவையை வழங்கிவருகின்றன. பனம் பொருள் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை கொள்வனவு செய்ய பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கமும் கற்சிலைமடுவில் இயங்கிவருகிறது.

மேலும் இப்பிரதேசத்தில் வாழ்கின்ற விவசாயிகளின் தேவைகளுக்கேற்பவும் விவசாயத்தில் ஏற்படும் குறைபாடுகளைப் போக்கவும் ஒட்டுசுட்டான் முத்துஜயன்கட்டுகுளம் போன்ற இடங்களில் விவசாயப் போதனாசிரியர்களின் அலுவலகங்கள் அமைக்கப்பட்டு மக்கள் அதன் ஊடாக சேவைகளைப் பெற்று வருகின்றனர்.

அத்தோடு சிக்கனச் சேமிப்புப் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கச் சமாசமும் ஆரம்பிக்கப்பட்டு அதன் ஊடாகவும் மக்கள் பயன் பெற்று வருகின்றனர்.

இந்தகைய அலுவலகங்கள் எல்லாம் இருக்கின்ற ஒட்டுசுட்டான் பகுதிக்கெனத் தனியான பிரதேச சபை இயங்காது புதுக்குடியிருப்பில் அமைந்துள்ளதால் திருமுறிகண்டி, 45 கி.மீ. மாங்குளம், ஒலுமடு, பணிக்கன் குளம் கிராம மக்கள் 45 கி.மீ. தூரத்தைக் கடந்து புதுக்குடியிருப்பைச் சென்றடைய நேரிடுகிறது. அதுமட்டுமல்ல கூளாமுறிப்பு, ஒட்டுசுட்டான், கருவேலன்கண்டல், புளியங்குளம், முத்துஜயன்கட்டு, கற்சிலைமடு, பேராறு, பண்டாரவன்னி, சமளங்குளம், வித்தியாபுரம் போன்ற பல கிராமங்களில் உள்ள மக்களும் சுமார் 30 கி.மீ தூரத்தைக் கடந்து செல்ல வேண்டிய கட்டாய நிலையில் உள்ளனர்.

1990 ஆம் ஆண்டு ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பணிமனை திறக்கப்பட்டபோது பிரதேச சபை அமைப்பதற்கான கூட்டம் 2003 ஆம் ஆண்டு கற்சிலைமடு அ.த.க பாடசாலையில் கூட்டப்பட்டு முல்லைத்தீவுக் கச்சேரி உத்தியோகத்தர்களாலும் ஏனைய இப்பிரதேச அரச உத்தியோகத்தர்களாலும் நடத்தப்பட்டு இப் பிரதேச சபை அமைக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும் இன்றுவரை அது நடைபெறவில்லை.

**மு.சிவனேசன்**

ஒட்டுசுட்டான் பிரதேச சபை தனியாக அமைக்கப்படவேண்டுமென இப் பிரதேச மக்கள் மிகவும் ஆவலாக உள்ளார்கள்.

எனவே இப்பிரதேச சபையினை அமைக்க அரசு விரைவாக உடனடி நடவடிக்கை எடுத்துசச் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

(முற்றும்)

## உயர்தரத்துக்கு 142 பேர் தகுதி

வவுனியா, மார்ச் 24

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்திலிருந்து கடந்த வருடம் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய 151 மாணவர்களில் 142 பேர் உயர்தரத்துக்குத் தகுதி பெற்றுள்ளதாக அந்தப் பாடசாலை அதிபர் மேரி யோசப்பின் சந்தியாப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

ஒன்பது பேர் 9 ஏ சித்தியும் ஐந்து பேர் 8 ஏ சித்தியும் பெற்றுள்ளனர்.

9 ஏசித்தியடைந்துள்ளவர்களின் பெயர்கள் வருமாறு:

வி.காமத்திரி, ச.கீர்த்திகா, செ.பவித்திரா, வி.பிரமிளா, ச.தக்சனா, ப.துசாணி, வி.விஜிதா, ம.சம்பிரதா, செ.தனுஷா.

## மங்களகரமான ஆரம்பம்

நிகழும் விகிர்தி வருஷம் இன்று (24.03.2011) வியாழக்கிழமை மு.ப.11.30 மணிமுதல் பி.ப.1.21 மணிவரை உள்ள சுபவேளையில் திரு.தி.சிறிமோகனராஜ் (உரிமையாளர் - தேனு களஞ்சியம், திருநெல்வேலி) அவர்களால் புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் என்னும் முகவரியில்

**கலிபோர்னிய சிற்றி ரெஸ்டோரன்ட்**

(குடும்ப உணவகம்)

**CALIFORNIYA CITY RESTAURANT**

(FAMILY RESTAURANT)

**கோலாகலமாகத் திறந்து வைக்கப்படுகின்றது.**

எமது சேவைகள்

* சைனீஸ், இந்தியன் உணவு வகைகள்
* ஐஸ்கிறீம் வகைகள்
* சிக்கன், மட்டன் றோஸ்வகைகள்
* உங்கள் வீட்டின் மங்கள நிகழ்வுகளை எமது நிலையத்தில் கொண்டாடி மகிழலாம்.

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(சந்திக்கு அருகில்).
தொ.பே.: 0774710002

உரிமையாளர்.

## மணி விழா நாயகனை வாழ்த்துகின்றோம்

**திரு.செல்லக்கண்டு செல்வராஜா**





கிளிநொச்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி இன்று (24.03.2011) ஓய்வுபெறும் அரியாலை கலைமகள் வீதியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட **திரு.செல்லக்கண்டு செல்வராஜா** அவர்களை வாழ்த்துவதுடன் அவர் மேலும் சீரும் சிறப்புடன் வாழ ஸ்ரீசரஸ்வதி அம்பாளை வேண்டுகின்றோம்.

"வரத மாளிகை"
59, கலைமகள் வீதி,
அரியாலை.

கவிஞர் வே.ஐயாத்துரை
குடும்பத்தினர்.

## இதயபூர்வ நன்றிகள்

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் நீண்டகாலக் கல்விப் பாரம் பரியத்தைக் கொண்ட யா/மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையில் தரம் 10, 11 வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கி எம் பிரதேசத்தின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்த கௌரவ வடமாகாண ஆளுநர், வடமாகாணக் கல்விச் செயலாளர், வடமாகாண கல்விப்பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் ,வலயக் கல்விப்பணிப்பாளர், கோட்டக் கல்வி அலுவலர் மற்றும் இதர அதிகாரிகளுக்கும் இம் முயற்சியில் எமக்குத் துணை நின்ற யாழ்.மறை மாவட்ட ஆயர், குரு முதல்வர், மிருசுவில் பங்குத் தந்தை, அருட் சகோதரிகள், கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்ற ஊறுப்பினர் கௌரவ விஜயகலா மகேஸ்வரன், சமூக சேவையாளர் திரு.குமாரு சர்வானந்தா மற்றும் கிராம பிரமுகர்களுக்கும் எம் நன்றியை சமர்ப்பிக்கின்றோம்.

பெற்றோர்,
பழைய மாணவர்கள்,
நலன்விரும்பிகள்.

யா/மிருசுவில் றோ.க.த.க.
பாடசாலை, மிருசுவில்.

## காணி விற்பனைக்குண்டு

வலிகாமம் வடக்குப்பகுதி, கருகம்பனையில் அந்திராணை நிலப்பரப்பு 68 குளி 7½ யும் கருகம்பனையில் நெல்லெலை பரப்பு 5உம், கருகம்பனையில் நெல்லெலை பரப்பு 29குளி 8¾ நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் உள்ள வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 021 2221938.

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.கச்சேரிக்கு அண்மையில் A9 வீதிக்கு அருகில் புங்கங்குளம் வீதியில் 2600 சதுர அடி விஸ்தீரணம் உள்ள 4 அறை 2 குளியல் அறையுடன் கூடிய வாகன தரிப்பிட வசதியுடன் வீடு வாடகைக்கு உண்டு. அரசு/அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
விளம்பர இலக்கம் 4128 C/o உதயன்,
இல.361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செட்டிகுளம் நலன்புரி நிலையத்தில் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு

செட்டிகுளம், மார்ச் 24

வவுனியா, செட்டிகுளம் இடைத்தங்கல் முகாம்களில் மருத்துவ சேவைகள் சீரின்மையால் அங்குள்ளவர்கள் தமது பணத்தைச் செலவிட்டு வெளியிடங்களுக்குச் சென்று தமது மருத்துவ சேவைகளைப் பெறவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலவிவரும் அதிகரித்த வெப்ப கால நிலையால் முகாமில் வசிக்கும் மக்கள் பலர் அடிக்கடி காய்ச்சல், தடிமன், அம்மை போன்ற நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

### வெளி இடங்களுக்குச் சென்று சிகிச்சை

இந்த நோய்களுக்கு முகாமில் உள்ள மருத்துவ நிலையங்களில் சிகிச்சை பெறமுடியாதுள்ளதாகவும் முகாமுக்குள் இயங்கும் மருத்துவ நிலையங்களுக்கு மருத்துவர்கள் காலதாமதமாகவே வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தாம் இராணுவ அனுமதிபெற்று செட்டிகுளம் மாவட்ட வைத்தியசாலைக்கோ அல்லது வவுனியா பொது மருத்துவமனைக்கோ செல்ல வேண்டியுள்ளதாகவும் இதனால் தமக்கு பெருந்தொகைப் பணம் செலவாவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலை தொடர்பில் செட்டிகுளம் மருத்துவமனையைத் தொடர்பு கொண்டு கேட்டபோது முகாமில் இருந்து நாளொன்றுக்கு 100 வரையான நோயாளர்கள் பஸ்களில் வந்து சிகிச்சை பெற்றுச் செல்வதாகத் தெரிவித்தனர். (ஒ-10)

## நாகதம்பிரான் ஆலயத்தில் பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது

கிளிநொச்சி, மார்ச் 24

கிளிநொச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா இருவருடங்களின் பின்னர் இந்த ஆண்டு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமை விளக்கு வைத்தல் நிகழ்வு நடைபெற்று பொங்கலுக்கான பண்டங்கள் எடுத்து வரும் வகையில் தென்மராட்சி மீசாலை பண்டவரவடிக்கு ஏழு மாட்டு வண்டிகளில் பூசகர் அடங்கிய குழுவினர் சென்று அங்கு ஒருவாரம் தங்கியிருந்து கடந்த 18.03.2011 பண்டவரவடியில் இருந்து புறப்பட்டு இரவு பரந்தன் சந்தியினை வந்தடைந்தனர்.

பின்னர் அங்கிருந்து கண்டாவளை புளியடிச்சந்தியூடாக பிற்பகல் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தினைச் சென்றடைந்து இரவு பொங்கல் விழா நடைபெற்றது.

கடந்த காலங்களைப் போல் மக்களின் வருகை குறைவாகவே காணப்பட்டதாகவும் நேர்த்திக்கடன்களுக்காக சேவல்கள் மற்றும் ஆட்டுக்கடா என்பனவும் இந்த வருடம் குறைவாகவே வந்துள்ளதாகவும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்புக் கடமையில் வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, முழங்காவில் ஆகிய இடங்களில் கடமையாற்றிய 600 இற்கும் மேற்பட்ட பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.

ஆலயத்துக்குச் செல்வோர் புளியம்பொக்கணைச் சந்தியூடாகச் சென்று தர்மபுரம் ஊடாக வெளியேறும் வண்ணம் இருவழிப்பாதைகள் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தன.

அத்துடன் பல்வேறு இடங்களில் இருந்து இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. (க-6)

## ஹலோ ட்ரஸ்ற்றின் குருதிக் கொடை

கிளிநொச்சி, மார்ச் 24

ஹலோ ட்ரஸ்ற் கண்ணி வெடியகற்றும் பிரிவினர் கிளிநொச்சி வைத்தியசாலையின் இரத்த வங்கியில் இரத்த தானம் செய்துள்ளனர்.

முதல் கட்டமாக இந்தக் கண்ணிவெடியகற்றும் பிரிவைச் சேர்ந்த 15 பேர் இரத்ததானம் செய்துள்ளதாகவும் மேலும் மாதாந்தம் 15 பேர் இரத்ததானம் செய்யவுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கிக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி டாக்டர் இ.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

ஹலோ ட்ரஸ்ற் நிறுவனப் பணிப்பாளர்களின் இந்த உயிர் காக்கும் உயரிய செயற்பாட்டைப் பலரும் பாராட்டியுள்ளதாகவும் தெரியவருகின்றது. (க)

### நீக்கமற நிறைந்திருப்பவர்...



தீபம் ஒளிரட்டும்: முல்லைத்தீவு மாவட்டம் ஒலுமடு தமிழ் வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகளின்போது பிரதம விருந்தினர் குத்துவிளக்கேற்றி போட்டிகளை ஆரம்பித்து வைக்கின்றார்.

# பெண்கள், சிறுவர் பிரச்சினை குறித்து வவுனியாவில் விசேட கலந்துரையாடல்

வவுனியா, மார்ச் 24

வவுனியா மாவட்டத்தில் உள்ள செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்ந்த பிரதேசங்களில் கடந்த 14 ஆம் திகதி மகளிர் தினத்தையொட்டி ஏற்பாடுசெய்யப்பட்ட விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிராக நடைபெறும் வன்முறைகள் தொடர்பாக அரச சார்பற்ற பிரதிநிதிகள் ஊடாகத் தெளிவாகக் கலந்துரையாடப்பட்டு எதிர்காலத்தில் இவற்றைக் குறைப்பதற்கு அல்லது தடுப்பதற்குப் பல்வேறு விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளுவது தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் இளவயதுத் திருமணங்கள் அதிகமாகக் காணப்படுவதாகவும் அத்துடன் ஆண்கள் மதுபாவனை, புகைத்தல் என்பனவற்றுக்கு அடிமையாகும் வீதம் கூடுதலாக உள்ளதாகவும் இதன் காரணமாகவே வீட்டு வன்முறைகள், குடும்ப வன்முறைகள் ஏற்பட்டு பெண்கள், சிறுவர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் பெண்கள் அதிகளவில் விவசாயக் கூலி வேலைக்குச் சென்று பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் தமது சிறார்களை வளர்த்து வருவதாகவும் கணவனால் கைவிடப்பட்ட பல பெண்கள் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்வதாகவும் இவர்களுக்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவித்திட் டங்கள் மிகவும் குறைந்தளவில் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் செட்டிகுளப் பொலிஸ் பிரிவிலுள்ள சிறுவர்கள், பெண்கள் வன்முறைகளைக் கண்காணிக்கும் பிரிவின் உத்தியோகத்தர்கள், சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள அதிகாரிகள், வவுனியா செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர்கள், பெண்களுடன் கடமை புரியும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு மக்களின் பிரச்சினைகளை இனம் கண்டதாகவும் தெரியவருகிறது. (க-501)

# ஆனையிறவில் இறால் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி, மார்ச் 24

கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களைச் சேர்ந்த மீனவர்கள் இம்மாதம் 25 ஆம் திகதியிலிருந்து ஆனையிறவு கடல் நீரேரி, கல்லாறு கலப்புக் கடல் நீரேரி ஆகிய கடல் பரப்புகளில் இறால் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த எட்டு மாதங்களுக்கு முன்பு கல்லாறு, தட்டுவன்கொட்டி, கண்டாவளை, கரைச்சி ஆகிய பகுதிகளில் மீள்குடியமர்த்தப்பட்ட நூற்றுக்கணக்கான மீனவ குடும்பங்கள் இறால் பிடிப்பதற்கு அனுமதி கிடைக்காததால் வீடுகளில் முடங்கிக்கிடந்தன.

இதனால் இவர்கள் வருமானமின்றி பெரிய நிதி நெருக்கடியில் வாழ்ந்து வந்தனர்.

மேற்கூறப்பட்ட கடல் நீரேரியிலுள்ள இறால் இனங்கள் தற்பொழுது சந்தைப் படுத்தக்கூடிய வகையில் வளர்ச்சியடைந்துள்ளதால் இறால் பிடிப்பதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாகச் சமாசத் தலைவர் நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

மூன்று மாதங்களுக்கும் மேலாக இறால் பிடிப்பதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதால் வறுமை நிலையில் வாழ்ந்து வந்த மீனவ குடும்பங்கள் நிம்மதியாக வாழ்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த மாதம் 25 ஆம் திகதி நடைபெறும் இந்த வைபவத்தில் அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொள்வார்கள். (க-115)

## நிதி ஒதுக்கீடு முடிவடைந்ததால் கடன் விண்ணப்பங்கள் நிறுத்தம்

கிளிநொச்சி, மார்ச் 24

தற்போது இரண்டு வகையான வீடமைப்புக் கடன் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும் உரிய நிதி ஒதுக்கீடுகள் முடிவடைந்ததால் அரச உத்தியோகத்தர் அல்லாதவர்களுக்கான கடன் விண்ணப்பங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் மு.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

உதயன் பத்திரிகையில் 19.03.2011 இல் வெளிவந்த 'கடன் விண்ணப்பங்கள் நிறுத்தம், காத்திருந்த பலர் ஏமாற்றம்' என்ற செய்தி தொடர்பாகவே அவர் இந்த விளக்கத்தை அளித்துள்ளார். அரச உத்தியோகத்தர்கள் அதிக பட்சமாக 5 லட்சம் ரூபாவும் ஏனையோர் 2 லட்சம் ரூபாவும் வீடமைப்புக் கடனாகப் பெறமுடியும்.

எனினும் அரச உத்தியோகத்தர் அல்லாதவர்களுக்கான நிதி ஒதுக்கீடு முடிவடைந்துள்ளதால் அவர்களுக்கான கடன் வழங்கல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அரச உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் கடன்களைப் பெறமுடியுமென்றார் அவர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

மத்திய மாகாணம் உட்பட நாடெங்கும் மண்சரிவு ஏற்படக் கூடிய வாய்ப்புள்ள இடங்களை இனம்கண்டு அங்கு ஏற்படக் கூடிய அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற் கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

கண்டி, நுவரெலியா, பதுளை, மாத்தளை மாவட்டங்களில் மண்சரிவு ஏற்படக் கூடிய இடங்கள் ஏற்கனவே இனங் காணப்பட்டுள்ளன. மழைக் காலத்தில் அந்தப் பகுதிகளில் ஏற்படக் கூடிய அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்காக சரியக் கூடிய மண், பாறைகள் போன்றவற்றை அகற்றவும் ஒழுங்கற்று ஓடும் நீரை சரியான வழியில் திசை திருப்பவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பணிகள் மூன்று கட்டங்களில் நிறைவேற்றப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனர்த்த நிவாரண முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர இந்தப் பணிகள் தொடர்பாக அமைச்சரவைக்கு சமர்ப்பித்த பிரேரணை அங்கீகரிக்கப்பட்டது.

இந்தப் பணிகளை இயன்ற வரையில் துரிதப்படுத்தி எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களைக் குறைப்பதில் அரசு தீவிர அக்கறை செலுத்தி வருவதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

(204-5)

# விருப்பு வாக்கில் மோசடி நடந்ததாக ஆளும் தரப்பு வேட்பாளர் போராட்டம்

திருகோணமலை, மார்ச் 24

திருகோணமலை, கோமரங்கடவல பிரதேச சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாகப் போட்டியிட்ட வேட்பாளர் தனது விருப்பு வாக்குக்கு மோசடி செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவித்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பாகப் போட்டியிட்ட கோமரங்கட வல பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் யூ. முனசிங்கவே கோமரங்கடவல புத்தர்சிலைக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அவரின் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

(204)

# மது போதையில் காணப்பட்ட கொன்ஸ்டபிள் கண்டியில் கைது

கண்டி, மார்ச் 24

கண்டியில் மதுபோதையுடன் நடமாடிய பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கண்டி பஹிரவகந்தப் பிரதேசத்திலுள்ள பொலிஸ் மா அதிபரின் வீட்டுக்குக் காவலுக்காக நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் தனது வேலைக்குச் செல்லாது கண்டி நகரில் மதுபோதையுடன் நடமாடியபோதே கைது செய்யப்பட்டுள்ளார்.

மதுபோதையில் காணப்பட்ட இவர் ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டார். இதனாலேயே இவர் கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் கண்டி நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

(204)

# கிழக்கின் உதயம் திட்டத்தின் கீழ் ஒளி பெறுகின்றது கிண்ணியா

திருகோணமலை, மார்ச் 24

கிழக்கின் உதயம் வேலைத் திட்டத்தின் கீழ் கிண்ணியா பிரதேசத்தில் பல கிராமங்களுக்கு மின்ஒளியூட்டும்வேலைத் திட்டங்களை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் ஆரம்பித்து வைத்துள்ளார்.

இந்தத்திட்டத்தின் கீழ் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட குறிஞ்சாக்கேணி, சின்னக் கிண்ணியா, மதினா நகர், கச்சக்கொடித்தீவு, மாஹாத் நகர் ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரின் பணிப்புரைக்கமைய சுமார் 1100 மீற்றர் தூரத்திற்கு இந்தக் கிராமங்களுக்கு இலங்கை மின்சார சபையின் அனுசனையுடன் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபீக், இணைப்புச் செயலாளர் எம்.எச். எம்.சனூஸ், பிரதேச மின்சார பொறியியலாளர் அரபாத் அப்துல்லா உட்படப் பலர் கலந்துக் கொண்டனர்.

(204)


## கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்களத்தில் கடற்றொழில் பரிசோதகராகக் கடமையாற்றும் நடேசன் மகேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் செல்லையா நடேசன்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

உதவிப் பணிப்பாளரும் உத்தியோகத்தர்களும்
கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம்
மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்.


# ஆயுத முனையில் இளைஞன் கடத்தல்

நுவரெலியா, மார்ச் 24

தனமல்வில நகரில் உள்ள ஹொட்டல் ஒன்றுக்கு கடந்த திங்கட்கிழமை(21) இரவு 9.30 மணி அளவில் கெப் வாகனமொன்றில் வந்த இனந்தெரியாத குழுவினர் அங்கிருந்த இளைஞர் ஒருவரை ஆயுத முனையில் கடத்திச் சென்றுள்ளதாக தனமல்வில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனமல்வில காமினிபுரத்தைச் சேர்ந்த தம்மிக சமிந்த எனும் இளைஞரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளார்.

இவர் தனமல்வில எம்பிலிபிட்டிய வீதியில் அமைந்துள்ள ஹொட்டல் ஒன்றில் உணவருந்தச் சென்ற சமயமே கடத்தப்பட்டுள்ளார். இந்த நபரைப் பற்றிய எவ்வித தகவலும் இதுவரை வெளியாகவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தனமல்வில பொலிஸ் பொறுப்பதிகாரி ஹேமச்சந்திரவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

(204-5)


## 38 வருடங்களாக O/L பரீட்சைகளில்

சிறந்த பெறுபேற்றுச் சாதனை படைத்துவரும்
ஒழுங்கு, கட்டுப்பாடுகள் நிறைந்த நிறுவனத்தில்

O/L DAY CLASS

மார்ச் 30ல் ஆரம்பமாகின்றது
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன

The Express Institute
Irupalai, Kopay. -அதிபர்

## ஆதவன் அளவெட்டி

2013 A/L

- தமிழ் -கீர்த்திராஜன்
- இ.நாகரிகம் -ரமணம்
- அரசியல் -அசோக்
- வரலாறு - R.R.ஆனந்தன்
- நாடகம் :- ரமேஸ்
- புவியியல் :- செல்வா
- அளவையியல் :- T.T.நீதன்
- பொருளியல் :- S.S.சிறி
- வர்த்தகம் :- நந்திஸ்
- கணக்கீடு :- D.Sam

ஆரம்பம்:-26.03.2011 - சனி 4.00மணி

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி ராகினி கதிர்காமத்தம்பி

(ஆசிரியை, வவுனியா திருஞான சம்பந்தர் வித்தி)

மண்மகிழ
23.04.1978

கண் நெகிழ
31.03.2009

திதி: பூர்வபக்க பஞ்சமி

மாளிகையின் ஒளி விளக்கே!
நீ அணைந்து ஈராண்டு ஆனதம்மா!
ஈராண்டென்ன ஈரேழு ஆண்டுகளாயினும்
மறப்போமா உன்னை அன்பு மகளே!
களிப்புடன் வாழ்ந்த நாள்கள்
கனவாகி விட்டதம்மா....
ஆழியில் அகப்பட்ட துரும்பாகி விட்டோமே
ஆழமது புரியவில்லை - போன
வழியது தெரியவில்லை
விழியது உறங்கவில்லை - உந்தன்
மொழியது கேட்கவில்லை
கண்ணீரில் சுடரேற்றி - ஆத்மா
சாந்தி பெற இறைஞ்சுகிறோம்!
பள்ளி கொள்ளும் பரந்தாமன்
பாவை யுன்னைக் காத்திடட்டும்!!

நாகப்பா வளவு,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை. (108636)

பிரிவுத் துயரினால் வாடும்
தாய், தந்தை, சகோதரர்கள்,
மைத்துனி மற்றும் உறவினர்.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1981ஆம் ஆண்டு அச்சுவினி நட்சத்திரம் சொந்தக் கடை வைத்திருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் உள்ளன. உடன் தொடர்புகொள்ளவும்

தொடர்பு: 078 5259088

## வீடு காணி விற்பனைக்கு

கஸ்தூரியார் வீதியில் 1¼ பரப்புக் காணியுடன் சகல வசதியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 00919940210994

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில்
17 . 07 . 1951



விண்ணில்
22 . 02 . 2011

அமரர் இராசதுரை ஜெயராசா

கடந்த 22.02.2011 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் இராசதுரை ஜெயராசா அவர்களது வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (24.03.2011) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறவுள்ளன.

அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு தொடர்ந்து இடம்பெறவுள்ள மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

தொலைபேசி இல: 0775183114

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையற்ற பட்டதாரிகள் ஏமாற்றப்படுகின்றனர்; உடன் தீர்வுகாண தொழிற்சங்கம் வலியுறுத்து

அம்பாறை, மார்ச் 24

''வேலையற்ற பட்டதாரிகள் தமது நியமனம் தொடர்பாகத் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்ட வண்ணமேயுள்ளனர். ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதுபோல் பட்டதாரிகளின் நியமனம் தொடர்பாகவும் விரைந்து தீர்வுகாண அதிகாரிகள் முன்வர வேண்டும்''.

இவ்வாறு, இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளின் தொழிற்சங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளின் தொழிற்சங்கம் சார்பில், அதன் செயலாளர் எம்.ஹுசைன் முபாறக் இந்த அறிக்கையை விடுத்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

வேலையற்ற பட்டதாரிகள் தமது நியமனம் தொடர்பில் கடந்த ஐந்து வருடங்களாகப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலத்துக்குக் காலம் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டும் நிர்வாகப் பிரச்சினைகளெனக் கூறப்பட்டும் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருவதால் பட்டதாரிகள் விரக்தியும், மன வேதனையும் கொண்ட நிலையில் காணப்படுகின்றனர்.

ஒவ்வொரு வருடமும் 'அடுத்த வருடத்தில் நியமனம் வழங்குவோம்' எனக் கூறி ஏமாற்றுவதனால் ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும் நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கும் இந்தப் பட்டதாரி இளைஞர் சமுதாயம் தள்ளப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகளிடம் பட்டதாரிகளின் நிலமையை எடுத்துக் கூறினால், ஒருசிலரைத் தவிர அதிகமானோர் கண்துடைப்புக் காரணங்களைக் கூறி அக்கறையற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

தமக்கு அரச துறைகளில் நியமனம் கிடைக்காதா? என்ற ஏக்கத்துடன் பட்டதாரிகள் ஆறு வருடங்களாகக் காத்திருக்கும் துர்ப்பாக்கியம் குறித்து அரசியல்வாதிகளும் உயரதிகாரிகளும் கவனம் கொள்ளாதது கவலைக்குரிய விடயமாகும்.

யுத்த காலத்திலும்கூட வட, கிழக்கிலுள்ள பட்டதாரிகள் தமது கவனங்களை தேவையில்லாப் பிரச்சினைகளுக்குள் உட்புகுத்தாமல், நாட்டின் வளர்ச்சிக்காகத் தமது கல்வித் திறனைப் பயன்படுத்த வேண்டுமென்ற நோக்குடனிருந்த பட்டதாரிகளின் எண்ணங்கள் அரசின் பாராமுகம் காரணமாகச் சிதைவடைந்துள்ளன.

இந்த நாட்டில் மீண்டுமொரு நிம்மதியற்ற சூழ்நிலை உருவாகாமல் இருக்க வேண்டுமென்றால் பட்டதாரிகளின் தொழிலில்லாப் பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வை முன்வைப்பதால் மட்டுமே முடியும்.

பட்டதாரிகளைப் புறந்தள்ளிவிட்டு, அவர்களின் பிரச்சினைகளை ஓரங்கட்டி விட்டு, ஒழுங்குமுறையில் அமைக்கப்பட்ட நியமன முறைகள் பின்பற்றப்படாமல் நியமனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனால் அனேகமான வேலையற்ற பட்டதாரிகள் 45 வயதைத் தாண்டவேண்டிய நிலைமைக்கும் உள்ளாக்கப்பட்டு அவர்களது வாழ்க்கையே கேள்விக்குறியாகும் துயரநிலையும் ஏற்பட்டுள்ளது.

வட, கிழக்கைப் பொறுத்தவரையில் பெரிய நிறுவனங்களோ, கம்பனிகளோ இல்லாத நிலையில் பட்டதாரிகளுக்குப் பொருத்தமற்ற காரணங்கள் கூறப்பட்டு காலங்கடத்தப்படுவது பட்டதாரிகள் தொடர்பில் திட்டமிடப்பட்ட முடிவுகள் எவையும் எட்டப்படவில்லையென்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

மக்கள் சபை நியமனங்களுக்காக இருமுறை பட்டதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, இடைநிறுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகூட ஒருவருடத்தை எட்டுவதற்கு இன்னும் இரண்டொரு மாதங்களே உள்ளன.

இந்த விடயங்களில் பொறுப்பு வாய்ந்த அரசியல்வாதிகள், அரச உயர்மட்டத்தினர் கவனமும் சிந்தனையும் கொள்ளவேண்டும்.

ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதுபோல், பட்டதாரிகளின் நியமனம் தொடர்பாக இழுத்தடிக்கப்பட்டுவரும் பிரச்சினைக்கும் காலம் தாழ்த்தாது சம்பந்தப்பட்டோர் தீர்வு வழங்க முன்வரவேண்டும் என்று அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (204-30)

## பாலம் திறப்பு...



மக்கள் பாலம் என அழைக்கப்படும் பாலமொன்று கல்முனை மக்களால் அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது. (204)

# பணத்துக்கான வேலை கல்முனையில் ஆரம்பம்

அம்பாறை,மார்ச்24

பணத்துக்கான வேலைத்திட்டம் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 29கிராம சேவகர் பிரிவுகளிலும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தில் இந்த வேலைத் திட்டத்துக்காகக் கிடைத்த 2,800 மனித நாள்கள் வேலைத்திட்டத்தில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுத் தற்போது தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியாது அன்றாடம் கூலித்தொழில் செய்பவர்கள் உள்வாங்கப்பட்டு ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு 500 ரூபாய் வீதம் வழங்கப்படுவதுடன், காலை 8 மணி முதல் மாலை 2 மணிவரை வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கல்முனை தமிழ்ப் பிரதேச செயலாளர் க.லவநாதன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வில் கிராம உத்தியோகத்தர், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். (204)

# கொட்டகலை வைத்தியசாலையில் மருந்து வளங்கள் குறித்து தெளிவின்மை

## மக்கள் தெரிவிப்பு

நுவரெலியா, மார்ச் 24

கொட்டகலை அரசினர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் வழங்கப்படும் மருந்து வகைகளை எவ்வாறு உட்கொள்ள வேண்டும் என்பது பற்றி சிறுவர், முதியோர்களுக்கு விளக்கம் தரு வதில்லை என அங்குள்ள பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால், சிறுவர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இது சம்பந்தமாக மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதன் ஊடாக மத்திய மாகாண சுகாதார அமைச்சுக்கு முறைப்பாடு செய்யப்பட்டது என அறிவித்துள்ளனர்.

மத்திய மாகாண சுகாதார அமைச்சு உடன் நடவடிக்கை மேற்கொண்டு, முறையாக மருந்துகள் உட்கொள்ளும் விதம் பற்றி வெளிநோயாளர் பிரிவு மக்களுக்கு அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# மாணவர் தலைவனால் தாக்கப்பட்ட மற்றொரு மாணவன் படுகாயம்

மாத்தளை,மார்ச் 24

மாத்தளை, உக்குவளை அஜ்மீர் மத்திய கல்லூரியில் நேரம் தாமதமாகி பாடசாலைக்குச் சமுகமளித்த மாணவன் ஒருவனுக்கு சிரேஷ்ட மாணவத் தலைவனால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தான். தண்டணை எனத் தெரிவித்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த மாணவன் மாத்தளை வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாத்தளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் பல இந்தப் பாடசாலையில் இடம்பெற்று வருவதுடன், இது தொடர்பில் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பதில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. (204)

# குருநாகல் மாவட்டத்தில் கிருமிகளால் தென்னைப் பயிர்ச் செய்கைக்கு ஆபத்து

குருநாகல் மாவட்டத்தில் மைட்டா என அழைக்கப்படும் ஒரு வகைக் கிருமிகளின் தாக்கத்தால் தென்னைப் பயிர்ச்செய்கைக்கு அதிக சேதம் ஏற்படத் தொடங்கியுள்ளது எனத் தென்னந்தோட்ட உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

பண்டுவஸ்நுவர, பிங்கிரிய, வாரியபொல, குளியாப்பிட்டிய, நிக்கவரெட்டிய, கொபஸ் தனே, கட்டுகம்பொல, தம்பதெனிய உள்ளிட்ட பல பிரதேசங்களில் இந்தநிலை தோன்றியுள்ளது.

முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தென்னை மரங்களைத் தாக்கும் இந்தக் கிருமிகளால் அதிக அழிவு ஏற்பட்டு வருகின்றது.

இந்த நிலைமை எல்லை மீறுவதற்குள் இந்தக் கிருமிகளின் தாக்கத்துக்கு எதிர்ப்பு மருந்துகள் விசிறப்பட வேண்டும் எனத் தென்னந் தோட்ட உரிமையாளர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். (204-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுடன் பேச்சு நடத்தியதாலேயே கூட்டமைப்புக்கு 12 சபைகள்



## வாசுவின் புதிய கண்டுபிடிப்பு

கொழும்பு, மார்ச் 24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேச்சு நடத்துவதால் தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கையிலேயே தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களித்து 12 உள்ளூராட்சி சபைகளில் வெற்றிபெறச் செய்துள்ளனர் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் காலை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்:

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் பெரு வெற்றி பெற்றுள்ளது. ஐ.தே.கட்சி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளின் வாக்குப் பலம் வெகுவாகச் சரிந்துள்ளது. மக்களுக்காக இவர்கள் முதலைக் கண்ணீர் வடித்ததை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை - என்றார். (ஒ-சி)

### 62 வீதத்தினர் இம்முறை உயர்தரத்துக்குச் சித்தி

# பரீட்சை முடிவுகளின் மறுபரிசீலனை; ஏப். 8 வரை விண்ணப்பிக்க முடியும்

கொழும்பு, மார்ச் 24

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் தொடர்பாக மறு ஆய்வுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் ஏப்ரல் 8 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு தபால்பெட்டி இல. 1503 என்ற முகவரிக்கு மறு ஆய்வுக்கான விண்ணப்பங்களை அனுப்பலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பங்களை கல்லூரி அதிபரின் இணைப்புக் கடிதம் ஒன்றுடன் அனுப்பலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 62 வீதமானவர்கள் உயர்தரத்துக்குச் சித்தி பெற்றிருப்பதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். (ப)



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் விமர்சகருமான இயன் சப்பல் தனது காலிலும் கையிலும் ஏற்பட்டிருந்த பாதிப்புகளுக்காக சிகிச்சை பெற உதவிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று முன்தினம் அலரிமாளிகையில் நன்றி தெரிவிக்கின்றார். ஜனாதிபதியின் ஏற்பாட்டில் ஜனாதிபதியின் பிரத்தியேக வைத்தியர் ஈலியந்த வைட் இவருக்கு சிகிச்சையளித்தது குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானிய மக்களுக்கு நாடாளுமன்றில் நேற்று முன்தினம் அனுதாபம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட ஜப்பான் நாட்டு மக்களுக்கும் அந்த நாட்டு அரசுக்கும் அரசின் சார்பிலும், எதிர்க்கட்சிகளின் சார்பிலும் இணைந்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

அரசின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், எதிர்க்கட்சிகளின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தனித்தனியாகத் தமது அனுதாபங்களையும் ஆதரவையும் வெளிப்படுத்தி உரையாற்றினர்.

**வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்:-**

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட ஜப்பானுக்கு இலங்கை அரசு ஒரு மில்லியன் அமெரிக்க டொலரை உதவியாக வழங்கியுள்ளது. மேலும் திறமைமிக்க வைத்தியர் குழு ஒன்றையும் மீட்புப் பணிகளில் தேர்ச்சி பெற்ற மீட்புப் பணியாளர் குழு ஒன்றையும் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

ஜப்பானில் ஏற்பட்ட ஆழிப்பேரலை செய்தி கிடைத்தவுடன் ஜனாதிபதி நேரடியாகச் சென்று தூதுவரைச் சந்தித்து தமது நாட்டு மக்களின் சார்பில் அனுதாபத்தை தெரிவித்ததுடன், அங்குள்ள பதிவேட்டிலும் இதனைப் பதித்துள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

- இப்படி பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

**எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க:-**

எமது நாட்டின் அபிவிருத்திக்கு ஜப்பான் கடந்த காலங்களில் பல்வேறு வழிகளில் உதவிகளை வழங்கி வந்துள்ளது. இன்று இரண்டாவது உலக மகா யுத்தத்தில் ஏற்பட்ட பாதிப்புகளைவிட பன்மடங்கு பேரழிவு ஏற்பட்டுள்ளது.

இந்தவேளையில் பாதிக்கப்பட்ட ஜப்பானிய மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் அனைத்து உதவிகளையும் வழங்கவேண்டும்.

ஜப்பானிய மக்கள் தன்னம்பிக்கை, துணிச்சல், முயற்சி, நற்பண்புகள், நேர்மை ஆகியவற்றில் சிறந்து விளங்குபவர்கள்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின் மீண்டும் ஜப்பான் கட்டி எழுப்பப்பட்டது போன்று இந்த ஆழிப்பேரலைப் பாதிப்பின் பின்னரும் கட்டி எழுப்பப்படும் என்ற நம்பிக்கை உள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் எமது நாட்டு மக்களின் சார்பில் நாடாளுமன்றத்தின் ஊடாக ஜப்பானிய அரசுக்கும் அந்த நாட்டு மக்களுக்கும் எமது அனுதாபத்தையும் ஆதரவையும் தெரிவிக்க வேண்டும்.

- இப்படி ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார். (ஒ-சி)

# போலிக் கடவுச்சீட்டுப் பெறமுனைந்த இலங்கையர் இந்தியாவில் கைது

கொழும்பு, மார்ச் 24

விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் இலங்கையர் ஒருவரை தமிழகப்பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போலியான பெயர், முகவரிகளுடன் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்தபோதே அவர் தொடர்பான விவரங்களை பொலிஸார் ஆராய்ந்துள்ளனர். இதனையடுத்து, முகவரின் ஊடாக போலியான பெயரில் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்துள்ளார் என பெரம்பலூர் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே அவர் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்டவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவருக்கு போலிக்கடவுச்சீட்டைப் பெற்றுக்கொடுக்க முனைந்த இந்தியர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுள் நீண்டகாலமாகப் போலி கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த ஒருவரும், கடவுச்சீட்டு அலுவலக முகவரும் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் கைதுசெய்யப்பட்ட மூவரையும தடுத்துவைத்து விசாரிக்கும் படி பெரம்பலூர் பொலிஸ் உயர் அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

# அநுராதபுரம் தமிழ்க் கைதிகளுக்கு வழங்கிய தொலைக்காட்சி உட்பட்ட பொருள்கள் மாயம்

### ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு மன்னார் ஆயர் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 24

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளுக்கு மன்னார் ஆயர் இராயப்பு ஜோஸப் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் பொழுதுபோக்கு சாதனங்களை வழங்கியிருந்தார். இவை தற்போது திருட்டுப் போயுள்ளன.

இது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு அநுராதபுர ஆயர் நோர்பேட் அன்ராடிக்கு தாம் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்று மன்னார் ஆயர் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி வெள்ள அபாயம் காரணமாக அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க்கைதிகள் 55 பேர் கொழும்பு மகஸின் சிறைச்சாலைக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இவர்கள் செல்லும்போது தத்தமது உடைமைகளை எடுத்துச் செல்லத் தேவையில்லை எனச் சிறைச்சாலை அதிகாரிகள் கைதிகளிடம் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் மன்னார் ஆயரால் வழங்கப்பட்ட 21 அங்குல வர்ண தொலைக்காட்சி, வானொலி, ஒக்ஸ்போர்ட் கையகராதி, பயிற்சிப் புத்தகங்கள், செஞ்சிலுவைச் சங்கத்தினரால் வழங்கப்பட்ட கரம்போர்ட், டாம் போர்ட், கைதிகளின் உடைகள், பாய் - தலையணை, சப்பாத்துகள் ஆகியவற்றை விட்டுச் சென்றனர்.

மீண்டும் பெப்ரவரி 24ஆம் திகதி தாம் திரும்பி வந்து பார்த்த போது மேற்குறிப்பிட்ட பொருள்கள் எதுவும் இருக்கவில்லை என சிறைக்கைதிகள் கவலை தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகளிடம் தாம் வினவிய போது அவை அனைத்தும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன என அதிகாரிகள் பதில் அளித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றை அநுராதபுர ஆயர் ஊடாகவே கைதிகளுக்கு மன்னார் ஆயர் வழங்கியிருந்தார் என்றும்-

எனவே இது குறித்து அநுராதபுரம் ஆயருடன் தாம் பேசியதாகவும் சம்பவம் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டதாகவும் மன்னார் ஆயர் தெரிவித்துள்ளார்.

# 154 நாடுகள் பங்கெடுக்கும் சுற்றுலா மாநாடு கொழும்பில்

கொழும்பு, மார்ச் 24

தென்கிழக்காசிய - பசுபிக் பிராந்திய உறுப்புநாடுகளின் சுற்றுலா மாநாடு இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 26ஆம் திகதி வரை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பிரதிப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகியோரின் தலைமையில் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெறும்.

இந்த மாநாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுற்றுலா அபிவிருத்தி அமைப்பில் அங்கம் வகிக்கும் 154 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் 400 இணை அமைப்புகளும் பங்குபற்றும் என்று அவர் கூறினார்.

தெற்காசிய நாடுகளின் சுற்றுலாத்துறை அமைச்சர்களும் அதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இந்த மாநாட்டில் கலந்துகொள்வர். இவர்களுடன் UNWTO அமைப்பின் தலைவரும் பங்குபற்றுவார் என அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநாட்டுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. யுத்தத்தின் பின்னர் இலங்கையில் நிலவும் அமைதியான சூழ்நிலை தொடர்பில் சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டுவதற்கு கிடைத்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும்- என்றார் யாப்பா. (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பிட்டிப் பகுதியிலுள்ள தீவுகள் இரண்டு வெளிநாடுகளுக்கு 30 வருட குத்தகைக்கு

இலங்கைக்குச் சொந்தமான வெள்ளைத்தீவு, இன்பத்தீவு ஆகிய இரண்டு தீவுகளும் 30 வருட குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. அங்கு உல்லாசப் பிரயாணத்துறையை அபிவிருத்தி செய்யும் வகையில் உல்லாசப் பிரயாண ஹோட்டல்கள் அமைக்கப்படும் என ஆளுங் கட்சிக் கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பினர் காமினி ஜயவிக்கிரமபெரேரா பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடம் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும்போதே மேற்கண்ட விவரங்கள் வெளியிடப்பட்டன.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் பிற்பகல் ஒரு மணிக்கு கூடியது.

வழமையான சபை நடவடிக்கைகளுக்குப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு வாய்மூல விடைகள் அளிக்கப்பட்டன.

பெரும்பாலான கேள்விகளுக்கு வழமைபோல் ஆளுங் கட்சிக் கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவே பதில் அளித்தார்.

இந்தக் கேள்வி நேரம் நேற்று முன்தினம் சபையில் சுவாரஸ்யமாக இருந்தது. ஆளுந் தரப்பு, எதிர்த்தரப்பு உறுப்பினர்களின் கிண்டல்களும், குத்தல் பேச்சுகளும் சபையில் கலகலப்பை ஏற்படுத்தியது.

### தீவுகள் இரண்டும் 30 வருடக் குத்தகைக்கு

எதிர்க்கட்சி உறுப்பினரான காமினி ஜயவிக்கிரம பெரேரா கற்பிட்டிக்கு அருகில் உள்ள ஒரு தீவு வெளிநாட்டுக் கம்பனி ஒன்றுக்கோ அல்லது தனி நபருக்கோ நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம். இது ஏன்; எந்த நோக்கத்துக்காக வழங்கப்பட்டது? என்று கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்குப் பதில் அளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன வெள்ளைத்தீவு, இன்பத் தீவு ஆகிய இரு தீவுகளும் சட்டமா அதிபரின் அனுமதியுடன் 30 வருட கால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அங்கு சுற்றுலாக் ஹோட்டல்கள் அமைக்கப்பட்டு உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்தி செய்யப்படும்.

வெள்ளைத்தீவு - இலங்கை, மாலைதீவு மற்றும் சுவிற்ஸர்லாந்து கூட்டிணைந்தும்-

இன்பத்தீவு இந்தியாவின் ஒரு தனியார் கம்பனிக்கும் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக 30 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன.

முதல் ஐந்து ஆண்டுகளுக்கான குத்தகைப் பணமாக வெள்ளைத்தீவுக்கு 3 கோடியே 70 லட்சத்து 99 ஆயிரத்து 99 ரூபா 40 சதமும் இன்பத்தீவுக்கான குத்தகைப்பணமாக ஒரு கோடியே 49 லட்சத்து 14 ஆயிரத்து 397 ரூபா 40 சதமும் குத்தகைப் பணமாகப் பெறப்பட்டது.

இந்தக் குத்தகைப்பணம் ஒவ்வொரு ஐந்து வருடங்களிலும் புதுப்பிக்கப்படும் என்றும் கூறிய அமைச்சர், இதன் மூலம் உல்லாசப் பிரயாணத்துறையை அபிவிருத்தி செய்யமுடியும் என்றும் கூறினார்.

### தொழிலாளர்களின் நிதியின் மூலம் கிடைக்கும் இலாபம் அவர்களுக்கு இல்லை

எதிர்க்கட்சி உறுப்பினர் ரவி கருண நாயக்க ஊழியர் நம்பிக்கை நிதியம் தொடர்பான கேள்வி ஒன்றை எழுப்பினார். கடந்த வருடத்தின் போது ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள், கொள்வனவு செய்யப்பட்ட பங்குகள், அதன்மூலம் கிடைத்த ஆதாயம் எவ்வளவு என்று




நிதித் திட்டமிடல் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார். இதற்குப் பிரதி நிதியமைச்சர் கீதாஞ்சனா குணவர்த்தன பதில் அளித்தார்.

முதலீடுகள் தொடர்பாக விவரித்த பிரதி நிதியமைச்சர் இதன் மூலம் 25 வீதமான வட்டியைப் பெறுகின்றோம் என்று குறிப்பிட்டார்.

இந்த இடத்தில் மடக்கிப் பிடித்தார் ரவி கருண நாயக்க. ஐயா இந்தப் பாட்டாளி மக்களின் நிதியை முதலீடு செய்யும் அரசு 25 வீதமான வட்டியைப் பெறுகின்றது. ஆனால் அந்த நிதியின் சொந்தக்காரர்களான தொழிலாளர்களுக்கு ஆக 10 முதல் 11 வீதம் வரை மட்டுமே வட்டியாக வழங்கப்படுகின்றது. ஏன் இந்த வட்டி

**உதயன் சபைச் செய்தியாளர்**
**புத்திரசிகாமணி**

வீதத்தை அதிகரித்து வழங்க முடியாது? என்று இடைக் கேள்வி ஒன்றை எழுப்பினார். ஆனால் அவர்களிடம் இருந்து பதில் ஏதும் கிடைக்கவில்லை.

### பதில் அளிக்காமல் நழுவி விட்டார் தொழில் அமைச்சர்

தொழில், தொழில் உறவுகள் அமைச்சரிடம் தனியார்துறை ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பாக ரவி கருணநாயக்க கேள்வி ஒன்றை எழுப்பினார். தேர்தல் காலங்களின் போது அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் என உறுதியளிக்கப்படுகின்றது. தயவுசெய்து தனியார் துறை ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு எப்போது வழங்கப்படும்? ஆகக்குறைந்த தொகை எவ்வளவு என்று அமைச்சர் கூறுவாரா? என்று கேட்டார் ரவி கருணநாயக்க.

ஆனால் தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொக்குகே இந்தக் கேள்விக்கு நேரடியாகப் பதில் அளிக்காமல் இந்த விடயம் நிதிஅமைச்சுடன் தொடர்புள்ள ஒரு விடயம் என்பதால் நிதி அமைச்சுடன் கலந்தாலோசித்துப் பதில் அளிக்கப்படும் என்று மெதுவாக நழுவிவிட்டார்.

### ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்கு 13 ஆயிரம் கோடி லாபமா?

எதிர்க்கட்சி உறுப்பினரான தயாசிறி ஜயசேகரவின் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குக் கிடைத்த வருமானம் தொடர்பான கேள்வி, அமைச்சர் தினேஷ் குணவர்த்தனாவை பெரும் தர்மசங்கடமான நிலைக்குத் தள்ளிவிட்டது.

2006 ஆம் ஆண்டு முதல் இன்று வரை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு? என்று தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்குப் பதில் அளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, கூட்டுத்தாபனத்துக்கு 13 ஆயிரம் கோடி ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளது என்று கூறினார். அப்போதுதான் வந்தது வம்பு. ஐயா, அமைச்சர் கூறுவது அப்பட்டமான தவறு. நாட்டின் பாதுகாப்புச் செலவுகளுக்கு செலவிடுவது 17 ஆயிரம் கோடி ரூபா. அப்படி இருக்க ரூபவாஹினிக்கு மட்டும் 13 ஆயிரம் கோடி வருமானம் என்றால் அதை வைத்து பெரும் அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியுமே என்றார் தயாசிறி. அது மட்டுமல்ல கடந்த காலங்களில் சில அரசியல் கட்சிகள் மேற்கொண்ட தேர்தல் விளம்பரங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் இன்னும் அறவிடப்பட இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இது என்னுடைய பதில் அல்ல. அதிகாரிகள் கொடுத்த விவரங்களை இங்கு சமர்ப்பிக்கின்றேன். எனக்கும் சிறிது கலக்கமாகத்தான் இருக்கின்றது. பின்னர் பரிசீலனை செய்யப்பட்டு விவரமான பதில் அளிக்கப்படும் எனச் சமாளித்து விட்டார் அமைச்சர்.

அதேவேளை அறவிடப்படாத கடன் தொடர்பாக அரச கணக்குக் குழுவில் பரிசீலிக்கப்படும் ஒரு விடயம். அதனை இந்தச் சபையில் கூறியது பொறுப்பற்ற செயல் எனவும் கண்டித்தார். இதனால் தயா சிறி ஜயசேகரவுக்கு ஆளுந் தரப்பினருக்கும் இடையில் பெரும் தர்க்கம் ஏற்பட்டது. இதன் பின்னர் வரவு, செலவுத் திட்டத்தின் முன்மொழியப்பட்ட பெறுமதி சேர்வரி, நாட்டைக் கட்டியெழுப்பும் வரி, மாகாண சபைகள், முத்திரைத் தீர்வை பற்றுகள் வரி நீக்கம், நிதிச் சட்ட மூலம், பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி, உற்பத்தித் தீர்வை, விசேட ஏற்பாடுகள் உட்பட ஒன்பது சட்டமூலங்களின்திருத்தச் சட்ட வரைவுகள் தொடர்பான விவாதங்கள் ஒரே நேரத்தில் இடம்பெற்றன.

சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம சட்டத்திருத்தங்களை சபையில் முன்வைத்தார். விவாதம் நடைபெற்ற வேளையில் இறுதிக்கட்டத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷா டி சில்வா உரையாற்றிக்கொண்டிருக்கும்போதே ஜனாதிபதி அவைக்குள் பிரவேசித்தார். விவாதத்துக்கும் நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதில் அளித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# காசம் இல்லாத தேசம் நோக்கி

**இன்று காசநோயாளர் தினம்.**

காசம் இல்லாத தேசம் நோக்கி
வாசம் உள்ள மலர்கள் என
வேசம் இல்லா மனிதர் செல்ல
நேசம் உள்ள நெஞ்சங்களின்
பாசம் உள்ள சேவை வேண்டும்

நோயின் தாக்கம் என்னவென்று-அனைவரும்
அறிந்து கொள்ள வேண்டும்
நோயின் தன்மை கூடும் போது-சாவில் முடியும்
தெரிந்து கொள்ள வேண்டும்

குணம் குறிகள் அறிந்து மெல்ல-நோயை
அறிந்து கொள்ள வேண்டும்
வைத்தியரை நாடி நல்ல சோதனைகள்
செய்து கொள்ள வேண்டும்

குடும்ப நலம் பேணிக் கொள்ள-தற்காப்பு
செய்து கொள்ள வேண்டும்
உரிய முறைகள் தெரிந்து கொண்டு- உயிரைக்
காத்துக் கொள்ள வேண்டும்

சமூகம் மீதும் நல்ல-பற்று
வைத்துக் கொள்ள வேண்டும்
சங்கதி அறிந்து சனங்கள்-நோயை
விலத்தி வாழ வேண்டும்

பரவும் வழிகள் அறிந்து மெல்ல-பரம்பல்
தடுத்துக் கொள்ள வேண்டும்
போய் முடியும் எல்லை புரிந்து-முந்தி செயற்பட
பழகிக் கொள்ள வேண்டும்

இருமும் போதும் தும்மும் போதும்-முகத்தை
மறைத்துக் கொள்ள வேண்டும்
இருமித் துப்பும் சளியும் நோயை-பரப்பும்
புரிந்து கொள்ள வேண்டும்

சுவாசம் மூலம் பரவி சுகத்தை-அழித்துவிடும்
அறிந்து கொள்ள வேண்டும்
சுத்தம் சுகாதாரம் பேணும் போது-சுகமது சேரும்
புரிந்து கொள்ள வேண்டும்

முறையே மருந்து எடுக்கும் போது-மாறிடும் நோயென
தெரிந்து கொள்ள வேண்டும்
மறந்து நாங்கள் செயற்படும் போது-மனிதம் மறையும்
புரிந்து கொள்ள வேண்டும்

நாமும் திருந்தி சமூகம் திருந்த-முறையே
நடந்து கொள்ள வேண்டும்
காசம் போக்கி தேசம் காத்து-வாழ்ந்திட
பழகிக் கொள்ள வேண்டும்.

நாயகன்.

# காசநோயாளிகள் இனங்காணப்படும் போது ஆற்றுப்படுத்த வேண்டியவை

* காசநோய் அறிகுறிகள் உடையவர்கள் குறிப்பாக இரண்டு கிழமைகளுக்கு மேல் இருமல் உடையவர்கள், சளிப்பரிசோதனைக்கு உட்படல் அவசியம் என்பதனைக் கூறல் வேண்டும்.
* காசநோய் சாதாரண நோய்போல் குணப்படுத்தக்கூடியது எனக் கூறல் வேண்டும்.
* தொடர்ச்சியாக மருந்து எடுத்தலின் முக்கியத்துவத்தினைக் கூறுதல் வேண்டும்.
* காசநோய் தொடர்பான சமூக வடுக்கள் பொய்யானவை எனக் கூறல் வேண்டும்.
* நோயினை ஏற்றுக் கொள்ளலைத் தவிர்ப்பதைத் தடுத்தல் வேண்டும்.
* குடும்ப அங்கத்தவர்கள் சளிப்பரிசோதனைக்கு உட்படலை ஊக்குவித்தல் வேண்டும்.
* நோயிற்குச் சிகிச்சை எடுத்தலில் உள்ள தடங்கல்களை எதிர்கொள்ள உதவுதல் வேண்டும்.
* நோயாளியிலும், குடும்பத்தினரிலும் ஏற்படும் உணர்வு மாற்றங்களைச் சாதகமாக மாற்றல் வேண்டும்.
* குடும்ப உறுப்பினர்களுக்கு உளவளத்துணை செய்தல் வேண்டும்.
* வேலை செய்யும் இடத்தில் உளவளத்துணை செய்தல் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா
## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**

பழைய நண்பர் மூலம் புதிய நண்பரின் அறிமுகம் கிடைக்கும். முயற்சி ஒன்றில் நல்ல திருப்பங்களைக் காணலாம். முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். நீங்கள் கேட்காமலேயே உறவினர்கள் சிலர் உதவிகள் செய்வர். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு.

**இடபம்:**

சில நாள்களாக செல்லாத நண்பர் ஒருவரின் வீட்டிற்குச் செல்லலாம். நீண்டநாள்களாக வராமல் இழுத்தடித்த பண வரவு ஒன்று வரலாம். சில விடயங்களில் புத்திசாலித்தனமாகச் செயற்பட்டு ஆதாயம் பெறுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு கூடும்.

**மிதுனம்:**

ஆடம்பரச் செலவுகள் செய்து, உங்களின் பெருமையை மற்றவர்களிடம் காட்டுவீர்கள். குடும்ப உறுப்பினர்களின் வேண்டுகோள்களை நிறைவேற்றுவீர்கள். செய்ய மறந்த காரியங்களால் அவதிகள், தண்டச் செலவுகளுக்கு ஆளாகலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

**கடகம்:**

குடும்ப உறுப்பினர்களுடன் சிறு மனஸ்தாபம் ஏற்பட்டு பின்னர் சரியாகும். பல நாள்களாக தள்ளி வைத்த வேலை ஒன்றை இன்று திடீரென செய்ய நேரிடலாம். எதிர்பாராத திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் கண்டிப்பிற்கு ஆள்படுவர்.

**சிங்கம்:**

ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். பிள்ளைகள் விடயத்தில் அதிக பரிவுடன் நடந்து கொள்வீர்கள். உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். வியாபாரிகள் கணிசமான லாப வரவு களைப் பெறலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். அரசியல் தொடர்புடையவர்கள் பரபரப்பாக செயற்படலாம்

**கன்னி:**

பொறுப்புகளால் போராட்டமான நிலைமையைச் சந்திக்கலாம். பழைய கடன் மிகுதி ஒன்றை தீர்க்க முற்படுவீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரிய மனிதர்கள் மூலம் சில காரியங்களைச் சாதிக்கலாம். தொழில் ரீதியான விடயங்களில் புதுமையை புகுத்த முற்படுவீர்கள். வாகனங்கள் வழியில் செலவு உண்டு.

**துலாம்:**

புதியவர்கள் சிலரின் பாராட்டு கிடைக்கும். நீங்கள் கேட்ட உதவி ஒன்றைச் செய்ய மனம் இல்லாமல் உறவினர்கள் கையை விரிக்கலாம். சில வேலைகளுக்காக மற்றவர்களுடன் சேர்ந்து அலையலாம். உடன் பிறந்தவர்கள் உதவிகரமாக இருப்பர். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். சுகமான அனுபவம் பெறலாம்.

**விருச்சிகம்:**

அடுக்கடுக்காக் குவியும் வேலைகளால் அவதிப்படலாம். தொழில் ரீதியாகவோ அல்லது மற்ற வகையிலோ பிறரின் விமர்சனங்கள், கேலிப் பேச்சுக்களை எதிர் கொள்ளலாம். குடும்ப உறுப்பினர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். உங்களிடம் உறுதி அளித்தவர்கள் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம்.

**தனுசு:**

எதிர் பார்த்த உதவிகள் மட்டுமின்றி, எதிர்பாராத உதவிகளும் கிடைக்கும். மாமன், மைத்துனர்களுக்காக சில காரியங்களைச் செய்வீர்கள். நண்பர்கள் சிலரிடம் உங்களின் சொந்த விடயங்களைச் சொல்லி ஆலோசனை கேட்பீர்கள். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். பணவரவு உண்டு.

**மகரம்:**

அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர் விவகாரம் ஒன்றில் தலையிட்டு அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முற்படுவீர்கள். தொழில் ரீதியாக உங்களின் திறமையை வெளிப்படுத்த நினைப்பீர்கள். குதர்க்கமாகப் பேசும் சிலரிடமும் சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**கும்பம்:**

திட்டமிட்டபடி காரியங்களை நிறைவேற்ற முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். பல நாள்களாகப் பார்க்காத உறவினர்கள் சிலரை பார்க்கலாம். குறைந்த செலவில் முடியும் என, நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாக செலவாகலாம். சிலருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். இறை வழிபாடு அமைதி தரும்.

**மீனம்:**

சில காரியங்களை நீங்களே முன்னின்று நடத்துவீர்கள். வாகனங்கள் வழியில் பராமரிப்பு செலவுகளைச் சந்திக்கலாம். உங்களின் யோசனைகளை உறவினர்கள் சிலர் உதாசீனம் செய்யலாம். தூக்கமின்மையால் அவதிப்படலாம். சிறிய வேலை ஒன்றுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். மற்றவர்களைப் பார்த்து பொறாமைப்படுவீர்கள்.

# கறுப்புச் சந்தைய... கடைகள் விற்பனை

**பல கோடி ரூபாவை இழந்த மாநகர சபை 3**

**யாழ்** மாநகர சபைக்கான புதிய 5 மாடிக் கட்டடத்தை நகரின் மத்தியில் அமைக்கும் பணியை தனியார் முதலீட்டாளர் ஒருவரிடம் ஒப்படைப்பது குறித்த விடயத்தில் மீறப்பட்டுள்ள விதி மீறல்களின் பட்டியல் தொடர்ந்து கொண்டே போகின்றன.

நகர எல்லைக்குள் ஏதாவது ஒரு கட்டடம் அமைப்பதற்கு முன்னால் அதற்கான அனுமதி நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் இருந்து பெறப்பட வேண்டும். அனுமதியைப் பெற வேண்டும் என்றால், கட்டடத்துக்கான வரைபடமும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

### நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி இல்லை

வண்ணான் குளத்தை அண்டி அமைய உள்ள கட்டடத்துக்கு அனுமதி கேட்டு அதனை அமைக்க உள்ள நிறுவனம் முதலில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு விண்ணப்பித்திருந்தது. ஆனால் அந்த இடத்தில் ஹோட்டல் ஒன்று கட்டுவதற்கான அனுமதியே குறித்த நிறுவனத்தால் கேட்கப்பட்டிருந்தது. அதிகார சபை அதனை நிராகரித்தது.

''எம்மிடம் ஒரு வரைபடம் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி கேட்கப்பட்டது. அதில் ஹோட்டல் என்று குறிப்பிடப்பட்டிருந்ததால் அது நிராகரிக்கப்பட்டது. அமைக்கப்பட உள்ள கட்டடத்துக்கான சரியான புதிய வரைபடத்தைச் சமர்ப்பிக்கும்படி அறிவுறுத்தி இருந்தோம். ஆனால் இன்று (15.03.2010) வரை அது எமது கைகளுக்குக் கிடைக்கவில்லை. அந்த இடத்தில் எந்த ஒரு கட்டடம் அமைப்பதற்கும் அதிகார சபை இதுவரை எந்த அனுமதியையும் வழங்கவில்லை'' என்றார் அதிகார சபையின் வடமாகாண பணிப்பாளர் எம்.இராஜநாயகம்.

அதேவேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற திட்டமிடல் குழுக் கூட்டத்தில் குறிப்பிட்ட இடத்தில் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கட்டடம் ஒன்றின் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்ட பின்னரே குறிப்பிட்ட கட்டடத்துக்கான பணிகளை ஆரம்பிக்க முடியும். ஆனால் வண்ணான் குளக் கரையில் அமையும் கட்டடத்துக்கான அனுமதி நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் இருந்து பெறப்படாமலேயே பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. இவ்வாறான சமயங்களில் அனுமதி இன்றி சட்டவிரோதக் கட்டடம் அமைப்பதாகத் தெரிவித்து அதனைத் தடுக்கும் அதிகாரம் அதிகார சபைக்கு உள்ளது. ஆனாலும் அரசு மற்றும் அமைச்சரின் அதிகாரங்களுக்குப் பயந்து அதிகாரிகள் அது தொடர்பில் வாளாவிருக்கின்றனர். இதுவரைக்கும் கட்டடப் பணிகளைத் தடுத்து நிறுத்துவதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

### கறுப்புச் சந்தை விற்பனை

விதிமுறைகளை மீறி, எதிர்ப்புக்களைப் புறந்தள்ளி கட்டடம் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பது மட்டுமல்ல, கடைகளைக் குறிப்பிட்ட ஒப்பந்தகார நிறுவனம் விற்கவும் ஆரம்பித்துவிட்டது.

இதற்காக நகரில் புடைவைக் கடை வைத்திருக்கும் வியாபாரி ஒருவர் தரகராக நியமிக்கப்பட்டுள்ளார். அவருடனேயே கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விடயங்கள் பரிமாறப்படுகின்றன. நகர அதிகார சபைக்கோ மாநகர சபைக்கோ சமர்ப்பிக்கப்படாத கட்டடத்தின் வரைபடம், கடைகளை வாங்கச் செல்வோருக்குக் காண்பிக்கப்படுகிறது.

ஒரு கடை இரண்டு கோடி ரூபா வரைக்கும் இந்தக் கறுப்புச் சந்தையில் விற்கப்படுகிறது.

''இங்கு கட்டப்படும் வர்த்தகத் தொகுதியில் அமையும் கடைகள் அனைத்தும் ஏலத்தில் விற்கப்படும் என்றுதான் மாநகரசபை உறுப்பினர்களிடம் கூறப்பட்டது. ஆனால், கடைகள் அனைத்தும் ஏற்கனவே விற்றுத் தீர்ந்து விட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. பலரும் முற்பணமும் செலுத்தி விட்டார்களாம் என்று கூறப்படுகிறது'' - என்கிறார் மாநகர சபையின் சுயேச்சை உறுப்பினரான ஜனாப் சுபியான்.

சபையில் அரச தரப்புக்கு ஆதரவு அளித்து வரும் இவர், ''இதுபற்றி என்னிடம் பலரும் விசாரிக்கின்றனர். எனக்கு இது புதிய செய்தியாக இருக்கிறது. உண்மை என்ன வென்பதை அறியாமல் எதுவும் சொல்லிவிட முடியாது'' என்கிறார்.

### சந்தேகங்கள்

கடைகள் பகிரங்க ஏலத்தில் விடப்படாமல் இருப்பதற்கான காரணம் அதிக பணத்தைப் பெற்றுக் கொள்வதுதான் என்ற கூற்றை ஏற்றுக்கொள்வதற்கு தீவிர மண்பற்றாளர்களான வர்த்தகர்கள் சிலர் தயாராக இல்லை. இரகசியமாக அவற்றை தெற்கு வர்த்தகர்களுக்கு விற்பதற்கான சதியே இது என்று அவர்கள் குமுறுகிறார்கள். ஏற்கனவே பல கடைகள் சிங்கள முதலாளிகளுக்கு விற்கப்பட்டு விட்டன என்றும் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால், இதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

இருப்பினும் இத்தனை ஆண்டுகளாக போருக்கும் துன்பங்களுக்கும் மத்தியிலும் யாழ். நகரில் தாக்குப் பிடித்து நின்ற தமக்கு அபிவிருத்தியில் பங்கு கிடைக்கவில்லை என்ற ஆதங்கம் பெரும்பாலான, குடாநாட்டு வர்த்தகர்களுக்கு உள்ளது. இரகசிய விற்பனை நடைமுறைகளால் இவர்களில் சிலரால் கடைகளைப் பெறமுடியாமல் போய்விட்டது, வேறு சிலரால் அதிக விலை கொடுத்து அவற்றை வாங்க முடியாமல் போய்விட்டது.

மக்களுடனேயே இருந்து மக்களுக்காகவே பணியாற்றுகின்றோம் என்று அடிக்கடி கூறிக் கொள்ளும் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள மாநகர சபையின் மக்கள் விரோதமான இந்தச் செயல் பெரும் சர்ச்சையையும் விசனத்தையும் கிளப்பி உள்ளது.

''காசுக்காக எதை வேண்டுமானாலும் செய்வதற்கு இவர்கள் துணிந்து விட்டார்கள் என்பதையே இது காட்டுகின்றது'' என்று

சீறின... நாவல...
திருக்கும் ஒருவ...
தொடர்புக்கு வ...
முதல்...
இந்த முறை...
விதி மீறல்கள், ச...
குறித்து மாநகர...
ரின் உத்தியோ...
கருத்துக்களை...
அவரைத் தொ...
கொள்வதற்கு உத...
பல தடவைக...
முயன்றான். வழ...
கம் போலவே அவ...
தொடர்புஎல்லைக்கு...
வெளியே இருந்...
தார். ''அவர் இப்...
போது இல்லை''...
''முதல்வர் முக்...
கூட்...த்தில் இ...
றார்''... அவரிட...
டுச் சொல்கிறோம்...
யாய் இருப்பதால்...
களை தொலைபே...
மக்கள் சந்திப்பி...
நேரத்தில் எடுத்து...
களை வாய் ஓயா...
களுக்குத் திரும்...
கொண்டிருக்கிறத...
என்...
இந்திய மத்தி...
வகித்த போதும், ம...
பதவி வகித்த ே...
படும் அலைக்கற்...
ஆ.ராசாவைக் கை...
விசாரணை செய்...
திய அரசுக்கு இரு...
அவரை அமைச்...
விலக வைத்தது...
சிபிஐ எனப்படும்...
ராசாவை நோண்ப...
டிருக்கிறது.
இலங்கையிலு...
பது தெரியவில்லை...
வதற்கான எல்ல...
கின்றன. ஏனெனி...
விருத்தித் திட்டத்...
டிய கடப்பாடும் இ...
தகத் தொகுதி அ...
முதல்வர் யோகே...
முன்மொழிவு மீ...
தெரிவித்திருந்தா...
அப்படியானா...
டத்தைப் பொறுப்...
அமைச்சர் பஸில்...
யெல்லாம் தெரி...
மாகிறது அல்லவ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...யுச்
...யில்
...ள்
...னை

...நாவல... வீதியில் கடை வைத்
...ரும் ஒருவ...
...டர்புக்கு வர மறுக்கும்
... முதல்வர்
...ந்த முறைகேடுகள்,
...மீறல்கள், சர்ச்சைகள்
...து மாநகர முதல்வ
... உத்தியோகபூர்வ
...துக்களை அறிய
...ரைத் தொடர்பு
...வதற்கு உதயன்
... தடவைகள்
...றான். வழக்
...ாலவே அவர்
...புஎல்லைக்கு
...ியே இருந்
... "அவர் இப்
... இல்லை",
...ல்வர் முக்கிய
...ந்தில் இ...க்கி
... அவரிட...கட்டுவிட்
...சால்கிறோம்", "இப்போது வேலை
...இருப்பதால் பின்னர் ஒரு நேரத்தில் உங்
...தொலைபேசச் சொல்கிறார்", "அவர்
...சந்திப்பில் இருக்கிறார்; அரைமணி
...தில் எடுத்துப் பாருங்கள்" என்கிற பதில்
...வாய் ஓயாமல் ஒரு பெண் குரல் எங்
...குத் திரும்பத் திரும்பச் சொல்லிக்
...டிருக்கிறது.

**என்ன நடக்கும்?**

...திய மத்திய அரசில் திமுக அங்கம்
... போதும், மத்திய அமைச்சராக ஆ.ராசா
... வகித்த போதும் 'ஸ்பெக்ரம்' எனப்
...அலைக்கற்றை ஒதுக்கீட்டு ஊழலில்
...வைக் கைது செய்து அடைத்து வைத்து
...ணை செய்வதற்கான துணிச்சல் இந்
...சுக்கு இருக்கிறது. அதற்கு முன்னதாக
...ர அமைச்சர் பதவியில் இருந்தும்
... வைத்தது இந்திய அரசு. இப்போது
...னப்படும் மத்திய புலனாய்வுப் பிரிவு
...வ நோண்டி நொங்கெடுத்துக் கொண்
...றது.

...ங்கையிலும் அவ்வாறு நடக்குமா என்
...ரியவில்லை. ஆனால், அப்படிச் செய்
...ான எல்லா முகாந்திரங்களும் இருக்
.... ஏனெனில், வடக்கின் வசந்தம் அபி
...த் திட்டத்தை முன்னெடுக்க வேண்
...ப்பாடும் இருப்பதால்தான் இந்த வர்த்
...தகுதி அமைக்கப்படுகிறது என்று
...ர் யோகேஸ்வரி பற்குணராசா, கட்டட
...ாழிவு மீது உரையாற்றுகையில்
...த்திருந்தார்.

...படியானால் வடக்கின் வசந்தம் திட்
...ப் பொறுப்பெடுத்துச் செயற்படுத்தும்
...சர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இவை
...ும் தெரிந்திருக்கும் என்று அர்த்த
... அல்லவா?

(முற்றும்)

# நடவடிக்கை பாரமாச

**விசாரணை அறிக்கை**

நகரில் புதிய வர்த்தகத் தொகுதி அமைக்கப்படுவதில் அதிகாரத் துஷ்பிரயோகம் காரணமாக யாழ். மாநகர சபை கோடிக்கணக்கான ரூபா வருமான இழப்பைச் சந்தித்துள்ளது என்கிற செய்தி கிடைத்த போது, அது நம்புவதற்குக் கடினமானதாக இருந்தது. ஒவ்வொரு கடைகளும் 2 கோடி ரூபாவுக்கு விற்கப்படுகின்றன என்று கிடைத்த தகவலின் நம்பகத் தன்மை எம்மைச் சந்தேகப்பட வைத்தது.

ஏனெனில், நல்லூர் பிரதேச சபையால் நல்லூர் சந்தையில் இவ்வாறானதொரு கட்டடம் அமைக்கப்பட்டு கடைகள் விற்கப்பட்ட போது அவை ஒவ்வொன்றும் சில லட்சங்கள் வரையே விலை போயின. இது நகரின் மத்தியில் உள்ளது என்பதால் பல லட்சங்கள் வரையில் விலைபோகக் கூடும் என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கது என்று நினைத்தோம். கோடிகளை விலை எட்டும் என்பது ஏற்புடையாகத் தெரியவில்லை.

இருந்தாலும் தகவல்களைச் சரிபார்த்து விடுவது என்று தீர்மானித்துக் கொண்டோம். உள்ளூர் தரகர் மூலமே கடைகள் விற்கப்படுகின்றன என்ற தகவல் கிடைத்திருந்ததால் அவரைத் தேடிச் சென்றோம். 16.03.2011 மதியம் கொளுத்தும் வெய்யிலில் எமது பயணம் ஆரம்பமானது. ஒருவாறு நகரக் கடைகளில் விசாரித்தறிந்து 'சின்னச் சீமாட்டி' என்று குறியீட்டுப் பெயரால் அழைக்கப்படும் கடைக்கு நாம் சென்று சேர்ந்தோம்.

எமது விசாரணைகளில் அவரே தரகர் என்பது உறுதியாகி இருந்தது. எமது நடவடிக்கைக்கு சரியான சாட்சி ஒன்றும் தேவையாக இருந்தது. மாநகர சபையின் உறுப்பினரான துடிப்பு மிக்க இளைஞரான விந்தன் எம்முடன் இணைவதற்கு முன்வந்தார். அவரையும் அழைத்துக் கொண்டு 'சின்னச் சீமாட்டி'யைத் தேடும் எமது விசாரணையை முடுக்கிவிட்டோம். நகரின் மத்தியில் சிறிய சந்து ஒன்றுக்குள் அமைந்திருக்கிறது அந்தக் கடை. அதைப் புடவைக் கடை என்று சொல்ல முடியுமா என்பது ஒரு சந்தேகம்தான். ஆனால், அப்படிச் சொல்லத்தக்க வகையில் அடையாளங்களாக சில உடுபுடைவைகளும் அந்தக் கடையில் இருக்கத்தான் செய்தன.

அதன் உரிமையாளர் என்று அறிமுகப்படுத்தியவரிடம் எம்மை அறிமுகப்படுத்திக் கொண்டோம். (கொடுமை என்னவெனில் அவருக்கு மாநகர சபை உறுப்பினர் விந்தனையும் அடையாளம் தெரியவில்லை என்பதுதான்) கொழும்பில் இருந்து வந்திருக்கும் முதலீட்டாளர்கள் என்று நாம் எம்மை அடையாளப்படுத்தினோம். புதிய வர்த்தகத் தொகுதியில் இரண்டு கடைகள் எமக்கு வேண்டும் என்பதே எமது கோரிக்கை. அவர் உதவி செய்தால் மட்டுமே எம்மால் அந்தக் கடைகளைப் பெற முடியும் என்று அவரை நம்ப வைத்தோம். அத்துடன் நாங்கள் உண்மையில் கடைகளை வாங்கத்தான் வந்தவர்கள் என்றும் அவரை நம்ப வைக்க எம்மால் முடிந்தது.

நீண்ட உரையாடலுக்குப் பின்னர், தான் பாதுகாப்பாக மறைத்து வைத்திருந்த ஒரு 'பைல்' கட்டை அவர் வெளியே எடுத்தார். அதில் ஒரு வரைபடம் இருந்தது. அதனை எம்முன் விரித்த அவர் விவரங்களை அடுக்கினார்.

"அடித்தளத்தில் 14 கடைகள் அமைய உள்ளன. அவை ஒவ்வொன்றும் 14 x 40 சதுர அடிகள் கொண்டவை. அந்தக் கடைகள் ஒவ்வொன்றும் ஒரு கோடி 90 லட்சம் பெறுமதியானவை. ஆனால் ஒரு கோடி 10 லட்சம் ரூபாவுக்குத்தான் பற்றுச் சீட்டை தரப்படும். அந்தத் தொகைக்கே கடைகள் ஒப்பந்தமும் செய்யப்படும். 50 லட்சம் ரூபா முன்பணம் செலுத்தினால் கடைகளை ஒப்பந்தம் செய்யலாம்" என்றார் அந்த நபர்.

நம்பிக்கையாக முன்பணம் செலுத்தலாம் என்று எங்களை நம்ப வைப்பதற்காக ஏற்கனவே முன்பணம் செலுத்தியிருந்த இருவரின் ஒப்பந்தங்களையும் எம்மிடம் எடுத்துக் காண்பித்தார். அந்த ஒப்பந்தங்களில் ஒன்று குறிப்பிட்ட தரகரின் பெயரிலேயே எழுதப்பட்டிருந்ததை நாம் அவதானித்தோம். அது பற்றிக் கேள்வியும் எழுப்பினோம். தனது நண்பர் ஒருவருக்காக அதனைத் தனது பெயரில் (பினாமி) பதிந்து வைத்துள்ளார் என்று எமக்கு விளக்கம் சொன்னார்.

"சரி! எங்களுக்குக் கடைகள் பிடித்திருக்கின்றன. கண்டிப்பாக நாம் அவற்றை வாங்குகிறோம். ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கு முன்னர் எமது முதலீட்டாளர்களுடன் பேசிவிட்டு உங்களுக்குத் தகவல் தருகின்றோம்" என்று கூறிவிட்டு அங்கிருந்து நழுவினோம். அந்தத் தரகரிடம்அடுத்த நாள் மாநகர சபை உறுப்பினர் விந்தன் நேரில் சென்று பேசினார். விலையைச் சற்றுக்குறைக்க முடியுமா என்று கேட்டார். "நான் உங்களுக்குக் கடைகளை ஒப்பந்தம் செய்து தருவதில் எனக்கு ஒன்றும் (?) கிடைக்காது. சிட்டை இல்லாமல் கொடுக்கப்படும் மீதிப் பணத்தில் பெரும்பகுதி அமைச்சருக்கே (யார் என்பது தெரியாது) போய்ச் சேருகிறது. எனக்கு ஒன்றும் கிடைக்காது. என்னையும் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள்" என்றார்.

# வானம் வசப்படும்



"இத்தோடு கதை முடிந்தது; இதுக்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது தப்பிக்க வழியே இல்லை; மாட்டிக் கொண்டு சாக வேண்டியது தான்" இப்படி முடிவு சொல்கின்ற முத்திரை வாக்கியங்களை வாழ்வில் எத்தனை பேரிடம் கேட்டிருக்கிறோம். இவ்வாறான இழுத்தும் பூட்டும் வாக்கியங்களை அடியோடு வெறுக்க வேண்டும். அவற்றை முறிக்க வேண்டும்.

ஊழல் நிறைந்த சுயநல மிருகங்களாகத் திரியும் அரசியல் வாதிகளிடம் எதையுமே இவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளக் கூடாது என்கிற அளவுக்கு கேவலமான சில பொது மனிதர்களிடமும் நாம் பெற்றுக் கொள்ள வேண்டியது இந்த முடியும் என்ற குணம் ஒன்றைத்தான்.

தன் கதை முடிந்து விட்டதாக அவர்கள் ஒரு போதும் ஒப்புக் கொள்வதோ ஓய்வு கொள்வதோ இல்லை. எப்படியும் ஏழ முடியும். மக்கள் மடையர்கள் தான். மறுபடியும் பதவிக்கு வர முடியும் என்று நம்பிக்கையைக் கைவிடாது காத்திருந்து திடீரென்று ஒருநாள் பதவியைக் கைப்பற்றுகிறார்கள். அந்த ஒற்றைக் குணத்தை மட்டும் அந்த அரசியல்வதிகளிடமிருந்து கூட நாம் கற்றாக வேண்டு. நமது கதை முடிந்து விட்டது என்று கைவிடுதல் கூடாது.

அமெரிக்க அணு விஷத்தால் முடிவுரை எழுதப்பட்ட ஜப்பான் புதிய சந்தைப் பொருளாதாரத்தின் முன்னுரை எழுத முடிந்தது எதனால்? ஆஹா நாம் முடிந்து போனோம் என்று ஜப்பான் புலம்பவில்லை தனது நம்பிக்கையைக் கைவிடவில்லை. உலக ஓட்டப் பந்தயத்திலிருந்து விலக விரும்பவில்லை. வாழ்க்கைப் போட்டிகளில் இருந்து வெற்றியாளர்கள் விருப்பி வெளியேறுவதில்லை.

இவ்வளவு தான்... இதற்கு மேல் ஒன்றும் முடியாது... நாம் விடுபடவே முடியாது என்கிற எண்ணம் அலைமோதும் போதெல்லாம் " ஏன் முடியாது... முடியும் என்று கூறுங்கள். சுனாமி அலை உயர்த்தூக்கிய ஒருவர் தென்னை மரத்தைப் பிடித்து நான்கு நாள் காத்திருந்து தப்பினார் என்றால் நாம் ஏன் தப்பிக்க முடியாது? பூகம்பத்தின் நான்கு நாள்களுக்குப் பின்பும் உயிருடன் காப்பாற்றப்பட்ட அந்தக் குழந்தையை நினையுங்கள்... அதிசயங்களும் சம்பவங்கள்தான் அவை ஏன் தமது வாழ்விலும் நடக்கும் என்று நம்பிக்கையோடு இருங்கள் காப்பாற்றப் படுவீர்கள்.

மகாபாரதத்தில் ஒரு கதையுண்டு ஜோடிப் புறாக்கள் மரத்தின் கிளையில் விளையாட்டில் மகிழ்ந்திருக்கும் வேளை மறைந்து கவனித்த வேடன் ஒருவன் வில்லை வளைத்து அம்பு தொடுத்து குறி வைத்தான்.

ஒரு புறா வேடனைப் பார்த்து விட்டது. "புறப்படு தப்பி மேலே ஓடுவோம்" என்று துணையை அவசரப்படுத்தியது. துணையோ "மேலே பார்; கழுகு பசியோடு நமக்காகக் காத்து. வானத்தில் வட்ட மடிக்கிறது. மேலே பாய்ந்தால் நாம் கழுகின் காலை உணவாகி விடுவோம் என்றது. கீழேயே இருந்தால் வேடனின் விருந்து ஆகா சாவதைத் தவிர வேறு வழியில்லையே நாம் பிழைக்க முடியாதே" என்று படபடத்தது.

"பொறு; எதுவும் நடக்கலாம். இதற்கு மேலும் நாம் பிழைக்க வாய்ப்புண்டு என்றே எனக்குத் தோன்றுகிறது" என்றது ஒற்றைப் புறா. எமனுடைய மேல் பல்லுக்கும் கீழ்ப் பல்லுக்கும் நடுவிலும் எட்டிக் குதிக்க இடைவெளி உண்டு என்கிற அசாத்திய துணிவு அந்தப் புறாவுக்கு.

அடுத்த கணம் குறிதப்பக் கூடாதே என்கிற வெறியில் துல்லியமாய் இன்னும் துல்லியமாய் இரண்டு புறாவையும் ஒரே அம்பில் வீழ்த்தும் ஆவலில் அம்புக் கூர் மையை விடக் கண்ணைக் கூர்மையாக்கியபடி கொஞ்சம் முன்னால் நகர்ந்தான் வேடன்.

அவ்வளவு தான் பாம்புப் புற்றில் பாதம் வைத்தான். பாம்பின் பல் பட்டது " ஆ என்று அலறியபடி வேடன் அம்பை விட குறிதவறிய அம்பு வானத்தில் வட்டமிட்ட வல்லூறின் வயிற்றில் பாயந்தது. ஒரு புறம் வேடன். மறுபுறம் கழுகு.... மரணத்தின் மேற்பல்லும் கீழ்ப்பல்லும் தனித்தனியாகத் தரையில் கிடந்தன. ஜோடிப் புறாக்கள் படபடத்து வானில் பறந்தன.

வால்மீகி இராமாயணத்தில் ஓர் அழகானவரி. இராமனைக் காணவே முடியாதோ. பிரிவு நிரந்தரமோ என்று அழுத சீதை திடீரென்று கண்ணீரைத் துடைத்தபடி திரிசடை என்கிற பெண்ணுடன் நம்பிக்கையோடு பேச ஆரம்பிக்கிறாள். அந்தத் தருணத்தில் " நம்பிக்கையைக் கைவிடாது இருப்பதே அதிர்ஷ்டத்தின் ஆதாரம்" என்று வால்மீது குறிப்பிடுகிறார்.

எந்த நேரத்திலும் பிழைக்க, தப்பிக்க, மறுபடி முளைக்க, எழ முடியும். வாய்ப்பு உண்டு. என்று உறுதியாக இரு. இந்தக் குணத்தை அரசியல்வாதிகளிடம் இருந்து கற்றாலும் தவறில்லை. கற்றுக் கொள்ளுங்கள். முடியும் என்று முயன்று பாருங்கள் வானம் வசப்படும்.

**கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாதமேடை

இளைய சமூகத்தின் விவாதத்திறனுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே

**எமது சமுதாயத்தில் இளம் பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன, மதிக்கப்படுகின்றன**

என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

**இளைஞர், யுவதிகளே!**

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
*'உதயன்',*
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பெயர் :-.............................................................
முகவரி :-...........................................................
.......................................................................
............................ ............................
திகதி கையொப்பம்




எமது சமுதாயத்தில் இளம் பெண்களின் உரிமைகள்

**மறுக்கப்படுகின்றன**

பெண்களின் உரிமைகளை இன்றைய சமுதாயம் மறுக்கின்றது. பெண்களின் முன்னேறிச் செல்லவேண்டும் என்ற ஆசை, கனவு இவையெல்லாவற்றையும் சமுதாயம் சூறையாடுகின்றன.

இன்றைய சமுதாயத்தில் ஆண்கள் பெண்ணை ஒ்ரு கவர்ச்சியான பொருளாகத்தான் பார்க்கிறார்கள். அது விலை மதிப்புள்ளதா விலைமதிப்பற்றதா என யோசிக்க மறுக்கிறார்கள். விலை மதிப்பான பெண்ணை இன்றைய கலாசாரம் விலை மதிப்பற்றதாய் பாவிக்கின்றது. இப்படிப்பட்ட உலகில் எப்படி பெண்கள் மதிக்கப்படுவார்கள்.

ஆண் குழந்தைகள் பிறந்தால் தாயானவள் தன் மார்பில் அணைத்து முத்தம் கொடுப்பாள். ஆனால் அதேசமயம் பெண் குழந்தை பிறந்தால் பெற்றவள் குழந்தையை சோகமாய் கொஞ்சுவாள். ஏனென்றால் பெற்றவள் பெண்தானே. ஆண்களுக்கு மானம் போனால் அதை மறுபடியும் பெற வாய்ப்புண்டு மறு மனைவி தேடுவார்கள். பெண்களுக்கு மானம் போனால் கண்ணீர்தான் மிச்சம். போன மானம் போனதுதான். உல கத்தின் பார்வையில் அவளை கன்னி என்று சொல்ல மாட்டார்கள். பெண்க ளின் எதிர்பார்ப்புக்கள் எல்லாவகையிலும் சிதறடிக்கப்படுகின்ற நிலையில் அவர்களது உரிமைகள் மறுக்கப்படுகின்றன் என்றே கூறலாம்.

**பொ.ஜாகினி(சந்திரன்),**
**கரணவாய், கரவெட்டி கிழக்கு.**

**மதிக்கப்படுகின்றன**

அரசியல், பொருளாதார உரிமைகள் அனைத்தையும் அடக்கியதான பாலின சமத்துவ ஆவலின் வெளிப்பாடே பெண்ணுரிமைக்கான கோட்பாடாகும். இதற்கான எதிர்ப்பே "ஆணாதிக்கம்" எனச் சுட்டப்படுகிறது. முன்னர் ஒரு காலகட்டத்தில் ஆணாதிக்க நிலை வேரூன்றி பெண்ணுரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு சூழல் காணப்பட்ட போதிலும் சமகால சூழலை நாம் நோக்கும்போது அவ்வாறான நிலை தளர்வடைந்து, மறைந்து ஆண்களும் பெண்களும் சமத்துவமாக வாழும் சம உரிமைகளை அனுபவிக்கும் நிலை காணப்படுவதை உணரமுடிகிறது. கல்வி கற்கும் உரிமைகள் மற்றும் ஏனைய அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டிருப்பதனை சனத்தொகைக் கணக்கெடுப்புகள் மற்றும் பல்கலைக்கழக அனுமதி என்பவற்றினூடாக உறுதிப்படுத்தலாம். பொருளாதார, வேலைவாய்ப்பு உரிமை தொடர்பாக நோக்கின் அங்கேயும் பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுவதில்லை என்பதை நகர வங்கிகள், கடைத் தொகுதிகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பெண் ஆளணியினரைக் கொண்டே உறுதிப் படுத்தலாம். நாடாளுமன்ற உறுப்பினராக திருமதி விஜயகலா மகேஸ்வரன் விளங்குவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால் பெரும்பாலான பெண் களின் அரசியல் தொடர்பான ஆர்வமின்மையே அவர்களால் இத்துறையில் பிரகாசிக்கவியலாது போனதற்கான காரணமேயன்றி அர்களது உரிமைமறுக் கப்பட்டதா. பெண்கள் இது தொடர்பில் அக்கறை செலுத்துமிடத்து எதிர் காலத்தில் அரசியலிலும் எம் இளநங்கையரின் ஆதிக்கத்தை எதிர்பார்க் கலாம். இதைவிட வேறு சில சின்னச் சின்ன உரிமை மீறல்களாக பெண்கள் மீதான பாலியல் தொந்தரவுகள், பஸ் பிரயாணங்களின் போதான சுரண்டல்கள் இன்ன பலவற்றைக் குறிப்பிடுகின்றனர். ஆனால் இவையெல்லாம் ஒவ்வொரு பெண்ணுக்கும் மிகப்பெரியளவில் தாக்கமளிக்கும் வகையில் தினசரி நடப்பவையல்ல. மாறாக எப்போதாவது அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்பவை. ஆகவே இவைகளைப் பெரிதுபடுத்தி உரிமைகள் மறுக் கப்படுவது போன்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்த முயலாமல் அமைதியான முறையில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை அனுபவிப்பதே சிறந்த தாகும்.

**ஜெ.அ.யூட் பிரதீபன்,**
**சங்கானை மேற்கு, சங்கானை.**

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**எமது சமுதாயத்தில்**
**இளம் பெண்களின் உரிமைகள்**

| மறுக்கப்படுகின்றன | | மதிக்கப்படுகின்றன | |
|---|---|---|---|

பெயர்: ............................................................
முகவரி: ..........................................................
..................................................................
அடையாள அட்டை இல.............................................

**உங்கள் தீர்ப்புக்களை 31.03.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.**

இளவல்கள் வட்டம்

YOUTH
இளவல்கள் வட்டம்

# வேஷம்



நாணலல்ல
நான்
புயல் - உன்
வேஷம்தான்
தென்றல் பேச்சு
என்று
தெரிந்த பின்னும்
வளைந்து கொடுக்க................

**தியா,**
**தீவகம்.**

# எரிந்து கொண்டிருக்கிறது

நீண்டு உயர்ந்து
வளர்ந்து நிற்கின்றது
''சமாதானத்தின்''
குறியீடாக
ஒலிவ் மரக்கிளைகள்!

ஆலயங்களும்
பள்ளிவாசல்களும்
ஏன்....? புதிதாய்
முளைக்கும் விகாரைகளும்
கூட.............?
புதுமெருகூட்டி
புன்னகைக்கின்றன

விடிவெள்ளி
முளை கொண்டதாய்

இத்தனையும் ''அமர்க்களமாய்''
நடக்கும் இன் நாட்டில் தான்
இன்னும் எரிந்து
கொண்டிருக்கின்றன.....?

கூரை விரிப்பின் கீழ்
குப்பி விளக்குகள்
ஏன்.....? அவர்களது!
புசிக்காத வயிறுகளும்
கூடத்தான்.



**க. வன்னிமகன்,**

# தொலைக்காட்சி

நாம் எல்லோரும் 21 ஆம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்துள்ளோம். இவ்வாறு நாம் காலடி எடுத்து வைத்ததுள்ள இந்த நவீன உலகில் விஞ்ஞான அறிவு மனிதனிடம் வளர்ந்து பெருகியுள்ளது. விஞ்ஞான அறிவு படைத்த மனிதன் தனது கண்டு பிடிப்புக்களைப் பெருக்கிக் கொண்டு போகிறான். அவ்வாறு பல முன்னேற்றகரமான முயற்சிகளில் இருந்தும் பலர் தொலைக்காட்சியில் தனது வாழ்நாளில் பெரும் பகுதியைக் கழிப்பது விரும்பத்தகாத ஒன்றாக உள்ளது. இந்தத் தொலைக்காட்சியால் பல நன்மைகளும் தீமைகளும் உண்டு. நாம் தொலைக் காட்சியைப் பார்ப்பதனால் ஏற்படும் தீமைகளை பார்த்தால் மனித வர்க்கத்தையே புதை குழியில் தள்ளிவிடும் போலுள்ளது. அதுமட்டுமல்ல குடும்பத்தில் உள்ளவர்களை விட மனைவிமாருக்கு தொலைக்காட்சியே கணவனாக விளங்குகின்றது. தொலைக் காட்சியில் இடம்பெறும் தங்கம், கஸ்தூரி, உறவுகள் போன்ற பல இவ்வாறான நாடகங்களை பார்க்கும் தாய்மார்கள் தங்களுடைய குழந்தை பசியால் துடிக்கும்போது அக் குழந்தைக்கு பால் கொடுக்கக் கூட நேரமில்லாமல் தொலைக்காட்சி நாடகங்களில் அடிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

நமது எதிர்கால சந்ததிகள் கூட சினிமா என்ற சமூகச் சீரழிவிற்கு காரணமாக இருக்கும் வைரஸ்களினுள் சென்று அழிகின்றார்கள். அதற்கு அடிமை ஆகின்றார்கள். இந்த சினிமாவில் உள்ள நல்ல விடயங்களைக் கருதாமல் அதிலுள்ள தீய விடயங்களை எடுத்துச் சமூக சீரழிவை ஏற்படுத்தி தமது வாழ்க்கையினைக் குழிதோண்டிப் புதைக்கின்றனர். இவற்றிலிருந்து நாம் ஒவ்வொருவரும் விடுபடவேண்டும்.

*(தொடரும்)*

**சி.றிக்கா,**
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகளவான மக்களை நிர்வகிக்கும் வலி. கிழக்கு பிரதேச சபை

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

வலி. கிழக்குப் பிரதேச சபையின் ஐந்து உப அலுவலகங்களிலும் பரப்பளவிலும் சபைக்கு அதிகளவு வருவாயைப் பெற்றுக் கொடுப்பதிலும் அச்சுவேலி உப அலுவலகம் முன்னிலை வகிக்கின்றது. இது 09 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியது. மக்கள்தொகை அளவிலும் அதிகமானது.

இது தெற்கே ஆவரங்கால் மாட்டொழுங்கை, மகாஜன வித்தியாலய வேலி, இராச வீதி, நவக்கிரிப்பிள்ளையார் கோயிலுக்கு வடக்குப்புறமாகச் செல்லும் வீதி, வடக்கே தொண்டமானாறு கடற்கரை, பீச்ஹோட்டல், மேற்கே வலி. வடக்குப் பிரதேச செயலர் பிரிவு, வடகிழக்கு கரவெட்டிப் பிரதேச சபை ஆகியனவற்றை எல்லையாகக் கொண்டது. பொதுச்சந்தை, பஸ்நிலையம், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, யூனியன் வங்கி, வர்த்தக வங்கி, செலான் வங்கி ஆகிய ஐந்து வங்கிக்கிளைகள், 10 பாடசாலைகள் என்பன இங்கே அமைந்துள்ளன. (1995 இற்கு பின்னர் 3 பாடசாலைகள் மூடப்பட்டுவிட்டன).

தற்பொழுது வலி.கிழக்குப் பிரதேச சபைக்குக் கிடைக்கும் வருவாயில் 80 வீதமான தொகை அச்சுவேலி உப அலுவலகப் பிரிவில் இருந்து கிடைக்கின்றது. 2011 ஆம் ஆண்டுக்கான சந்தைக் குத்தகை மூலமாக 39 இலட்சத்து 67 ஆயிரம் ரூபா பெறப்பட்ட அதேவேளையில் ஏனைய நான்கு உப அலுவலகங்களில் இருந்தும் ஒரு லட்சத்துக்குக் குறைவான தொகையே கிடைக்கப்பெற்றதாகக் கூறப்படுகின்றது. இதேவேளை அச்சுவேலி உப அலுவலகத்திலிருந்து கிடைக்கும் வருவாயில் 50 வீதம் கூட அச்சுவேலிப் பிரதேசத்தின் அபிவிருத்திக்குப் பயன்படுவதில்லையென இந்தப் பகுதி வரியிறுப்பாளர்கள் குறைகூறாமல் இல்லை.



தொகுப்பு: ஞான ஆதவன்

அச்சுவேலிக் கிராமசபை செயற்பட்ட காலப்பகுதியில் அதன் அலுவலகம் பொதுச் சந்தைக்குத் தெற்குப் புறத்தில் அமைந்திருந்தது. கிராம சபையின் அங்கத்தவர்கள் 14 வட்டாரங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்டனர். ஆரம்பத்தில் இந்தச் சபையின் தலைவர்களாக இருந்தவர்களின் பெயர்கள் கேட்டறியப்பட்டபோதிலும் கால ஒழுங்கின் பிரகாரம் அறிந்துகொள்ள முடியவில்லை. கிராம சபையில் நீண்டகாலம் உறுப்பினராக இருந்த பத்தமேனி எஸ். சிவலிங்கம் கூறிய தகவலின்படி எஸ். பொன்னையா, சூசைப்பிள்ளை யோன் இராசா, எஸ். நல்லதம்பி, தா.குணரத்தினம், சா.வீரசிங்கம், ஏ.ஆர். மனுவேற்பிள்ளை, மு. கந்தசாமி, க.சுந்தரமூர்த்தி, வே.தம்பித்துரை, சி.சபாரத்தினம், செ.கதிர்காமநாதன் ஆகியோர் தலைவர்களாகப் பதவி வகித்துள்ளனர்.

## புத்தூர் கிராமசபை

புத்தூர் கிராமசபை, புத்தூர்-சுன்னாகம் வீதிச் சந்தியில் பிரதான வீதிக்கு மேற்குப்புறமாக உள்ள வளவில் தற்பொழுது பிரதேச சபை அலுவலகம் உள்ள பகுதியில் பழைய கட்டடத்தில் செயற்படுகின்றது. இது கிராம சபை செயற்பட்ட காலப்பகுதியில் புத்தூர் கிராமக்கோட்டு வளவு என அழைக்கப்பட்டது. இங்கேயே கிராம நீதிமன்றமும் செயற்பட்டது. புத்தூர் கிராம சபைக்கு இந்த காணியைப் புத்தூரைச் சேர்ந்த பரிஸ்டர் இராமநாதன் அன்பளிப்பாக வழங்கியதாகக் கூறப்படுகிறது. அதற்கான ஆதாரங்களும் வளவில் காணப்படுகின்றன.

புத்தூர் கிராம சபையின் எல்லைப் பரப்பில் வாதரவத்தை, அச்செழு, புத்தூர் மேற்கு, புத்தூர் கிழக்கு, சிறுப்பிட்டி மேற்கு, சிறுப்பிட்டி கிழக்கு, சிறுப்பிட்டி கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கியுள்ளன. நீர்வேலி கிராம சபைக்கும் அச்சுவேலி கிராமசபைக்கும் இடைப்பட்ட பிரதேசம் புத்தூர் கிராம சபையின் ஆள்புல பரப்பாகக் கொள்ளப்பட்டது. இது 17 வட்டாரங்களைக் கொண்டதாக இருந்தது.

புத்தூர் கிராம சபையின் செயற்பாடுகளில் யாழ். மாவட்டத்தில் நிலவிய சமூக சாதிக் கட்டுப்பாட்டினால் சில சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு சில சந்தர்ப்பங்களில் ஆசனம் வழங்கமால் இருந்த நிலையும் உண்டு. அதேநேரத்தில் சமூகத்துக்கு முன்னோடியாக இது செயற்பட்டதும் உண்டு. வாதரவத்தைக் கிராமத்துக்கு வீதி அமைக்கப்படாத காலத்தில் அமைச்சர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவை வாதரவத்தைக் கிராமத்துக்கு அழைத்துச் சென்று அவரது வாகனத்தைச் சேற்றில் புதைய வைத்து வாதரவத்தைக்கு உடனடியாக வீதி அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி புத்தூர்-வாதரவத்தை வீதியை அமைத்ததும் துவிச்சக்கர வண்டியில் இரண்டுபேர் பயணம் செய்வது தடை செய்யபட்டிருந்த வேளையில் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து வசதியை எடுத்துக்காட்டி புத்தூர் கிராமச் சங்க எல்லைப்பரப்பில் துவிச் சக்கர வண்டியில் இரண்டுபேர் பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றி நடைமுறைப்படுத்தியதும் இந்தக் கிராமசபையின் குறிப்பிடத்தக்க சாதனைகளாகும். புத்தூர் கிராம சபையின் தலைவராகக் கடமையாற்றிய க.பத்மநாதன் அவர்கள் தெரிவித்த தகவலின்படி கிராம சபை செயற்பட்ட காலப்பகுதியில் பரிஸ்டர் எஸ். இராமநாதன், எஸ். ஸ்ரீ பத்ம நாதன், சி.சதாசிவம், க.பத்மநாதன், மா.கந்தையா, க.சுந்தர மூர்த்தி, தம்பி சி.நடராசா, மு. திருநாவுக்கரசு ஆகியோர் தலைவர்களாகப் பணியாற்றியுள்ளதாகத் தெரிய வருகின்றது. *(வளரும்)*

# இடைக்காடு மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையம்

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

இடைக்காடு மக்களின் வாழ்வாதார மேம்பாட்டில் இந்தச் சனசமூக நிலையத்தின் பங்கு, பணிகள் பலநோக்குச் சிந்தனையுடன் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. அதேபோன்று நிலையத்தின் வளர்ச்சிக்கும் மக்கள் தமது உழைப்பில் குறிப்பிட்ட தொகையை வழங்கி வந்துள்ளனர். ஆரம்ப காலத்தில் புகையிலைச் செய்கை, வெங்காயச் செய்கை மேம்பட்டிருந்த காலப்பகுதியில் இவற்றை அறுவடை செய்யும் போது பத்துப் புகையிலைக்குக் குறையாத புகையிலைக கட்டையும், பெரிய வெங்காயப் பிடியையும் சனசமூக நிலையத்துக்கு அன்பளிப்பாக வழங்குவது என்ற வேலைத்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் முன்னெடுக்கப்பட்டு வந்தது. பின்னர் மிளகாய் மற்றும் விவசாயப்பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்ட காலப்பகுதியில் அவற்றின் வருவாயில் குறிப்பிட்ட தொகை நிலையத்துக்கு ஒவ்வொருவராலும் வழங்கப்பட்டு வந்துள்ளது.

இவை நிலையத்தின் படிநிலை வளர்ச்சிக்கும் மக்கள் நிலையத்துடன் கொண்டிருந்த இடையறாத தொடர்புக்கும் எடுத்துக்காட்டாகக் கொள்ளப்படுகின்றன.

இடைக்காடு மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையத்தின் பணிகளை 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இளைஞர் அணி பொறுப்பேற்று உத்வேகத்துடன் செயற்பட்டது.

குறித்த காலப்பகுதிக்குப் பின்னர் ஐக்கிய முன்னணி அரசு திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா தலைமைப் பொறுப்பேற்றதை அடுத்து வெளிநாட்டுப் பொருள்களின் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டது. இதனால் யாழ்.மாவட்டத்தில் விவசாயிகளின் உற்பத்திக்கு எதிர்பாராத சந்தை வாய்ப்பும் மவுசும் ஏற்பட்டன.

மிளகாய், வெங்காயம், பீற்றூட் ஆகியவற்றின் உற்பத்தி மேம்பாடடைய நமது விவசாயிகளின் வாழ்க்கை நிலையும் மேம்பட்டது. பெருமளவில் விவசாயக் குடும்பங்கள் தமது சொந்த வருமானத்தில் நிரந்தரமானதும் ஆடம்பரமானதுமான வீடுகளை நிர்மாணித்தனர். தற்பொழுது யாழ்.மாவட்டத்தில் உள்ள வீடுகளில் 50 வீதத்துக்குக் குறையாதவை அந்தக் காலப்பகுதியில் கட்டியெழுப்பப்பட்டவையாகும். சாதாரணமாகப் பாடசாலைகளில் விளையாட்டு மைதானங்களே தோட்டங்களாக மாறி மரவள்ளி மற்றும் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டதும் வீடுகளில் பூச்சாடிகளில் மிளகாய்ப்பயிர் வளர்ந்ததும் இந்தக் காலப்பகுதியில்தான்.

இந்தக் காலத்தின் '' விவசாய வசந்தத்தை'' திட்டமிட்ட முறையில் பயன்படுத்தி இடைக்காடு மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையம் தனது உறுப்பினர்கள் மற்றும் அயல் பிரதேசங்களுக்கு பயன்தரக்கூடிய பல்வேறு பணி முன்னெடுப்புக்களை மேற்கொண்டது.

1977 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிளகாய்ப் பயிர்களையும், வெங்காயப் பயிர்களையும் புதிய பூச்சி இனங்களும் தண்டு கோதிப்புழுவும் தாக்கத் தொடங்கின.




அந்தவேளையில் மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையம் எடுத்த முன்னோடி முயற்சி யாழ்.மாவட்ட விவசாயிகளுக்குக் கைகொடுத்து உதவியது. இந்தக் கைங்கரியத்தை'' வீரகேசரி, தினகரன், டெய்லி மிரர்'' உட்பட தேசிய ரீதியிலான பத்திரிகைகள் மூன்று மொழியிலும் பாராட்டிச் செய்திகள், கட்டுரைகளை வெளியிட்டதோடு விவசாயிகளின் பேட்டிகளையும் பிரசுரித்தன.

சர்வதேச ரீதியிலான ஆய்வுகளுடன் எந்தக் கிருமிநாசினி கொண்டும் அழிக்க முடியாத தாள் கோதிப்புழுவையும் இலை அரிப் புழுவையும் அந்தப் புழுவினத்தின் குடும்பக் குழுமத்தையும் இல்லாமல் அழிப்பதற்கு ஏற்றவகையில் கொழும்புத் திட்ட நுண்ணுயிர் நிபுணர் றொக்ஸ் போலோஸ் (நியூசிலாந்து) திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலைய ஆய்வாளர் எம்.கே.ரவல், இடைக்காடு மற்றும் பிரதேசங்களில் மேற்கொண்ட ஆய்வுகளை அடுத்து "சுமிசிடின், அம்புஸ்" ஆகிய இரண்டு கிருமி நாசினிகளும் யாழ். மாவட்ட விவசாயிகளின் பாவனைக்கு அறிமுகம் செய்யப்பட்டன. இதன்மூலம் வெங்காயப் பயிர்களும் மிளகாய்ப் பயிர்களும் காப்பாற்றப்பட்டன.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவும்
## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

அன்னை மடியில்:
04,04.1932

ஆண்டவன் அடியில்:
04.04.2010



அமரர்
# முத்துலிங்கம் சிவபாக்கியம்

அம்மா என்றழைத்த எம் தெய்வமே
ஆண்டொன்று சென்றதம்மா நீர்
இவ்வுலகை விட்டகன்று
ஈராறு ஆண்டுகள் கடந்தாலும்
உம் நினைவு நீங்காது எம்மனதில்
ஊர்போற்ற வளர்த்தீர் எமை
என்றென்றும் உம் நினைவே!
ஏங்கித் தவிக்கின்றோம் இங்குநாம்
ஐயிரண்டு திங்கள் ஆனதம்மா
ஒம் என்ற சொல்லுக்கு மறுவார்த்தை இல்லையென
ஓங்கி ஒலித்திட எமை வளர்த்தீர்
ஃகேனம் கூறுவதற்குள் அடங்கியதா
உங்கள் வாழ்வு ஆண்டவன் பாதமதில்
என்றும் அவன் பாதத்தில் உமை ஆராதிக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கடந்த 04.04.2010 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத்தெய்வம் **முத்துலிங்கம் சிவபாக்கியம்** அவர்களின் முதலாம் ஆண்டுக் கிரியைகள் இன்று (24.03.2011) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

புது வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(48,20,25)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளருக்கு உரிய சேவைகளை வழங்குமா அரச மருத்துவ மனைகள்?

**செய்திக் கட்டுரை**

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பற்சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுவதற்குப் பல் வேதனையுடன் வந்த நோயாளி ஒருவர் ஐந்து மணித்தியாலயங்கள் காத்திருந்தும் மருத்துவர்கள் வெளிக்காததால் யாழ்ப்பாணம் சென்று தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகப் பத்திரிகையில் செய்தியொன்று அண்மையில் பிரசுரமாகியிருந்தது.

யாழ்ப்பாண வாசிகளுக்குத் தற்போதைய நிலையில் இதுவொன்றும் புதிய செய்தியாகத் தோன்றுவதற்கு வாய்ப்பு இல்லையென்றே கூறவேண்டும். ஏனென்றால் அவர்களில் பலர் இதுபோன்ற அனுபவங்களை ஏற்கனவே பெற்றிருக்கிறார்கள். வயிற்றிலிருந்த சிசுவின் துடிப்புக்கள் குறைந்து செல்வதை அவதானித்த கர்ப்பிணியொருவர் உடனடியாக அரச மருத்துவமனைக்குச் சென்றபோதும் 24 மணித்தியாலங்களுக்குமேல் உரிய சிகிச்சை எதுவுமின்றித் தனது குழந்தையையே இழந்து விடக் கூடிய பரிதாப சம்பவம் இந்த யாழ்ப்பாணத்தில்தான் நிகழ்ந்திருக்கின்றது. இந்தக் கர்ப்பிணிப் பெண்ணின் அபாய நிலையைக் கடைசி நிமிடத்தில் அங்கு வந்த வைத்திய நிபுணர் அவதானித்ததால் தாயும் குழந்தையும் உயிர் தப்பியுள்ளனர். இதில் வேதனையான விடயம் என்னவென்றால் அந்தக் கர்ப்பிணிப்பெண் வேதனையுடன் இருந்தவேளையில் குடிப்பதற்கு ஏதாவது தருமாறு கேட்டதற்கு அங்கிருந்த மருத்துவ மாது அவரை அடிப்பதற்குக் கையை ஓங்கியுள்ளார். இந்தச் சம்பவம் அரச மருத்துவமனைகளில் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஏனையவற்றுக்கு ஓர் உதாரணம் என்றுதான் கூற வேண்டும்.

நோயாளிகள் மணிக்கணக்கில் காத்திருக்க அவர்களுக்குச் சிகிச்சையளிக்க வேண்டிய வைத்தியர் படம் பார்த்துக் கொண்டிருந்ததாகவும் ஒரு செய்தி கூறுகின்றது. ஆனால் அரசமருத்துவமனைகளில் கடமையாற்றுவோர் அனைவரும் இவ்வாறானவர்கள் என்று கூறுவது தவறானதாகும். கடமையுணர்வுடன் தம்மை நாடிவரும் நோயாளர்களுக்குச் சேவை செய்வோரும் உள்ளனர். ஒருசிலரின் தவறான நடவடிக்கைகளால் அனைவருமே குற்றஞ்சாட்டப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவதுதான் வேதனை.

இன்று தனியார் மருத் துவமனைகள் அதிகளவில் தோற்றம் பெற்றுள்ளதால் வசதி படைத்தவர்கள் தமது சௌகரியத்திற்காக இவற்றையே நாடுகின்றனர். வசதி குறைந்தவர்கள் அரச மருத்துவமனைகளையே தஞ்சம் அடைகின்றனர். ஆகவே இந்த மக்களுக்குக் கருணையின் அடிப்படையில் சேவையாற்ற வேண்டியது அங்குள்ள அனைவரதும் கடமையாகும். இதற்கு மாற்றுக் கருத்து எதுவும் இருக்க முடியாது. கடந்த யுத்தகாலங்களின் போது பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் அரச மருத்துவமனைகளே மக்களுக்குக் முழுமையானசேவையை வழங்கி வந்தன. யாழ்ப்பாணத்திலுள்ள போதனா வைத்தியசாலை மானிப்பாய்க்கு இடம் பெயர்ந்திருந்த நிலையிலும் விமானத் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தது. ஆனாலும் மக்களுக்கான மருத்துவ சேவைகள் தொடர்ந்தன. எனவே அரச மருத்துவமனைகளின் சேவைகளை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது.

ஆனால் இன்றைய பரபரப்பானசூழ்நிலையில் மக்களின் அவசரத்திற்கேற்ப இந்த மருத்துவமனைகளின் செயற்பாடுகள் அமையாதது மக்களின் அதிருப்திக்கான காரணங்களுள் ஒன்றாக இருக்கலாம். அடுத்ததாக தனியார் மருத்துவமனைகளின் அசுர வளர்ச்சி காரணமாக மக்கள் பணம் செலவானாலும் பரவாயில்லை விரைவான, வசதியான மருத்துவ சேவையே தேவையென எண்ணி அவற்றை நாடுவதால் அரச மருத்துவமனைகள் ஏனோதானோ என்ற போக்கைக் கையாள வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கலாம்.

அத்துடன் இன்னொரு விடயத்தையும் இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும். அரச மருத்துவமனைகளில் பணிபுரியும் வைத்திய நிபுணர்களே தனியார் வைத்திய ஆலோசனை நிலையங்களில் வைத்திய ஆலோசனைகளை வழங்குவதோடு தனியாருக்குச் சொந்தமான மருத்துவமனைகளினூடாகச் சிகிச்சையையும் வழங்கி வருகின்றனர். இத் தகைய தனியார் நிலையங்களில் வைத்திய ஆலோசனைகளை வழங்கும் வைத்திய நிபுணர்கள் தனியார் மருத்துவ மனைகளினூடாகவே குறிப்பிட்ட நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்கப்படுவதை ஊக்குவிப்பதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன. ஒரு சில மருத்துவமனைகளை நடத்திவரும் தனியார் சிலர் தாமே சொந்தமாக ஆலோசனை நிலையங்களையும் நடத்தி வருவதனால் சிகிச்சை பெற வேண்டிய நோயாளர்களைத் தமது பொறுப்பிலுள்ள மருத்துவமனைகளுக்குக் கட்டாயமாக அனுப்பி வைப்பதாகவும் தெரிய வருகின்றது. இத்தகைய செயல்கள் நோயாளர்களின் தீர்மானிக்கும் சுதந்திரத்தைப் பறிப்பதாகும். இத்தகையவர்கள் வைத்திய ஆலோசனையுடன் மட்டுமே தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ளவேண்டும். அரச மருத்துவ மனையா அல்லது வேறு எந்த தனியார் வைத்தியசாலையா என்பதை நோயாளரே தீர்மானிக்கவேண்டும். இதன் மூலம் மக்கள் மத்தியில் தோன்றுகின்ற தப்பான அபிப்பிராயங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். ஆனாலும் எந்த வேளையிலும் மக்களுக்குக் கைகொடுப்பன அரச மருத்துவ மனைகளே. இதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை.' இவற்றைக் கருத்திற் கொண்டு அரச மருத்துவ மனைகளில் பணிபுரியும் மருத் துவர்கள் உள்ளிட்ட ஏனைய பணி யாளர்களும் பொதுமக்களும் விட்டுக் கொடுப்பு மனப்பான்மையுடன் செயற்படுவதன் மூலம் அவ்வப்போது ஏற்படுகின்ற சிறிய தவறுகளையும் நிவர்த்தி செய்து கொள்ள முடியும். ✱

**ராஜராஜன்**


# 5000ஆம் நாள் நினைவு அஞ்சலி

**(24.03.2011)**

## திருமதி
## சிவலிங்கம் இராசகுமாரியம்மா

(ஓய்வுபெற்ற நெசவு போதனாசிரியர்- புடைவைக் கைத்தொழில் திணைக்களம் - யாழ்ப்பாணம்)







**தோற்றம்**
**20.11.1946**

**மறைவு**
**14.07.1997**

"5000" நாள்கள் ஓடி மறைந்தது அம்மா!
எங்கள் உள்ளக் குமுறல் மறையவில்லை அம்மா!
எத்தனை ஐயாயிரம், ஐயாயிரம் நாள்கள்
ஓடி மறைந்தாலும் ஒழிந்தாலும் அம்மா!
எங்கள் உள்ளம் உங்கள் நினைவுகளை
மறவாது ஒழிக்காது அம்மா!
உங்கள் பிரிவுத்துயர் எம்மை
என்றென்றும் தொடரும் அம்மா!

"ஜனவோதயம்",
செல்வராசா அவனியூ,
அம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவால் வாடும்:
**கணவர்- செ.சிவலிங்கம்,**
**பிள்ளைகள், மருமக்கள், பேர்த்தி**
**மற்றும் குடும்பத்தினர்.**

(49,19,20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தையா தருமராசா

தோற்றம் 08 ★ 08 ★ 1933
மறைவு 03 ★ 04 ★ 2010

கலைவாணி சனசமூக நிலையத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும் முன்னாள் தலைவரும் ஓய்வுபெற்ற ஆசிரியருமான அமரர் கந்தையா தருமராசா பள்ளியில் மட்டுமன்றி எமது கிராமத்தின் அபிவிருத்தியிலும் ஆசானாய் எம்மையெல்லாம் வழிகாட்டி நின்றீர் உம்பணி தொடர்கின்றோம்.

கலைவாணி ச.ச.நிலையமும் கிராம மக்களும்,
வடலியடைப்பு.

(2334) (44-26-19)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் இராசையா இராசரத்தினம்

மலர்வு
22.07.1942

உதிர்வு
03.04.2010

திதி: அபரபக்க பஞ்சமி - 24.03.2011 (வியாழக்கிழமை)

பண்பின் திருவுருவே
அன்பால் அரவணைத்து
எமையெல்லாம் வாழவைத்தீர்
துயரத்தில் நாமின்று துவள்கின்றோம்
துடைத்தெறிய நீங்கள் இல்லை
ஓராண்டு ஓடி மறைந்திடினும்
நிலைத்திருக்கும் உம் நினைவு
எம் உயிர் உள்ளவரை

உங்கள் ஆத்மா சாந்திபெற
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

நி.முகவரி: 5ஆம் வட்டாரம், மண்கும்பான்.
த.முகவரி: இல.26, பழைய தபாற்கந்தோர் வீதி, தலையாளி, கொக்குவில்.

(ச/577127)

## கலந்துரையாடல்

தென்மராட்சி,மார்ச்.24

சாவகச்சேரி நகராட்சிமன்ற உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடல் நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மன்ற மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்என செயலாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்கீல் அறிவித்துள்ளார்.

இந்தத் தகவல் சனிக்கிழமை எனத் தவறுதலாகப் பிரசுர மாகியிருந்தது. (ற-207)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்24

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பிரிவுக்கு உட்பட்ட சமுதாய சுகாதார கழகத்தின் விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் வைத்திய அதிகாரி பணிமனை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது என்று கழகத்தின் செயலாளர் திருமதி ரஜனி மால்மருகன் அறிவித்துள்ளார். (ஒ-14)

## பொதுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச்.24

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய கரவெட்டிப் பிரதேச சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

ஓய்வுபெற்ற தபாலதிபர் வி.எஸ். வீரசிங்கம் தலைமையில் நடை பெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு விசேட விருந்தினர்களாக கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், செயலகக் கணக்காளர் வி.கிருபாகரன், யாழ். மாவட்ட அரச சேவை நம்பிக்கை நிதியத்தின் செயலாளர் பி.கமலநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (ற)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்.24

தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் 13 ஆவது வருடாந் தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில்சங்கத்தலைவர் ச.திருச்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற)

## செயலமர்வு

யாழ்.வலய பாடசாலை அதிபர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.வலயப் பாடசாலை அதிபர்களை இதில் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.ராசலிங்கம் அறிவித்துள்ளார். (எ)

## வீடு வாடகைக்கு உண்டு

அம்பாள் வீதி, மல்வம், உடுவிலில் இரண்டு மாடி வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு. நேரில் வரவும்

தொடர்பு:0778548312

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவனில் 33 பரப்பு தோட்டக்காணியும் மருத்துவ பீடத்துக்கு அருகில் 3 பரப்புக் காணியும் திருநெல்வேலி சென்றல் நேர்சிங் கோம் அருகில் 6 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
T.P.0750700667

## யாழ்ப்பாணம் மாநகர சபை

### ஆதனவரி அறிவித்தல் - 2011

2011 ஆம் ஆண்டு முதலாம் கந்தாயத்துக்கான ஆதனவரியினை 2011.03.31 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு முன்னதாக எவ்வித தண்டமும் இன்றி இவ்வலுவலகத்தில் செலுத்தலாம் எனவும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாகக் கீழ்க்குறிப்பிடப்படும் விவரப்படி வெலியாற்றுப் பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக்காணிகள் -15%

ஏனைய காணிகள்-20%

நிலுவை உட்பட 2011 ஆம் ஆண்டுக்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவைத் தொகையினைச் செலுத்தாத பட்சத்தில் மாநகர சபைக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252: பிரிவு XII, 252 (I) இன் படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

காசோலையாகச் செலுத்துவோர் " மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்" என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி யோ. பற்குணராசா (முதல்வர்)
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

FOR SALE MORIS MINOR 1000, BLACK COLOUR,
2 SRI, TOP CONDITION

Including Radio -CD-USB
YEAR OF MANUFACTURE-1958
COUNTRY OF ORIGIN-UK

**Rs. 5.5 LKS-Contact No :0778350478** (20,26,46)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்



அமரர்
நவரத்தினம் ஸ்ரீபரன்
(சின்னண்ணை)
உரிமையாளர் – சாரங்கன் லொறி.

அன்பிலே தெய்வமாய் அறிவிலே
ஆசானாய் பண்புடனே எம்மை வளர்த்து
பாசமழை பொழிந்து இன்பமுடன் நாம்
வாழ எல்லாம் எமக்களித்தாய்.
என்றும் இப்படியே வாழ்ந்திருப்போம்
என்றிருக்க இறைவன் திருவடி
சென்றனையோ! என்றும் மறவோம்.
உங்கள் நினைவால் வாழ்ந்திருப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் : 16.01.1964
மறைவு : 23.02.2011

எமது குடும்பத்தலைவனின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த, கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்ட, மலர் வளையம் சாற்றிய, அஞ்சலிகள், ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, நாளை (25.03.2011) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு



திருமதி கமலாதேவி மகாலிங்கம்
(ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்)

கடந்த (24.02.2011) வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குல விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இன்று (24.03.2011) வியாழக்கிழமை காலையும் வீட்டுக் கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (26.03.2011) சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும். அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை

கணவர்- நா.மகாலிங்கம்,
குடும்பத்தினர்.

(189) (20,26,46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புசாட்டா கடற்படைத் தளம் கூட்டுப் படைகளால் அழிப்பு

பெங்காசி, மார்ச் 24

அமெரிக்கக் கூட்டுப் படைகள் செவ்வாய்க்கிழமை நடத்திய தாக்குதலில் கடாபியின் கடற்படைத் தளம் ஒன்று முற்றிலும் அழிக்கப்பட்டது.

தலைநகர் திரிபோலியின் தென்பகுதியில் உள்ள 'பொப் அல்-அஜிசியா' என்ற கடாபியின் இராணுவ வளாகத்தின் மீது செவ்வாய்க்கிழமையும் தாக்குதல் நடத்தப்பட்டது. திரிபோலியின் புசட்டா கடற்படைத் தளம் செவ்வாய்க்கிழமை நடந்த ஏவுகணைத் தாக்குதலில் முற்றிலுமாக அழிக்கப்பட்டது.

"கடாபியை ஆட்சியைவிட்டு இறக்குவது அமெரிக்காவின் நோக்கம் அல்ல" என்று ஜனாதிபதி ஒபாமா திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

திரிபோலிக்கு கிழக்கே சுமார் 10 கி.மீ. தொலைவிலுள்ள புசாட்டா கடற்படைத் தளமும் சேதமடைந்தது என உள்ளூர் தொலைக்காட்சியில் செய்தி வெளியானது. அல் ஜஸீரா தொலைக்காட்சியும் இதை உறுதிப்படுத்தியிருக்கிறது.

கடாபியின் ஆதரவாளர்கள் நிறைந்த சுவாரா, சிர்டே, சேபா, அஜ்டாபியா ஆகிய நகரங்களில் கூட்டுப்படை விமானங்கள் குண்டு மழை பொழிந்தன. ஏவுகணைத் தாக்குதலும் நடத்தப்பட்டது. இதில் விமான, ஏவுகணை எதிர்ப்பு வசதிகள் நாசமடைந்தன. இந்தத் தாக்குதல் மூலம் லிபியாவில் சுமார் ஆயிரம் கி.மீ. தொலைவுக்கு விமானங்கள் பறக்க முடியாதபடி தடை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என அமெரிக்க படைத் தளபதி ஒருவர் கூறியிருக்கிறார்.

கடாபியின் முக்கிய படைத் தளங்கள் தாக்குதலில் சேதமடைந்திருக்கின்றன. இதனால், கிளர்ச்சியாளர்களின் மையமான பெங்காஸி நகரை நோக்கி இராணுவம் முன்னேறுவது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் தாக்குதல் நடத்துவது இராணுவத்துக்கு இயலாத காரியம் என்றும் அமெரிக்கா கூறியிருக்கிறது.

இதனிடையே, பழங்குடிகள் அதிகம் வசிக்கும் சேபா நகர் மீது கூட்டுப்படைகள் குண்டுகளை வீசியதில் பொதுமக்கள் அதிக அளவில் கொல்லப்பட்டனர் என லிபிய அரசின் செய்தித் தொடர்பாளர் மூசா இப்ராஹிம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

திரிபோலிக்கு கிழக்கே 214 கி.மீ. தொலைவிலுள்ள மிஸ்ருதா நகரைக் கைப்பற்றுவதற்கு கடாபியின் இராணுவத்துக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடும் சண்டை நடந்து வருகிறது என்று அல்-ஜஸீரா கூறியிருக்கிறது. ஆனால், மூன்று நாள்களுக்கு முன்பே அந்த நகரைக் கைப்பற்றி முகாமிட்டிருக்கின்றனர் என கடாபி படையின் செய்தித்தொடர்பாளர் கூறியிருக்கிறார்.

போர் நிலைவரம் பற்றி ஜேர்மனியில் இருந்தபடியே பென்டகன் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த அமெரிக்க படைப்பிரிவுத் தளபதி கார்ட்டர் ஹாம், "கடாபி, அவரது குடும்பத்தினர் இருக்கும் இடம்பற்றி போதுமான தகவல்கள் இல்லை. அவர்கள் மீது தாக்குதல் நடத்துவது கூட்டுப்படையின் நோக்கமும் அல்ல" என்று தெரிவித்தார்.

## அமெரிக்க போர் விமானம் நொருங்கியது

திரிபோலி, மார்ச் 24

திரிபோலியிலுள்ள இராணுவ நிலைகள் மீது கூட்டுப்படை கள் குண்டுவீசி அழித்து வருகின்றன. மேலும் போராட்டக்காரர்களிடமிருந்து இராணுவம் மீட்ட மிஸ்ரதா, அஜ்தாபியா நகரங்களின் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றன.

போராட்டக்காரர்கள் பிடியிலிருக்கும் லிபியாவின் 2ஆவது பெரிய நகரமான பெங்காசியில் அமெரிக்காவின் எவ்-15 ஜி ரக போர் விமானம் பறந்துகொண்டிருந்தது. செவ்வாய்க்கிழமை திடீரென அங்குள்ள வயல் வெளியில் விழுந்து நொறுங்கியது.

அதில், விமானி உட்பட 2 பேர் இருந்தனர். அவர்கள் புத்திசாலித்தனமாக வெளியே குதித்து உயிர் தப்பினர். இந்த விபத்துக்கு எந்திர கோளாறுதான் காரணம் எனக் கூறப்பட்டுள்ளது.

## லிபியாவிலுள்ள இலங்கைத் தூதரகம் மூடப்பட்டது

பேர்ளின், மார்ச் 24

லிபியாவில் நிலவும் பாதுகாப்பற்ற நிலை காரணமாக லிபியத் தலைநகரை திரிபோலியி லுள்ள இலங்கைத் தூதரகம் கடந்த திங்கட்கிழமை முதல் தற்காலிகமாக மூடப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள் லிபியா மீது வான் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதையடுத்து உருவாகியுள்ள பதற்ற நிலை காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டது என்றும் -

லிபியாவில் இலங்கைத் தூதராகப் பணியாற்றிய சுதந்த கனேகம ஆராச்சி மற்றும் தூதரக அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர். என்றும், இலங்கைக்கும் லிபியாவுக்கும் இடை யில் கடந்த 2008 ஆம் ஆண்டில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இருதரப்பு உறவின் பலாபலனால் அதே ஆண்டிலேயே லிபியாத் தலை நகர் திரிபோலி யில் முதற் தடவை யாக இலங் கைத் தூதரகம் நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.(ஒ-22-5)

## துபாயில் 5 வயதுச் சிறுவன் ஒரே நாளில் லட்சாதிபதியானான்

துபாய், மார்ச் 24

துபாயில் வசிக்கும் 5 வயது இந்தியச் சிறுவன் ஒருவன் அதிர்ஷ்ட குலுக்கலில் பரிசு விழுந்ததை அடுத்து ஒரே நாளில் லட்சாதிபதியானார் .

இப்ராஹிம் பகிமுதீன் ஷேக் என்ற அந்தச் சிறுவனுக்கு துபாயின் தேசிய கடன் பத்திர கழகத்தின் சார்பில் பரிசுச் சீட்டுக்கான பெப்ரவரி மாத குலுக்கலில் இந்தப் பரிசு விழுந்துள்ளது. இவரது குடும்பம் இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டது.

இவரது பெயரில் தந்தை ஷேக் கடன் பத்திரக் கழகத்தில் பத்திரங்களை வாங்கியுள்ளார். அவ்வாறு வாங்கியவர்களில் குலுக்கல் முறையில் மாதா மாதம் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவருக்குப் பெரும் தொகை பரிசாக அளிக்கப்படும். பெப்ரவரி மாத குலுக்கலில் பகிமுதீனுக்கு பரிசு விழுந்துள்ள தகவல் அவரது தந்தைக்கு அந்த நிறுவனத்தால் தொலை பேசியில் தெரிவிக்கப்பட்டது. இதைக் கேட்டதும் முதலில் நம்ப மறுத்து பின் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தார் அவரது தந்தை ஷேக்.

இது குறித்து அவர் கூறுகையில், "முதலில் யாரோ தொலைபேசி அழைப்புச் செய்து விளையாடுகிறார்கள் என்று நான் அதை நம்பவில்லை. எதிர் முனையில் பேசிய நபர், தான் தேசிய கடன் பத்திரக் கழகத்தின் தலைமைச் செயல் அதிகாரி என்று சொல்லி தெளிவாக விளக்கிய பின்தான் நான் அதை நம்பினேன். அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தேன். என் மகனின் எதிர்காலத்துக்கு உதவும் வகையில் இந்தப் பணத்தை கடன் பத்திரங்களில் முதலீடு செய்வேன்' என்றார்.

இது குறித்து அச் சிறுவன் கூறுகையில், "இந்தப் பணத்தை வைத்து வகை வகையான உயர்தர இனிப்புகள் வாங்கிச் சாப்பிடுவேன். பொம்மைகள் வாங்குவேன். மேலும் என் குடும்ப முன்னேற்றத்துக்கு செலவழிப்பேன். ஒரு பகுதியை சேமித்து வைப்பேன்" என்றார்.

துபாய் தேசிய கடன் பத்திரக் கழகத்தில் சுமார் 6 இலட்சத்து 10 ஆயிரம் வாடிக்கையாளர்கள் உள்ளனர். அவர்களில் மாத குலுக்கலில் பரிசு வென்றவர்களில் 63 சதவீதம் பேர் துபாய் வாழ் வெளிநாட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெடித்த அணுஉலை அருகே மீண்டும் ஜப்பானில் பூகம்பம்

ஜப்பானில் கடந்த 11ஆம் திகதி கடும் பூகம்பம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட ஆழிப்பேரலையால் பலத்த சேதம் ஏற்பட்டது. 18 ஆயிரம் பேர் பலியாயினர். புகுஷிமாவிலுள்ள அணுமின் நிலையத்தில் அணுஉலைகள் வெடித்துச் சிதறின. இதனால் அங்கு கதிர்வீச்சு அபாயம் உள்ளது. எனவே, வெடித்த அணு உலைகளை குளிர்விக்கும் பணி நடந்து வருகிறது.

இருந்தும், அதிலுள்ள 2ஆவது, 3ஆவது அணுஉலைகளிலிருந்து மீண்டும் புகையும், வாயு கசிவும் ஏற்பட்டுள்ளன. அவற்றை சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் அப்பகுதியில் புதன்கிழமை (நேற்று) மீண்டும் பூகம்பம் ஏற்பட்டது. இதனால் மக்கள் கடும் பீதி அடைந்தனர். இந்தப் பூகம்பம் ரிச்டர் அளவு கோலில் 6 புள்ளிகளாகப் பதிவானது என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

## வெளிநாட்டு மாணவர் எண்ணிக்கையை குறைப்பதற்கு பிரிட்டன் அரசு முடிவு

லண்டன், மார்ச் 24

பிரிட்டனில் கல்வி பயில வரும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

உயர்கல்வி படிப்பதற்காக ஒவ்வொரு நாட்டிலிருந்தும் பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு மாணவர்கள் செல்வது வழக்கம். மேலும் அந்த நாடுகளுக்குச் செல்லும் மாணவர்கள் முறையான விசா, முறையற்ற விசா ஆகியவை மூலமும் செல்வதால் இரு நாடுகளிடையேயான உறவில் சிக்கல் எழுகின்றது.

இதனை தவிர்ப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்ள பிரிட்டிஷ் அரசு முயன்று வருகிறது. உலகம் முழுவதிலுமிருந்து ஆண்டுதோறும் மூன்று லட்சத்திற்கும் மேற்பட்டோர் உயர் கல்வி படிக்க பிரிட்டனுக்கு வருகின்றனர்.

இந்த எண்ணிக்கையை குறைப்பதற்காக முதற்கட்டமாக வெளிநாட்டு மாணவர்களைக் கவர்ந்திழுக்கும் போலியான கல்வி நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றன. வெளிநாட்டு மாணவர்களில் ஏழு பேரில் ஒருவர் போலியான கல்வி நிறுவனங்களில் பயின்று வருகின்றார் என ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

வெளிநாட்டிலிருந்து வரும் மாணவர்களுக்கு ஆங்கில அறிவு கட்டாயமாக இருக்கவேண்டும்.

வெளிநாட்டு மாணவர்களில் குறிப்பாக சீனா, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து வரும் மாணவர்களின் ஆங்கில அறிவு குறைவு காரணமாக பிரிட்டிஷ் மாணவர்களுடன் ஒன்றுசேர முடியாமல் அவர்களுடன் பழக முடியாமல் தனித்து விடப்படுகின்றனர்.

இதனால் இனவெறி போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதனை தவிர்க்கும் விதமாக விசா வழங்கும் படிவத்தில் ஆங்கில அறிவு கட்டாயம் என்ற விதியை சேர்க்கும் பட்சத்தில் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும் என்று அரசு நம்புகிறது.

## இஸ்ரேல் முன்னாள் ஜனாதிபதிக்கு ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனை

டெல்அவிவ், மார்ச் 24

இஸ்ரேலின் முன்னாள் ஜனாதிபதி மோஷி கத்சாவ் (வயது -65). இவர் கடந்த 2000ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக பதவி வகித்தார்.

அப்போது தனது அலுவலகத்தில் பணிபுரிந்த ஒரு பெண் ஊழியரையும், 2 பெண்களையும் கற்பழித்தார் என இவர் மீது முறைப்பாடு கூறப்பட்டது.

இதைத் தொடர்ந்து அவர் மீது டெல்அவிவ் நகரிலுள்ள நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை 3 நீதிபதிகள் அடங்கிய குழு விசாரித்தது. இந்த வழக்கில் செவ்வாய்க்கிழமை தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதில் பெண்களை கற்பழித்த கத்சாவுக்கு 7 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. மேலும் ரூ.11 இலட்சம் அபராதமும் விதிக்கப்பட்டது. இது தவிர கற்பழிக்கப்பட்ட பெண்களுக்கு தலா ரூ. 3 இலட்சம் நஷ்டஈடு வழங்கும்படியும் உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கில் 2 நீதிபதிகள் அவருக்கு எதிராகவும், ஒரு நீதிபதி ஆதரவாகவும் தீர்ப்பளித்தனர். இதற்கிடையே, இந்த தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யவும் அவருக்கு வாய்ப்பு வழங்கட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவ விருத்தியுடன் கல்வியின் எல்லைகளை மாற்றல்

"Paradig Shift" என்ற ''கட்டளைக் கோள்மாற்ற'' விரைவான முகாமைத்துவ அபிவிருத்தியில் கடந்த காலங்களைப் போல் அல்லாது கல்வி தனது எல்லைகளை விரைவாக விஸ்தரித்துக் கொண்டிருக்கின்றது. குறித்த நாட்டின் அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாகவும் கல்வி உள்ளது. உலக அளவில் விளப்பற்றாக்குறைகள் மத்தியிலும் வேகமாக வளர்ந்து வரும் நாடுகளின் எண்ணிக்கையிலிருந்து இது தெளிவாகின்றது.

கிரமமான கல்விச் செயற்பாடுகளின் மூலம் மனிதத்துவ தகைமைத்திறனும் மனித மூலதனமும் விருத்தியுறுவதே இதற்கான பிரதான காரணமாகும். நாட்டு மக்களின் சிந்தனையில், நடத்தைகளின் உளப்பாங்கில் சுற்றாடல் ஏற்படுத்தும் தாக்கமே கல்வி என்ற புதிய எண்ணக்கருவாக விருத்தியடைந்து வருகின்றது. இதற்கு முகாமைத்துவமே சிறந்த வழியைக் காட்ட முடியும். மற்றவர்களைக் கொண்டு செய்விக்கும் கலை முகாமைத்துவம் எனப்படுகின்றது.

கல்விமாணி, (SLEAS) தெரிவுப் பரீட்சைகளுக்கான விடயங்கள் இங்கு கலந்தாய்வு செய்யப்படுகின்றன

முகாமைத்துவம் பற்றிய நவீன கருத்துக்கள் இன்று விரைவாகப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. முகாமைத்துவ அபிவிருத்தியின் பகுதிகளாகப் பாடசாலைகள் உள்ளன.

இலங்கைப் பாடசாலைகளின் முகாமைத்துவம் தொடர்பாக அண்மைக்கால ஆய்வு அறிக்கை (கல்வி பிரேரணை தொடர்பான ஆவணம்) பின்வரும் நிலைமைகளை எடுத்துக்காட்டுகின்றன.

| பாடசாலைகளின் புள்ளி விவரம் | | |
|---|---|---|
| வகை | 2005 | 2009 |
| பாடசாலைகளின் எண்ணிக்கை | 9,732 | 9,662 |
| தேசிய பாடசாலைகள் | 324 | 330 |
| மாகாணப் பாடசாலைகள் | 9,399 | 9,332 |
| ஆசிரியர்களின் எண்ணிக்கை | 189,234 | 212,683 |
| நவோதய பாடசாலைகளின் எண்ணிக்கை | 388 | 515 |
| கட்டணம் செலுத்தும் தனியார் பாடசாலைகளின் எண்ணிக்கை | 26 | 36 |
| கணினி ஆய்வுகூடங்களுடன் அமைந்த பாடசாலைகளின் எண்ணிக்கை | 1,147 | 2,033 |
| ஆங்கில மொழிமூல பாடசாலைகளின் எண்ணிக்கை | 359 | 449 |
| மாணவர்/ ஆசிரியர் வீதம் | 21 | 18 |

மூலம்: கல்வி அமைச்சு

* பாடசாலைகளின் அதிகாரங்கள் பகிரப்படாமையும் நவீன முகாமை எண்ணக்கருக்களான பங்கேற்பு - தீர்மானம் மேற்கொள்ளல், முரண்பாட்டு முகாமை நுட்பங்கள் பிரயோகிக்கப்படாமை.
* நவீன மனிதவள முகாமை எண்ணக்கருக்களைப் பின்பற்றாமல் ஒரு சில ஆசிரியர்கள் சொல்வதைக் கேட்கும் அதிபர்கள்.
* மிக நெருக்கடியான வகுப்பறைகளும், வளங்களின் பற்றாக்குறைகளும் இருக்கின்ற வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தாமையும்.
* வளப்பகிர்வுக் குறைபாடுகளும் பிரச்சினைகளும்.
* முறையான முகாமைத்துவ சிகிச்சைமுறை, மேற்பார்வை, மனிதத்துவ அணுகுமுறைகள் பின்பற்றப்படாமை தொடர்ந்து பாரம்பரிய சிவப்பு நாடா முறைமையைப் பிரயோகித்தல், நெகிழ்ச்சித்தன்மை முழுமையாக உள்ளமையும்- இல்லாமையும், கோட்டம், வலயம், மாகாணம், கல்வியமைச்சின் முகாமைத்துவக் குறைபாடுகள்.
* ஆசிரியர்களின் வரவின்மையும் நேரம் பிந்தி வருகின்றமையும் வகை கூறல் இன்மைகளும் ஆலோசனை வழிகாட்டல் வேலைத்திட்டத்தை முறையாகப் பின்பற்றாமையும்
* நிர்வாகம் - நிதி சார்ந்த பிரச்சினைகள்
* மாணவர்களின் குறைவான அடைவு, வரவின்மைகள், இடைவிலகல், திரும்பக்கற்றல், விழுமியம்- ஒழுக்கம் தொடர்பான குறைபாடுகள்.
* தம் பிள்ளைகள் சார்ந்த கல்வி, பாடசாலை தொடர்பாடலில் பெற்றோர் பங்களிப்புக் குறைவுகள்.
* மெல்லக் கற்கும், விசேட தேவையுடைய, உட்படுத்தல் கல்விப்பிரயோகங்கள், பரிகாரக்கற்பித்தல் செயலாற்றுகைகளின் போதாமைகள்.
* பாடசாலை நேரசூசி, வேலைத்திட்டங்கள், ஆசிரியர்- அதிபர்- பாடசாலை தரக் கணிப்பீட்டுக் குறைபாடுகள்.
* பாடசாலை மட்ட தரக்கணிப்பீடு - பாடசாலை மட்ட (ஆகார முகாமைத்துவம்) சமூக வளங்களைப் பாடசாலைக்குக் கொண்டு வருதலில் குறைபாடுகள் நவீன தொழில் நுட்ப - ஆங்கில இரண்டாம் மொழி விருத்தியின்மை.

மேற்குறிப்பிட்ட ஆய்வறிக்கைப் பிரச்சினைகளைச் சில பாடசாலைகள் எதிர்கொண்டு தீர்வுகளைக் கண்டு மாணவர் பெறுபேறுகள் , கல்வித் தரங்களை உயர்த்தி சாதனைகள் செய்தும் வருகின்றன. ஆனாலும் பெரும்பாலான பாடசாலைகளில் இப்பிரச்சினைகளைச் சமாளிக்க முடியவில்லை. எனவே இப் பாடசாலைகளை மீள் ஒழுங்கு செய்வதுடன் சிறந்த முகாமைத்துவ நடைமுறைகளைப் பின்பற்ற வழிகாட்டப்பட வேண்டியவையாகவுள்ளன. அத்துடன் ஒவ்வொரு பாடசாலையும் தனித்துவமானதும் ஏனைய பாடசாலைகளுடன் ஒப்பிட முடியாததும் வேறுபட்ட கலாசாரப் பண்பாட்டுச் சூழலைக் கொண்டதுமான சிக்கலான நிறுவனங்களாகக் காணப்படுகின்றது. அது ஒவ்வொன்றைப் பற்றியும் முறையாக ஆய்வு செய்து அவற்றின் தேவைகள் தனிப்பட்ட ரீதியில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

### எதிர்காலம் நோக்கி 1000 பாடசாலைகள் வேலைத்திட்டம்

பாடசாலை முறைமையில் பொருத்தமாக மாற்றுதல், எல்லாப்பாடசாலைகளுக்கும் வளங்களைப் பெற்றுக் கொடுத்தல் என்பவற்றுடன் தற்போது இயங்கும் பாடசாலைகளில் 1000 பாடசாலைகள் உயர் முன்னேற்றமடைந்த கரு பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யப்பட்டுத் தற்போதைய பிரபல பாடசாலைகளின் சுமையைக் குறைத்து தரவுள்ள, பிராந்திய ரீதியான, கஷ்டப்பிரதேசப் பாடசாலைகள் இட அமைவுப் படத்தின் மூலம் தெரிவு செய்யப்படும். இரண்டாம் நிலைப் பாடசாலைகள் ஒவ்வொன்றுக்கும் அதி குறைந்தது 3 ஆரம்பப் பாடசாலைகள் கிளைப் பாடசாலைகளாக இருக்கும். ஆனால் அனைத்து ஆரம்பப் பாடசாலைகளும் இரண்டாம் நிலைப்பாடசாலைகளில் இருந்து பிரிக்கப்பட்டு வேறாக்கப்படும்.

இந்த ஆயிரம் பாடசாலைகளில் தற்போது விருத்தி காணும் இசுறு பாடசாலைகள், தேசிய பாடசாலைகள், நவோதயாப்பாடசாலைகள் இணைக்கப்படும். இங்கு நவீன முகாமைத்துவ, மனிதவள விருத்தி செயன்முறைகள் நடைமுறைப்படுத்தப்படும். இப் பாடசாலைகளிலும் 2009 ஆம் ஆண்டிலிருந்து 'கல்வித்துறை அபிவிருத்திச் சட்டகமும் நிகழ்ச்சித் திட்டமும்' வேலைத் திட்டம் நடைமுறைப் படுத்தப் படுகின்றது. இது கல்வியில்

| ஒவ்வொரு மாகாணத்திலும் அபிவிருத்தி செய்யப்படவிருக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை -(1000) | | | |
|---|---|---|---|
| மாகாணம் | எண்ணிக்கை | மாகாணம் | எண்ணிக்கை |
| சப்ரகமுவ | 113 | ஊவா | 88 |
| வட மத்திய | 82 | வடமேற்கு | 127 |
| கிழக்கு | 103 | வடக்கு | 90 |
| தென் | 110 | மத்திய | 153 |
| மேல் | 134 | மொத்தம் | 1000 |

1. சம வாய்ப்பு
2. பண்புத் தரம்
3. வினைத் திறன் மிக்க வளப்பகிர்வு
4. நல் ஆளுகை என்பவற்றை ஏற்படுத்தும். பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் பண்புசார் விருத்தியை ஏற்படுத்தும். இது தேசிய கல்வித்தரத்தை உயர்த்தும்.

### தேசிய கல்வித்தரம்

தேசிய கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு ஏனைய சமூக பொருளாதார வளர்ச்சி வேலைத்திட்டங்களை விரைவாக உயர்த்த வேண்டியுள்ளது. தற்போது கல்வித்துறையில் பின்னடைவானோர் வறுமை யானவர்களாகவே காணப்படு கின்றார்கள்.

| விவரம் | | 2005 | 2010 | 2016 |
|---|---|---|---|---|
| சனத்தொகை | மில்லியன் | 19.7 | 20.7 | 21.9 |
| மொ.தே.உ | USD bn | 24.4 | 49.1 | 98.0 |
| தலா வருமானம் | USS | 1,241 | 2,375 | 4,470 |
| பண வீக்கம்- | % | 5.7 | 7.0 | 4.0 |
| ஏற்றுமதிகள் | USS bn | 6.3 | 8.0 | 18.0 |
| சர்வதேச வர்த்தக வருமானம் | USS bn | 15.2 | 21.3 | 44.1 |
| சர்வதேச சேவைகள் வருமானம் (தேறியது) | USS bn | 0.3 | 0.6 | 2.6 |
| சுற்றுலாத்துறை வருமானம் | USS bn | 0.3 | 0.5 | 2.5 |
| மாற்றல்கள் வருமானம் | USS bn | 2.0 | 3.8 | 7.0 |
| மின்சாரத்திற்கான பிரவேசம் | % | 75.0 | 88.0 | 100.0 |
| தொலைத்தொடர்புப் பிரவேசம் | % | 23.6 | 85.0 | 100.0 |
| தொழிற்படையில் பெண்கள் | % | 32.6 | 34.3 | 40.0 |
| வேலையின்மை | % | 7.2 | 5.3 | 3.2 |
| சிசு மரணங்கள் | 1000 பிறப்புக்கு | 11.2 | 10.9 | 4.0 |
| தாய் மரணங்கள் | 1000 பிறப்புக்கு | 0.45 | 0.39 | 0.2 |
| வறுமை | % | 15.2 | 7.6 | 4.2 |
| ஆரம்ப பாடசாலை உட்சேர்க்கை | % | 95.0 | 98.0 | 100.0 |
| கல்வியறிவு வீதம் பொது - (15-24 Years) | % | 95.0 | 97.0 | 98.0 |
| கல்வியறிவு வீதம் - கணினி | % | 9.7 | 20.3 | 75.0 |

எனவே தேசிய கல்வித்தரத்தில், அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூகத்துக்காகச் சமூக பெற்றோர்- மாணவர் அபிவிருத்தி- விழிப்புணர்ச்சி வேலைத்திட்டங்கள் முக்கியம் பெறுகின்றன. பாடசாலைக்கல்வியில் பண்புத் தரத்தை ஏற்படுத்த சுட்டிகளும் நியதிகளும் நடைமுறைக்கு வந்துவிட்டன. இவை மாணவர்களின் முறைசார், முறைசாரா முறையில் செயற்பாடுகளாக விருத்தியடையும்.



பா.தனபாலன்
இணைப்பாளர்- யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி.

I. முறைசார் கல்வி- பாடசாலை முகாமையினுள் வகுப்பிற்கு ஏற்ப கல்வி

II முறைசாரக்கல்வி - பாடசாலைக்கு வெளியே வெவ்வேறு பாடநெறிகள் மூலம் பெறப்படும் ஆற்றல்கள்

III முறையில் கல்வி- பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இன்ரநெற் போன்ற ஊடகங்கள் மூலம் பெறப்படும் தேர்ச்சிகள்.

இவ்வகையில் பாடசாலைகளின் பண்புத்தரத்தை விருத்தியாக்கி நடைமுறைப்படுத்தப் பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் பண்புசார் விருத்தி III என்ற அறிக்கைக் கையேடு மூலம் பாடசாலைகளில் மத்திய - மாகாண வலய, கோட்ட, வெளியக முகாமையாளர்களும் அதிபர், உப அதிபர் , பகுதித்தலைவர்கள் முகாமைக் குழு ஆகிய உள்ளக முகாமையாளர்களும் சமூகத்துடன் இணைந்து பாடசாலைகளைப் பண்புத்தர முகாமை விருத்தி நிலையங்களாக மாற்றும் செயலாற்றுகைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (29ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாநிதி, ஜெயலலிதா, விஜயகாந்த் இன்று வேட்புமனு



சென்னை, மார்ச். 24

தி.மு.க. தலைவர் முதல்-அமைச்சர் கருணாநிதி, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் ஆகியோர் இன்று வேட்புமனுத் தாக்கல் செய்யவுள்ளனர்.

இதனையொட்டி அவர்கள் போட்டியிடும் தொகுதிகளுக்கு செல்கின்றனர். முதலமைச்சர் கருணாநிதி நேற்றுக் காலை காரில் திருவாரூர் புறப்பட்டார். மாவட்ட எல்லையில் அவ ருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது.

திருவாரூர் தொகுதியில் போட்டியிடுவதற்கான மனுவை இன்று முற்பகல்11 மணிக்கு தாக்கல் செய்யவுள்ளார். திருவாரூர் மாவட்ட உதவிச் செயலாளரும் தேர்தல் அதிகாரியுமான ஸ்ரீராமனிடம், முதலமைச்சர் கருணாநிதி வேட்பு மனுவை கொடுக்கிறார்.

இன்று இரவு தஞ்சை திலகர் திடலில் நடைபெறும் பிரசார பொதுக்கூட்டத்தில் பேசவுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஸ்ரீரங்கம் தொகுதியில் போட்டியிடும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா மனுத் தாக்கல் செய்வதற்காக, இன்று காலை சென்னையில் இருந்து விமானமூலம் திருச்சி செல்லவுள்ளார். அவருக்கு திருச்சி விமானநிலையத்தில் அ.தி.மு.க.வினர் உற்சாக வரவேற்பு அளிக்கின்றனர்.

பின்னர் ஸ்ரீரங்கம் கோயிலுக்குச் சென்று அங்கு நடைபெறும் சிறப்பு பூசையில் கலந்து கொள்கிறார். அதனைத் தொடர்ந்து இன்றுமுற்பகல் 11 மணியில் இருந்து ஒரு மணிக்குள் ஜெயலலிதா மனுத்தாக்கல் செய்யவுள்ளார்.

திருச்சி மாவட்டச்செயலாளர் அலுவலகத்தில் உள்ள நிலசீர் திருத்த ஆணையர் அலுவலகத்தில் ஸ்ரீரங்கம் தொகுதியில் போட்டியிடுவதற்கான மனுவைக் கொடுக்கவுள்ளார்.

இதனைத்தொடர்ந்து இன்று மாலையில் ஸ்ரீரங்கம் தொகுதியில் பிரசாரத்தைத் தொடங்குகிறார். தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தும், இன்று மனு தாக்கல் செய்யவுள்ளார். விழுப்புரம் மாவட்டம் ரிஷிவந்தியம் தொகுதியில் போட்டியிடும் அவர் இன்று காலை விழுப்புரம் செல் கிறார்.

நண்பகல் 12 மணி அளவில் விழுப்புரம் மாவட்ட செயலாளர் அலுவலகத்துக்குச் செல்கிறார். அங்குள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலஅதிகாரி அலுவலகத்தில் விஜயகாந்த் மனுத் தாக்கல் செய்கிறார். தொடர்ந்து இன்று மாலையில் விழுப்புரத் தில் பிரசாரத்தை தொடங்குகிறார்.

பெரும்பாலான வேட்பாளர்கள் இன்று மனுத் தாக்கல் செய்கின்றனர். தலைவர்கள் பிரசார சுற்றுப் பயணமும் தொடங்குகிறது. எனவே இன்று முதல் தேர்தல்களம் மேலும் சூடு பிடிக்கும்.

வேட்பாளர்கள் மனுத் தாக்கல் செய்யும் இறுதித் தினம் நாளை மறு தினம்சனிக்கிழமை ஆகும்.

இதேவேளை மனுக்களை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை வாபஸ் பெறலாம். பரிசீலனைக்குப் பின்னர் எதிர்வரும் 30 ஆம் திகதி மாலை வேட்பாளர் இறுதிப்பட்டியல் வெளியாகும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# விளம்பரப் படத்தில் அனுமதியின்றி ரகுமானின் பாடல்: நடிகை மீது வழக்கு



பிரபல இந்திய நடிகை கத்ரினா நடித்து அண்மையில் வெளியான விளம்பரப் படமொன்றில் பயன்படுத்திய இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானுக்குச் சொந்தமான ஸ்லம்டொக் மில்லினர் பாடல் பயன்படுத்தப்பட்டது.

ஆனால் இந்தப்பாடலைப் பயன்படுத்துவதற்கு தன்னிடம் அனுமதி பெறப்படவில்லை எனக் கூறிய ரகுமான் அந்த நடிகை மீது வழக்குத்தொடர முடிவு செய்துள்ளார்.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

பிரபல இந்திய நடிகை கத்ரினாகைப் நடித்த விளம்பர படமொன்று சமீபத்தில் வெளியானது- இதில் ஸ்லம்டொக் மில்லினர் பாடலை பயன்படுத்தி இருந்தனர். இந்த விளம்பரத்தைப் பார்த்த இசையமைப்பாளர் ஏ. ஆர்.ரகுமான் அதிர்ச்சியானார்.

பாடலின் முழு உரிமையும் ரகுமானிடம் உள்ளது. பயன்படுத்த அனுமதி பெறவில்லை. இதையடுத்து அந்தப்படத்துக்கு எதிராக வழக்குத் தொடர ஏ. ஆர். ரகுமான் முடிவு செய்துள்ளார்.

இது தொடர்பான சட்ட விவகாரங்களைக் கவனிக்கும் படி தனது சட்டத்தரணிகளுக்குஉத்தர விட்டு உள்ளார்.

ரஹ்மான் தரப்பில் இதுதொடர்பாக கூறியவை வருமாறு:

விளம்பரப் படத்தைத் தயாரித்தவர்களிடம் எனது சட்டத்தரணிகள் தொடர்பு கொண்டு விளக்கம் கேட்டு வருகின்றனர்.

விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நடவடிக்கை கத்ரீனாவுக்கு எதிரானதல்ல.

காப்புரிமையை மீறும் வகையில் இந்த விளம்பரம் தயாரித்தவர்கள் மீதுதான்என்று தெரிவித்துள்ளனர்.

## இதுவும் ஒரு (இராஜ) தந்திரமோ...?



சட்டப்பேரவைத் தேர்தலில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் துணைமுதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் போயஸ் தோட்டத்தில் நடிகர் ரஜினிகாந்தை நேரில் சந்தித்து வாழ்த்துப்பெற்றபோது.

# 'ஸ்பெக்ட்ரம்' ஊழல் விவகாரம்: சி.பி.ஐ. அலுவலகத்துக்கு தீவிரவாதிகள் மிரட்டல்

டில்லி, மார்ச் 24

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் சி.பி.ஐ. அதிகாரிகள் அலுவலகம் மீது தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் சதித்திட்டம் மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

2ஜி ஸ்பெக்ட்ரம் நிதி ஒதுக்கீட்டில் ரூ. 1.76 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டது தொடர்பாக சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பல்வாவுக்கும் மும்பை நிழல் உலக தாதாவான தாவூத் இப்ராகிமுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கூறப்பட்டது. தற் போது பாகிஸ்தானில் பதுங்கி இருக்கும் தாவூம் இப்ராகிம், அங்கு இயங்கும் தீவிரவாத குழுக்களுக்கு உதவி செய்து வருகிறார்.

அவருக்கும் பல்வாவுக்கும் நீண்ட நாள்களாகத் தொடர்பு இருப்பதாக உளவுத் துறையும் சந்தேகிக்கிறது. இந்த நிலையில் பல்வாவிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தி வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தாவூத் இப்ராகிமின் ஆதரவு பெற்ற தீவிரவாதிகள் டில்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தை தகர்க்க சதித்திட்டம் தீட்டி இருப்பது தெரியவந்துள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் ஆவணங்களை அழிக்கும் வகையில் இந்தத் தாக்குதலுக்கு திட்டமிடப்பட்டுள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. தீவிரவாதிகளால் ஏற்பட்டுள்ள இந்த அச்சுறுத் தலை பெயர் வெளியிட விரும்பாத சிரேஷ்ட சி.பி.ஐ. அதிகாரி ஒருவர் உறுதி செய்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்:

டில்லி சி.பி.ஐ. அலுவலகத்தை தாவூத் ஆள்கள் தாக்க திட்டமிட்டு இருப்பதாக மும்பை உளவு துறையிடம் இருந்து எங்களுக்கு தகவல் வந்துள்ளது. எனவே நாங்கள் முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றார்.

அவர் மேலும் கூறுகையில், உலகிலுள்ள சி.பி.ஐ. அலுவலகங்கள் உஷார்படுத்தப் பட்டுள்ளன. விசாரணை குழுவில் உள்ள அனைவரையும் எச்சரிக்கையாக இருக்கும்படி உத்தரவிட்டுள்ளோம் என்றார். தீவிரவாதிகளின் மிரட்டலைத் தொடர்ந்து டில்லி சி.பி.ஐ. தலைமை அலுவலகத்தில் பாதுகாப்பு அதி கரிக்கப்பட்டுள்ளது.

# வாக்குறுதிகளை அள்ளி வீசியுள்ளார் தேர்தல் அறிக்கையில் கருணாநிதி

இலங்கைக்கு 1970களில் தாரை வார்க்கப்பட்ட கச்ச தீவை மீண்டும் திரும்பப் பெறுவதற்கு மத்திய அரசை தமது கட்சி வலியுறுத்தும் என்று தமிழக முதலமைச்சர் கருணாநிதி வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

அத்துடன் இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கொல்லப்படுவதற்கு விரைவில் ஓர் தீர்வினைக் காண்பதாகவும் அவர் வாக்குறுதியளித்தார்.

தமிழகத்தில் நடைபெறவிருக்கும் சட்ட மன்றத் தேர்தலை முன்னிட்டு திராவிட முன்னேற்றக்கழகம் தனது கட்சியின் தேர்தல் அறிக்கையை கடந்த சனிக்கிழமை வெளியிட்டது.

அந்த அறிக்கையில் மு.கருணாநிதி பல்வேறுபட்ட வாக்குறுதிகளை அள்ளி வீசியுள்ளார்.

இலங்கைக்கு 1970களில் தாரை வார்க்கப்பட்ட கச்ச தீவை மீண்டும் திரும்பப் பெறுவதற்கு மத்திய அரசை தமது கட்சி வலியுறுத்தும் எனத் தெரிவித்திருந்தார். அத்துடன் இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கொல்லப்படுவதற்கு விரைவில் ஓர் தீர்வினைக் காண்பதாகவும் அவர் வாக் குறுதியளித்தார்.

எல்லோரது கவனத்தையும் ஈர்க்கும் வண்ணம் மீனவர் கொலைகள், துன்புறுத்தல்கள், கைதுகள் என்பன வழமையான சம்பவங்களாக அமைந்துள்ளன. இதற் கெல்லாம் ஓர் தீர்வு கச்சதீவை திரும்பப் பெறுவதேயாகும். இது குறித்து ஆலோசித்து மத்திய அரசுடன் இதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படும் எனவும் கூறினார். மேலும் கடல் எல்லைகளை நிர்ணயம் செய்யாது இரு நாடுகளும் பரந்த சமுத்திரத்தின் கடற்பரப்பை பகிர்ந்து கொள்கின்றன. இரு தரப்பு மீனவர்களும் விதி முறைகளை அனுசரியாது அசமந்தப் போக்குடன் மீன் பிடிக்கு வலை வீசுகின்றனர்.

இரு தரப்பினரும் அடிக்கடி வழிதவறி ஒருவரது எல்லைக்குள் [illegible]வர் செல்வதும் அத்துடன் சிறைகளில் வருடக் கணக்கில் செலவிடுவதும் தொடர்ச்சியான சம்பவங்களாக அமைந்துவிட்டன.

எமது கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு மாதாந்தம் கிலோ ஒரு ரூபா வீதம் வழங்கப்படும் 35 கிலோ அரிசியை இலவசமாக வழங்குவோம்.

அத்துடன் பெண்களுக்கு தமது கட்சி கடந்த முறை தொலைக் காட்சிப் பெட்டி விநியோகித்தது போன்று இம்முறை 'கிறைண்டர்கள்' மற்றும் தாழ்ந்த குல மாணவர்களுக்கு 'லப்ரொப்' உம் விநியோகிக்கும் எனவும் கூறினார். அது மட்டுமன்றி தேர்தல் அறிக்கை, 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு இலவச பயண வசதிகளையும் வழங்குவதாக வாக்குறுதியளிக்கின்றது.


கடந்த 2006 தேர்தலில் சபையில் காங்கிரஸ் 34 ஆசனங்களை மாத்திரமே வைத்திருந்த வேளையில் தி.மு.க பெருபான்மையான ஆசனங்களை வென்றது. 234 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத் தேர்தல் ஏப்பிரல் 13 இல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
அம்பாள் துணை

# யாழ்ப்பாணம் புத்தூர் கிழக்கு
# வீரவாணி திருவருள் மிகு ஸ்ரீ நாச்சிமார் அம்பாள் திருக்கோயில்
# (சப்த கன்னிகள் ஆலயம்)

## புனராவர்த்தன அஷ்டபந்தன ஸப்ததச (17) குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்திப் பெருவிழா



### வீரவாணி சப்த கன்னிமார் ஆலய வரலாறு

வலிகாமம் கிழக்கு வடமராட்சி, தென்மராட்சி என்பவற்றை முனைகளாகக் கொண்டு நான்கு பக்கமும் நீரால் சூழப்பட்ட வகையில் புத்தூர் கிழக்கு வீரவாணிப்பதியில் அழகுற அமைந்த அம்பாள் ஆலயம் பண்டைய காலத்தில் கல் வழிபாட்டில் தோற்றமெடுத்து வழிபாடியியற்றிய பெருமைக்குரியது. 1953ஆம் ஆண்டு ஆலயத்துக்கென கட்டடம் அமைக்கப்பட்டு பாரம்பரிய முறைப்படி பூஜைகள் நடத்தப்பட்டது. பொங்கல் திருக்குளிர்த்தி முறையில் வழிபாடியற்றப்பட்டு வந்த இவ்வாலயம் ஆனது 1983ஆம் ஆண்டு நான்காவது பரம்பரை தர்மகர்த்தாவான திரு. நாகலிங்கம் நவரத்தினம் அவர்களின் அயராத உழைப்பினால் ஆகம முறைப்படி புனரமைக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது அன்று தொடக்கம் பிராமணக் குருமார்கள் பூஜைகளை நிறைவேற்றி வந்தார்கள். அதன் பின்னர் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக பொலிவிழந்த இவ் ஆலயத்தை தர்மகர்த்தா மீண்டும் பொலிவுறச் செய்து மூல மூர்த்திக்கும் பரிவார மூர்த்திகளான விநாயகர், சந்தான கோபாலர், சுப்பிரமணியர், சப்த கன்னிகள், வைரவர், வீரபத்திரர் முதலான தெய்வங்களுக்கும் தனித்தனி ஆலயங்கள் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நிகழ்த்தப்படுகின்றது. 24.03.2011 வியாழக்கிழமை அன்று நடைபெறும் புனராவர்த்தன அஷ்ட பந்தன சப்த தச குண்ட பட்ச உத்தமயாக மகாகும்பாபிஷேகமானது ஈழநாட்டின் சைவாச்சாரியார்களினால் நெறிப்படுத்தப்பட்டமை சிறப்பாகும், கும்பாபிஷேகம் காணும் அன்னை நாச்சிமார் சப்தகன்னிகளின் திருவருட் கடாட்சம் வியாபிப்பதாக!

### ஆலய ஆதீன தர்மகர்த்தாவின் செய்தி



அண்ட சராசரங்களை எல்லாம் ஆட்டிப்படைக்கும் நவக்கிரக நாயகி அன்னை நாச்சிமார் சப்த கன்னி மனோன்மணி அம்பாளது புனராவர்த்தன அஷ்ட பந்தன சப்த தச குண்ட பக்ஷ உத்தமயாக மகா குடமுழுக்கு பெருவிழா நடைபெற அன்னையின் கடைக் கண் பார்வையினால் திருவருளும் குருவருளும் கைகூடியுள்ளது. குட முழுக்கு விழாவைச் சிறப்புற நடத்துகின்ற குருமார்களுக்கும் ஆலய தர்மகர்த்தா சபையினருக்கும் அம்பிகையின் அடியார்களுக்கும் அம்பாளின் பாதார விந்தங்களை சிரம்தாழ்த்தி பிரார்த்தித்து அனைவரும் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

நா.நவரத்தினம்

### கும்பாபிஷேக பிரதம குருவின் அருளாசிச் செய்தி



புத்தூர் கிழக்கு வீரவாணி ஸ்ரீநாச்சிமார் சப்தகன்னி ஜெகன் மாதா மனோன்மணி அம்பாளுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் இன்று நடைபெறும் ஸப்ததச குண்டபக்ஷ குடமுழுக்கு பெருஞ்சாந்தி விழா வெகு சிறப்பாக நடைபெற அன்னை அருள் பாலித்துள்ள அடியேன் இப் பெருஞ்சாந்தி விழாவில் முன்னின்று நடத்த அவள் திருவருள் கிடைத்த பெருமை எமது மூதோரை நாடும். ஊர் செழிக்க பக்தர்கள் சிறந்து விளங்க சபையினர் சிறப்புற்று வாழ அன்னையின் ஆசியை வேண்டுகின்றேன். ஏனைய சிவாச்சாரியார்களும் என்னுடன் இணைந்து இந்த ஸப்ததச குண்டபக்ஷ கும்பாபிஷேகத்தில் இறைபணி செய்தமை மெச்சக் கூடிய விடயம். அவர்களுக்கும் ஆதி நாயகி அருள் பாலிப்பாராக.

பிரதம சிவாச்சாரியார், சிவாகமகிரியா கலாநிதி சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ணக்குருக்கள்
பிரதம குரு, ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோயில் கொம்பந்தறை

### தவறிவிட்டது

27/4, கஹவத்தை அம்பதன்ன எனுமிடத்தைச் சேர்ந்த நாகூர்பிச்சை முகமட்சிபான் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை என்பன யாழ்ப்பாண பஸ்தரிப்பு நிலையத்துக்கும் ஒட்டுமடத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
தொடர்பு:-
இல. 90, பஜார் வீதி, (ஜும்மா பள்ளிவாசல் வீதி), யாழ்ப்பாணம். 0777144130, 0217201282.

### உடனடி வேலைவாய்ப்பு

கொழும்பைத் தலைமையாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு அலுவலக உதவியாளர்கள் தேவை.
தொடர்பு:- 117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0215670100, 021 2222730.

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

வேலணை மேற்கைச் சேர்ந்த கந்தன் பஞ்சாட்சரம் NIC NO (182030953 V) மற்றும் கூனந்தோட்டம் சமரபாகு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சின்னராசா அசந்த NIC NO (876033186 V) தேசிய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தொடர்புகளுக்கு:- மோகன் 0771042280.

### வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர்கள்

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு, 30 வயதுக்குட்பட்ட, சுறுசுறுப்பாகச் செயற்படக் கூடிய இளைஞர்கள் வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றார்கள். மோட்டார் சைக்கிள் ஓட்டத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
0215672200, 0773427843

### உடனடி வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் D.M.I. Multi National Company க்கு முகாமைத்துவ பயிற்சிக்காக பின் வருவோர் தேவை -
Supervisor, Asst.manager, Manager
(12 பேர் மட்டும்)
6 மாத காலப் பயிற்சியும் இதன் போது 15,000/- 25,000/- வரை பெற முடியும். O/L, A/L தகைமையுடையோர் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதி இல்லை.
மேலதிக விவரங்களுக்கு: 0775566224, 0775713331




### மரண அறிவித்தல்

#### கிருஷ்ணபிள்ளை சிவனேஸ்வரி

தொல்புரம் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவனேஸ்வரி (23.03.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், கௌரியின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2011) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ச.இராமலிங்கம்பிள்ளை (சகோதரன்).
மடத்துப்பிள்ளையார் கோயிலடி, தொல்புரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றது நாவாந்துறை சென்.மேரிஸ்

யாழ்ப்பாணம்,மார்ச்22

மர்ஹூம் அலியார் ரமீஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் வசமானது.

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ்.ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திய மர்ஹூம் அலியார் ரமீஸ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒஸ்மானியாக் கல்லூரியின் ஜின்னா மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

ஆட்டம் தொடங்கியது முதல் இரு அணியினரும் மிகவும் உற்சாகத்தோடு மோதிக்கொண்டனர்.

ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது இரு அணிகளும் தலா ஒரு கோலினைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் இருந்தது. இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரு அணியினரும் தத்தமது அணியின் வெற்றிக்காக ஆட்டத்தினை வேகப்படுத்தி எதிரணியினரின் கோல் பரப்பை



ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டது. சென்.மேரிஸ் அணி எதிரணியின் கோல் கம்பத்தை நோக்கிப் பந்தை செலுத்தியபோதும் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக கோல் காப்பாளரின் முயற்சியினால் கோல் அடிக்கும் முயற்சி தடுக்கப்பட்டது. ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் இந்த நேரத்தில் இரண்டாவது கோலைப் பெற்றது.

ஆட்ட முடிவில் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கியது இறுதி ஆட்டத்தில் சிறந்த வீரர்களாக சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த கி.ஜெக்சன், ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மதிராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு கிண்ணம் வழங்கப்பட்டது.

சிறந்த கோல்காப்பாளராக ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மு.விவேக் தெரிவு செய்யப்பட்டார்.

முதலாமிடத்தைப் பெற்ற சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணிக்கு வெற்றிக் கிண்ணமும் 15 ஆயிரம் ரூபா பணப்பரிசும் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணிக்கு வெற்றிக்கிண்ணமும் 10 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் அன்ரனிப்பிள்ளை கலந்து கொண்டார். கௌரவ விருந்தினராக யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் முபாரக் கலந்து கொண்டார்.

(த-23)

## நல்லூர் பாடசாலைகளின் போட்டிகள் வெள்ளிமுதல்

யாழ்ப்பாணம்,மார்ச்24

நல்லூர் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலைபந்தாட்டப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை, மறுதினம் சனிக்கிழமை ஆகிய நாள்களில் காலை 8.30 மணிக்கு ஸ்ரான்லிக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை மென்பந்தாட்டப் போட்டி திங்கள், செவ்வாய் கிழமைகளில் பிற்பகல் இரண்டு மணிக்கு ஸ்ரான்லிக் கல்லூரியில் இடம்பெற்றது.

15,17,19 வயதுப் பிரிவினருக்கான கரபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 30ஆம், 31ஆம் திகதிகளில் முத்துத்தம்பி மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

## கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி சம்பியன்

வடமராட்சி,மார்ச்24

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியின் இறுதிப் போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

இம்மோதலில் இரு கழகங்களும் விறுவிறுப்பாக ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் கோல் எதனையும் போடாமையினால் ஆட்டம் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவுற்றது.

இதனைத் தொடர்ந்து வெற்றியைத் தீர்மானிக்க வேண்டி சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் 5:4 என்ற கோல் கணக்கில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

(த-236)

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழங்கங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

**மதுரா அழகுக்கலைப் பயிற்சி நிலையம்**
(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)



பேசியல், மேக்கப், மணப்பெண் அலங்காரம், சாறி டிரெசிங், ஸ்ரெயிட்னிங், பேமிங், திரெட்டிங், வக்சிங், ஸ்மூத்திங், பெடிக்கியூர், மெனிக்கியூர், ஹெயாக்கலறிங், நெயில் ஆர்ட், பிளக்ஸ் பொட்டீற்மெண்ட், ஹெயார் ட்றீட்மெண்ட், சாறிவேக்ஸ், கேக் ஐசிங், தையல் ஆகிய பயிற்சிகள் நடைபெறுகின்றன. பயிற்சியில் இணைய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும். அனுமதிக்கட்டணம் (1000.00) ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்!
பயிற்சி நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்!
0213214013, 0779362642
வீரபத்திரர் கோயிலடி, கோப்பாய்.

**மரண அறிவித்தல்**

**செல்வி ஜெயசொரூபி பஞ்சலிங்கம்**



தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி ஜெயசொரூபி பஞ்சலிங்கம் (22.03.2011) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை பஞ்சலிங்கம் மற்றும் கமலாதேவி தம்பதியரின் செல்வப் புதல்வியும் ஜெயசீலன் (சுவிஸ்), ஜெயந்தினி, ஜெயரூபன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சுகுமாரன், பானுரேகா (சுவிஸ்), சுமதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் கரிகரன், கீர்த்தனா, திவாகரன், வசீகரன் ஆகியோரின் சிறியதாயும் மோகனா, தரணிகா ஆகியோரின் மாமியும் தியாகலிங்கம், பத்மாவதி ஆகியோரின் பெறாமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2011) வியாழக்கிழமை ந.ப.12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தாவடி வடக்கு, கொக்குவில்.

தகவல்: தாய், சகோதரர்கள்

(2340) (44-)

**தவறிவிட்டது**

கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கை சேர்ந்த ஜெகதீஸ்வரன் சசிக்குமார் என்பவரது தேசிய அடையாள அட்டை (800921848V) சாரதி அனுமதிப் பத்திரம், வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பன 18.03.2011 அன்று புளியம்பொக்கணை சந்திக்கும் நாகதம்பிரான் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.
0779228903, 0213211787

**வீடு விற்பனைக்கு**

ஸ்ரேசன் றோட் கோண்டாவில் விநாயகர் கோயிலுக்கு அருகில் 2½ பரப்பில் 4 அறைகள், 2 கோல், கிச்சின், அற்றாச் பாத்றூம், ரொயிலட், பைப் வசதிகள், சுற்றிவர சுற்றுமதில் என அனைத்து வசதிகளும் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0773273125, 0777404987 (2336)

**விற்பனைக்கு**

I) WPLE xxxx தொடர் இலக்கமுடைய மிற்சுபிசி பெற்றோல் வடி வாகனம் (ஜப்பான்),
II) தன்னியக்க ஐஸ்கிறீம் உற்பத்தி செய்யும் ஐஸ்கிறீம் மெசின் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776007775, 0775833045
(அ/5771224)

**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**
உத்தியோகபூர்வ முடிவுகள்

1279 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மீனம் 20 31 44 54 22-03-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 249,142 | 20/- | 4,982,840/- |
| 2 இலக்கங்கள் | 22,824 | 40/- | 912,960/- |
| 1 இல. + லக்கினம் | 22,569 | 60/- | 1,354,140/- |
| 2 இல. + லக்கினம் | 2,104 | 200/- | 420,800/- |
| 3 இலக்கங்கள் | 610 | 1000/- | 610,000/- |
| 3 இல. + லக்கினம் | 52 | 10,000/- | 520,000/- |
| 4 இலக்கங்கள் | 03 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,400,740/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 664 | | 830,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 297,968 | | 10,231,240/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,112,550/-

**இரண்டாவது வாய்ப்பு**

வெற்றி இலக்கங்கள்

இடபம் 05 17 33 53

ஜக்பொட் பரிசு ரூபா. 300,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 661 | 500/- | 330,500/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 300,000/- | 300,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 664 | | 830,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதாந்த ஆய்வரங்கம்

கொழும்புத்துறை,மார்ச்.24

அபிவிருத்திகான சமூக அமைப்புகளின் வலையமைப்பு என்னும் நிறுவனத்தி னால் நடத்தப்படும் மாதாந்த ஆய்வரங்கம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அரசடி வீதியில் அமைந்துள்ள சொண்ட் நிறுவன செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வேலை வாய்ப்பை உருவாக்குவதில் விவசாயத்துறையின் பங்கு என்னும் கருப் பொருளில் விவசாயத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் ஆய் வுரையை நிகழ்த் துவார்.

யாழ்.குடாநாட்டில் கற்றோர் சமூகத்தில் சிந்தனையைத் தூண்டி அபிவிருத்தியில் அவர்களின் பங்களிப்பையும் பெறும் பொருட்டு மாவட்டம் தழுவிய பொதுப் பிரச் சினைகளை கருப் பொருளாகக் கொண்டு இவ்வாறான மாதாந்த ஆய்வரங்குகள் நடத்தப்படுவதை நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ற-135)

# மரண அறிவித்தல்கள்

## றெஜினோல்ட் மரிய அசெம்ரா (வனிதா)



இல.10, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட றெஜினோல்ட் மரிய அசெம்ரா (வனிதா) (21.03.2011) திங்கட்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24.03.2011) வியாழக்கிழமை பி.ப 4 மணிக்கு பிரான்ஸில் நடைபெறும். அன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் றக்கா வீதியிலுள்ள புனித திரேசம்மாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.10, கோயில் வீதி ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
சுரேந்திரன், சாந்தன்.

## நாகமுத்து இளையதம்பி (ஓய்வுபெற்ற ஆசிரியர்)



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், இளவாலை முள்ளானையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து இளையதம்பி நேற்று (23.03.2011) புதன்கிழமை இறைபதம் எய்தி விட்டார்.

அன்னார் செல்லப்பிள்ளையின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, வைத்திலிங்கம்(ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் செல்லப்பா, வேலுப்பிள்ளை, சண்முகசுந்தரம், கனகம்மா (ஓய்வு பெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கிரிஷாநிதி (டென்மார்க்), கிருபாநிதி (ஆசிரியை, யா/சென்.ஜோண். பொஸ்கோ வித்தியாயலம்) சசிகலா, ஐங்கரன்(கனடா), விக்னேஸ்வரன் (ஆசிரியர், கிளி/இராமநாதபுரம் மேற்கு, அ.த.க பாடசாலை)ஆகியோரின் பாசமிகு தந்தையும் லோகநாதன் (டென்மார்க்), சந்திரராஜா(ஆசிரியர், யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்), சுதா (கனடா), விஜிதா (ஆசிரியை கிளி/இராமநாதபுரம் கிழக்கு, அ.த.க பா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தேனுகா, சாளினி, சுகனி, சிவஸ்திகன், கவின், கர்ணி, கஷ்மிதா, மதுமிதா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2011) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் இல.482 நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

*482, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
கிருபாநிதி சந்திரராஜா (மகள்).

## திருமதி நீற்றா ஞானதீபம் சுகந்தநாதன் (நிர்மலா ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை)



டேவிற் றோட் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி நீற்றா ஞானதீபம் சுகந்தநாதன் (நிர்மலா சுகந்தநாதன், ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை) (21.03.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோர்ஜ் கிறிஸ்ரி சுகந்தநாதனின் அன்பு மனைவியும் செல்வன் அருணனின் (யாழ்ப்பாணம் தொலைத் தொடர்பு நிலையம்) பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான ஜேக்கப் செபஸ்தியாம்பிள்ளை - மரியபாக்கியம் (ஆசிரியை) தம் பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அருட் சகோதரி அசம்ரீனா (A.C), அருட் சகோதரி மரிய கொறற்றி (SCJM), திருமதி மேரி அஞ் சலா தியாகேசன் (லண்டன்), அன்ரன் சென்ற் பீற்றர் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான யோர்ஜ் டேவிற் - லில்லி இன்பமலா தம்பதியரின் மூத்த அன்பு மருகளும் காலஞ்சென்ற சாமுவேல் இன்பநாதன் மற்றும் மேரி அருந்ததி (ஓய்வுபெற்ற கணக்காளர், உடுவில் மகளிர் கல்லூரி), டானியல் சவுந்தரநாதன் (கனடா),டேவிற் பத்மநாதன் (போதகர் A.O.G சபை, சுன்னாகம்), றிச்சேட் அமிர்தநாதன், டெபோறா சந்திரவதான (நீர் கொழும்பு), போல் ஜெயநாதன் (மேற்பார்வையாளர், உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் பாலசிங்கம் (நீர் கொழும்பு), சித்திரா (கனடா), அமிர்தா, வசந்தா ஆகியோரின் பாசமிகு மச்சாளும் பிறிசிலலா, றெபேக்கா, ஏஞ்சலா தனிக்கா (கனடா), யோடன் (மருத்துவத்துறைப் பெலாருஸ்), யோடன்னா (மருத்துவத் துறை பெலாருஸ்), ஜெவ், ஜெவ்னி (மாணவர்கள், இன்ரநாசினல் பாடசாலை, மானிப்பாய்), யோய் ஜெயறீரா (மாணவி, உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (26.03.2011) சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு இல. 19, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் இருந்து யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மைத்துனர்கள்,
செல்வி அருந்ததி யோர்ஜ், சவுந்தரநாதன்,
போதகர் பத்மநாதன், அமிர்தநாதன்,
திருமதி டெபோறா பாலசிங்கம், போல் ஜெயநாதன்.

"இன்ப பவனம்"
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

**DMI**
*ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
**A/L 2013**
புவியியல் - N.BABU
சனி, ஞாயிறு ...
* புதிய அனுமதிகள் வழங்கப்படும்
* புதிய மாணவர்களுக்கு ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் வேலாயுதம் செல்லத்துரை

(ஓய்வுபெற்ற ஊழியர், சிமெந்து தொழிற்சாலை)



தோற்றம்
28.10.1947

மறைவு
03.04.2010

குலமோங்க உறவுகளை
கூடி மிகக் களித்து
நலமாக நாம் வாழ
நல் வழியும் காட்டி
நிலமீதில் நீர் வாழ்ந்த
வாழ்வதனை எங்கள்
உளமென்றும் மறக்குமோ
உலகுள்ள வரைக்கும்
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.

மருத்திக்கலட்டி,
சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

இவரின் பிரிவால் துயருறும்:
சரஸ்வதி(மனைவி), சிவகுமார் (மகன்- நோர்வே),
சந்திரிகா(மகள்-இலங்கை),
சசிகுமார் (மகன்-இலண்டன்), விஜயகுமார்(மகன்-லண்டன்)

# மரண அறிவித்தல்

## திருமதி குணசேகரன் சசீந்திராதேவி (சசி)



யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொட்டடியைப் பிறப்பிடமாகவும், இந்துக்கல்லூரி வீதி, வடலியடைப்பு பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணசேகரன் சசீந்திராதேவி (சசி) நேற்று (23.03.2011) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை (மாயவர்) மற்றும் அன்னபூரணம் தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கனகேஸ்வரி தம்பதியரின் மருமகளும் குணசேகரனின் (ஒக்ஸ் பாம்- வவுனியா) அன்பு மனைவியும் மதுஷனின் (சென்.ஜோன்ஸ் கல்லூரி - தரம் 7) பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2011) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் வடலியடைப்பு இந்துக் கல்லூரி வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 1.30 மணியளவில் தகனக்கிரியைக்காக பண்டத்தரிப்பு, விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. குணசேகரன் (கணவர்.)

*இந்துக்கல்லூரி வீதி,*
*வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.*

# மரண அறிவித்தல்

## கதிரவேலு பவானந்தன்



அனலைதீவைப் பிறப்பிடமாகவும், காரைநகர் களபூமியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பவானந்தன் (21.03.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.03.2011) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தில்லை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளி கோயிலடி, களபூமி,*
*காரைநகர்.*

தகவல்:
குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*மண்ணின் மடியில்*
*21 ★ 04 ★ 1946*



*கண்ணன் திருவடியில்*
*03 ★ 04 ★ 2010*

## அமரர் வல்லிபுரம் பரம்சோதி

திதி:அபரபஞ்சமி

பாசம் என்ற பதத்தை புரிந்து
பண்பு எனும் இலக்கணத்தில்
எங்களை நுழைத்து
எங்கள் உயர்வில் சிரித்து நின்று
சிறப்போடு எமை வாழவைத்த தெய்வமே!
ஆண்டொன்றல்ல ஆயிரம் சென்றாலும்
உங்கள் நினைவுகளுடன்.....

135,செஞ். பெனடிற் வீதி, நல்லூர்.
தொ.பே.இல.0772380186

மனைவி,
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்லாமிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வாய்க்கிழமை மாலை தோன்றி உரையாற்றினார். இந்த வளவில்தான் இவரது கட்டளைப் பணியகம் சிதைந்து கிடக்கின்றது.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

''இஸ்லாமிய நாடுகள் மீது புதிய சிலுவைப் போரை சிலுவைப் போராளிகள் ஆரம்பித்துள்ளார்கள். இந்தப்போரின் இறுதியில் நாங்களே வெற்றிவாகை சூடுவோம்'' என்றும் சூளுரைத்தார்.

''எங்கும் இஸ்லாம் நீடூழி வாழ்க. அனைத்து இஸ்லாமிய இராணுவங்களும் எமது போரில் பங்கேற்க வேண்டும். எல்லா சுதந்திர மக்களும் இதில் இணைய வேண்டும். நாமே இறுதியில் வெற்றிவாகை சூடுவோம்'' - என்றும் அறைகூவல் விடுத்தார்.

கூட்டுப்படைகளின் குண்டுவீச்சு நடவடிக்கையை கடாபி வெகுவாகக் கண்டித்தார். ''ஒருபோதும் நாம் சரணடைய மாட்டோம்; மண்டியிடமாட்டோம்; எம்மைக் கடந்து மறையும் பிரயத்தனங்களுக்காக நாம் அச்சம் கொள்ள மாட்டோம்'' என்றும் கடாபி அழுத்தமாகக் குறிப்பிட்டார்.

''அவர்கள் ஏவுகணைகளைச் சரமாரியாக ஏவலாம். அவற்றைக் கண்டு நாம் ஆரவாரம் செய்வோம். அவை பிசுபிசுத்துவிடும் குறுகிய காலத்தில் அவர்களைத் தோற்கடித்து விடுவோம். இதற்கு நீண்டகாலம் தேவைப்படாது. அவர்களை நாம் வெற்றிகொள்வோம்'' என்றும் -

''அதி சக்திவாய்ந்த ஆகாயப் பாதுகாப்பு, எமது மக்களே ஆவர். இங்கே அந்த மக்கள் இருக்கிறார்கள். இவர்கள் மத்தியிலேயே கடாபி இருக்கிறார். இது தான் தன்னிகரற்ற ஆகாய பாதுகாப்பு'' என்றும் அவர் மேலும் சொன்னார்.

மும்மர் கடாபி தொடர்ந்து பேசுகையில், ''அடிவானத்தை அடித்துச் செல்லும் புயலைக் கண்டும் நான் அஞ்சமாட்டேன்; அழிவுக்கு குண்டு பொழியும் விமானங்களுக்கும் நான் அஞ்சமாட்டேன்; நான் எதற்கும் எதிர்த்து நிற்பேன். - என்றார்.

''எனது வீடு இங்கே இருக்கின்றது. அதுதான் இந்தக் கூடாரம். நான்தான் அதன் சொந்தக்காரர். நாளையை சிருஷ்டிப்பவர். நான் இங்குதான் இருக்கிறேன். வேறு எங்குமல்ல, இங்குதான்'' என்றும் அவர் உரத்த குரலில் முழங்கினார்.

கடாபியின் ஆதரவுப் படைகளுக்கு எதிராகத் தாக்குதல்களை மேற்கொள்ள மேற்கத்தேய போர் விமானங்கள், லிபியா மீது முந்நூறுக்கும் மேற்பட்ட தடவைகள் பறந்துள்ளன. 162க்கு மேற்பட்ட ஏவுகணைகளை ஏவியுள்ளன. எனினும், கிளர்ச்சியாளர்களின் படைகளுக்கு எதிராக கடாபியின் ஆதரவுப் படைகள் தொடர்ந்தும் மூர்க்கமாக சண்டையிட்டு வருகின்றன.

கடாபியின் உரை பின்னர் அரச தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. (ஒ-சி)

## 2 இலங்கையருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கருதி அவர்களுக்கு புகலிடம் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கிறிஸ்மஸ் தீவில் உள்ள 89 பேர் நாடுகடத்தப்படுவர் என்று ஆஸ்திரேலியப் பிரதமர் கெவின் ரூட் தெரிவித்துள்ளார்.

விமானம் அல்லது படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசித்த புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு ஒரே விதமான சட்டங்களே அமுல்படுத்தப்படும் என அந்நாட்டு நீதிமன்றம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கண்ணீர் அஞ்சலி



யாழ் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் ஆசிரியை திருமதி கிருபாநிதி சந்திரராசா அவர்களின் அன்புத் தந்தை

### நாகமுத்து இளையதம்பி

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள்.




## முகாமைத்துவ....

(24ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பாடசாலையில் பண்புத்தர முகாமை விருத்தியின் அனுகூலங்கள்**

1.பாடசாலையில் சகல உள்ளக மதிப்பீட்டுச் செயன்முறைகளையும் தேசிய தரக் கோட்பாடுகளுக்கமைய சுயமாக ஆற்றிக் கொள்வதுடன் அம்மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்ட தகவல் முறைமையைக் கட்டியெழுப்புதல்

2.உரிய பண்புத்தர முகாமைப்படி செயலாற்றுகையில் அதிபர், ஆசிரியர் உள்ளிட்ட சகல ஆளணியினரும் தொழி லில் தேர்ச்சி விருத்தியும் ஊக்கலும் புரிந்துணர்வும் சுமுகமான -உயிர்த்துடிப் பான நட்புணர்வுடன் தொழில் வாண்மை விருத்தி பெறுவர்.

3.வேலை செய்யும் ஆற்றல் அதிகரிக்கும், வளங்கள் உச்சமாகப் பயன்படுத்தப்படும்.

4. கல்வித்துறையில் சகல பிரிவுகளும் உரிய பண்புத்தர முகாமைத்துவத்துடன் செயலாற்றுவதன் மூலம் கல்வித்துறையின் கூட்டு முயற்சியும் அர்ப்பணிப்பும் அதிகரிக்கும்.

5.கல்வியில் பிரதிபலனைப் பெறும் மாணவர்களும், பெற்றோர்களும் திருப்தி அடைவர்.

6. பாடசாலை முறையின் பலம்- பலவீனம்- சந்தர்ப்பங் கள் - அபாயங்கள் கண்டறியப்பட்டு உரிய தீர்வுகளைக் காண முடியும்.

7. பாடசாலைகளை மையப்படுத்திய பாடசாலை ஆதார முகாமைத்துவத்தைக் கட்டியெழுப்பி பாடசாலைகளைச் சுயமாக இயங்க விட்டு சிறப்பான அடைவு மட்டத்தைப் பெறலாம் என்ற வகையில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் முகாமைக் குழு நவீன முகாமைத்துவ கோட்பாடுகளை உள்வாங்கி, அதிபர் தன் ஆசிரியர்கள் அனைவருடனும் சிறந்த தொடர்பையும் ஒத்துழைப்பையும் பெற்று செயற்பட வேண்டும். பாடசாலையில் நிச்சயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு ஆசிரியர்களது ஒத்துழைப்பும் பங்குபற்றலும் அவசியமாகும். ஆசிரியர்களுடைய அபிப்பிராயங்கள் கௌரவிக்கப்படும் போது அவர்களுடைய ஈடுபாடும் பொறுப்புடைமையும் பாடசாலை வேலைகளில் அதிகரிக்கும். ஆசிரியர்களுடைய ஈடுபாடு அதிகரிக்கும் போது ஆசிரியர்களை மதிப்பீடு செய்யும் வேலை குறைகின்றது. அதற்குப்பதிலாக அதிபரதும் ஆசிரியர்களும் கவனமும் கண்காணிப்பும் மாணவர் கற்றல் மேம்பாட்டில் திசை திருப்பப்படும். பெற்றோர்களுடைய ஒத்துழைப்பு, சமூக ஒத்துழைப்பு விருத்தியாகும். பாடசாலை வெற்றி பெறும். இதற்கான முகாமைத்துவ மனிதவள செயலாற்றுகைகளை நாம் விரைவாகப் பிரயோகிக்க வேண்டியுள்ளது.

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உற்பத்தித் தீர்வைகள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தேர்தல் காலத்தில் மக்களை ஈர்த்தெடுக்கும் திட்டமே திவிநெகும திட்டமாகும். அத்திட்டம் ஒரு ஏமாற்றுத் திட்டமாகும். தேர்தல் காலப் பிரசாரங்களுக்கு மாத்திரமே அத்திட்டங்கள் அறிவிக்கப்படும். அதன் பின்னர் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

மகநெகும திட்டத்திற்கு உரித்தான சிமெந்து மூடைகள் தேர்தல் காலத்தில் வாக்காளர்களைத் திரட்ட பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அதுகுறித்து எவரும் கண்காணிக்கவில்லை. அத்துடன், கந்தளாய் - ஹபரணை வீதியின் ஒரு கிலோ மீற்றர் தூரத்தைப் புனரமைக்க ஒருகோடி ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. பண்டுவஸ்நுவர பகுதியில் 'சீதரப் பாதை புனரமைப்பதற்கு அவ் வீதியின் 7கிலோ மீற்றர் தூரத்திற்கு 4 கோடி ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது.

இந்த உற்பத்தித் தீர்வைகள் வரிச்சட்டதிருத்தத்தின் மூலம் மக்களுக்கு மேலும் சுமை ஏற்றப்படுகிறது. வாக்களித்த மக்கள் வாழ்ந்தாலும், செத்தாலும் கவனிப்பாரில்லை என்ற நிலைமையே தற்போது உள்ளது - என்றார்.

## காப்பாற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவை எடுக்கும் கட்சியின் செயற்குழுக் கூட்டம் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று மாலை மீண்டும் இடம்பெற்றது.

இதன்போதே கட்சிச் செயற்குழு பொது இணக்கப்பாட்டுடன் தலைவர் பதவி உட்பட முக்கிய பதவிகளுக்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்குத் தீர்மானித்தது.

இதற்கிணங்க கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து நீடிப்பார் என்றும் பிரதித் தலைவர்களாக சஜீத் பிரேமதாஸவும், கரு ஜயசூரியவும் நீடிப்பர் என்றும் கட்சிச் செயற்குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

அத்துடன், கட்சியின் செயலாளர், தவிசாளார், தேசிய அமைப்பாளர் ஆகிய பதவிகளில் தொடர்ந்தும் இருந்தவர்களே நீடிப்பர்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

அதேவேளை, ஐ.தே.கவின் பொதுச் செயலாளராக திஸ்ஸ அத்தநாயக்கவும், தவிசாளராக காமினி ஜயவிக்கிரம பெரேராவும் இருந்து வருகின்றமை தெரிந்ததே. (ஒ-சி)

## மரண அறிவித்தல்கள்

### இரத்தினம் பூமணி



கட்டைப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் பூமணி நேற்று (23.03.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினத்தின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்பு மனைவியும் விமலா, தவரத்தினம், நிர்மலா, யோகரத்தினம் (பாதுகாப்பு உத்தியோகத்தர், இ.போ.ச.), காலஞ்சென்ற நவரத்தினம் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (24.03.2011) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டக்குளத்தடி,*
*கட்டப்பிராய், யாழ்.*

தகவல்:
சந்திரராசா (மருமகன்).

### செல்லையா ஜோண்சன்

(சாவ. டிறிபேக் கல்லூரி பழைய மாணவனும்,முன்னாள் விஞ்ஞான ஆசிரியர், மட்டுவில் வளர்மதி கல்வி நிலையம்)



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் பிரான்ஸில் வசித்து வந்தவருமான செல்லையா ஜோண்சன் நேற்று (23.03.2011) புதன்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன். செல்லையா (முன்னாள் உறுப்பினர், கைதடி கிராம சபை) மற்றும் சிவசோதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற விநாசித்தம்பி மற்றும் அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் அமுதாவின் அன்புக் கணவரும் கதிரினா, செனன்குளோற் ஆகியோரின் அன்புத் தந்தையும் வின்சன் (நீர்கொழும்பு), தயாசீலி (பிரான்ஸ்), ஞானசீலி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாஸ்கர் (சுவிஸ்), சிறீதர் (பிரான்ஸ்), வனிதா (பிரான்ஸ்), ஜியிதா, சாந்தி (நீர்கொழும்பு), சின்னத்துரை (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் கைதடியில் வசிக்கும் குஞ்சுப்பிள்ளை, சின்னப்பிள்ளை, முத்துப்பிள்ளை, காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை மற்றும் குமரகுருராஜா (கரவெட்டி) ஆகியோரின் மருமகனும் சின்னத்தம்பி (சுவிஸ்), சிவஞானம் (ஜேர்மனி), சேனாமணி (கரவெட்டி) ஆகியோரின் பெறாமகனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'அன்னகம்'*
*கைதடி மேற்கு, கைதடி* (சி/577141) (35)

தகவல்:
குடும்பத்தினர்.

### சிவகுரு இராசரட்ணம்

பெரியவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவகுரு இராசரட்ணம் நேற்று (23.03.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு, அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், துரைராசா, காலஞ்சென்ற நடராசா மற்றும் தம்பிராசா நவரட்ணம், காலஞ்சென்ற முத்துராசா மற்றும் தவமணி, சரஸ்வதி, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (24.03.2011) வியாழக்கிழமை பி.ப 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பெரியவிளான் இந்துமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
பெரியவிளான். (2361) (35)

தகவல்:
சகோதரர்கள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




வவுனியா மாவட்டத்தில் மழையும் ஏனைய மாவட்டங்களில் தெளிவான வானிலை நிலவும் சாத்தியம் உள்ளது.

# அம்பாந்தோட்டையில் கப்பல்கள் எதனையும் காணோம் துறைமுகத்தில் காகித ஓடங்களே மிதக்கின்றன

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் அப்பிரதேச சிறுவர்கள் காகித ஓடங்களை செய்து மிதக்க விட்டு விளையாடுகின்றனர். வேறு எந்த ஒரு வெளிநாட்டு உள்நாட்டுக் கப்பல்கள் எதுவுமே இத்துறைமுகத்துக்கு வருவதில்லை. அதன் விவரங்களை வெளியிடும் துணிவும் அரசுக்கு இல்லை என்று குற்றம் சாட்டினார் (ஐ.தே.க) எதிர்க்கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர.

நேற்று நாடாளுமன்றில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போதே தயாசிறி இப்படிக் குற்றம் சுமத்தினார்.

நாடாளுமன்றம் நேற்று மாலை பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது.

வழமையான சபை நடவடிக்கைகளின் பின் பிரதேச வாசிகளின் முறைப்பாடுகள் தொடர்பான மனுக்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் சமர்ப்பித்தனர்.

தொடர்ந்து வாய்மூல விடைக்கான கேள்விகள் இடம்பெற்றன.

எதிர்க்கட்சி உறுப்பினரான தயாசிறி ஜயசேகர துறைமுகங்கள் அபிவிருத்தி அமைச்சரிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

அதாவது துறைமுகங்கள் அபிவிருத்திக்கு அதிகார சபையின் தலைவர் யார்? அவரை நியமித்தது யார்? அவருடைய கல்வித் தகைமைகள் என்ன? அவருக்கு வழங்கப்படும் மாதச் சம்பளம் எவ்வளவு என்று கேள்விகளைத் தொடுத்தார்.

இக்கேள்விகளுக்கு பிரதி அமைச்சர் நிர்மல் கொத்தலாவல பதில் அளித்தார்.

துறைமுகங்கள் அதிகார சபையின் புதிய தலைவராக 37 வயதுடைய பிரியந்த பந்து விக்கிரமசிங்க என்பவர் துறைமுகங்கள் அபிவிருத்தி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். தொழில்நுட்பத்துறையில் பட்டதாரியான இவர் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

### துறைமுகங்கள் அதிகார சபை தலைவருக்கு மாதாந்தக் கொடுப்பனவு 1,64,823 ரூபா

இவருக்கு அடிப்படைச் சம்பளம் 54,190 ரூபாவுடன் தொழில்சார் கொடுப்பனவுகளான 88,156 ரூபாவும் கருத்திட்ட மற்றும் விசேட கொடுப்பனவுகளாக 76,667 ரூபாவும் வழங்கப்படுகின்றது என்றார் பிரதி அமைச்சர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இடைமறித்தார் தயாசிறி ஜயசேகர.

ஐயா! அமைச்சினால் தலைவராக நியமிக்கப்பட்டவர் கலாநிதி உட்பட பல பட்டங்களைப் பெற்றுள்ளார். மொத்தமாக ஒன்றேமுக்கால் லட்ச ரூபாவை மாதாந்த கொடுப்பனவாகப் பெறுகிறார்.

இவ்வளவு திறமை மிக்க தலைவர் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு எந்தவிதமான அபிவிருத்தியை ஏற்படுத்தி உள்ளார். அமைச்சரால் கூறமுடியுமா? ஜனாதிபதியின் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு எத்தனை கப்பல்கள் வந்து போகின்றன என்றார்.

**நாடாளுமன்றத்திலிருந்து**
**புத்திரசிகாமணி**

இந்த இடைக் கேள்வியை எதிர்பார்த்திராத அமைச்சர் இக்கேள்வி உறுப்பினர் கேட்ட கேள்வியுடன் தொடர்பு இல்லாததால் பதிலளிக்க முடியாது என்றார்.

### காகித ஓடங்களே மிதக்க விடப்பட்டுள்ளன

தயாசிறியும் விடவில்லை. பிரதி சபாநாயகர் அவர்களே! இந்தப் பிரதி அமைச்சர் என்ன பேசுகின்றார். துறைமுகங்கள் தொடர்பாகவே நான் கேள்வி எழுப்பினேன். அப்படியானால் அம்பாந்தோட்டை துறைமுகம், துறைமுகம் இல்லையா? அந்தத் துறைமுகத்துக்கு எத்தனை கப்பல்கள் வந்துள்ளன என்பதைக் கூட அமைச்சரால் கூற முடியவில்லை. இது வேடிக்கையானது என்று விமர்சித்தார் தயாசிறி ஜயசேகர.

### அம்பாந்தோட்டை துறைமுகத்தால் சபையில் சர்ச்சை

தயாசிறியின் இந்த விமர்சனம் ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கு 'சூட்டைக் கிளப்பி விட்டது. இதனால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. எனினும் தயாசிறி தனித்து நின்று பதிலடி கொடுத்தார்.

ஐயா இப்போது சுற்றுலாச் செல்லும் பெற்றோர்கள் அம்பாந்தோட்டைத்துறைமுகத்துக்கு பிள்ளைகளுக்கு கப்பல் காட்டுகின்றோம் என்று அழைத்துச் செல்கின்றனர். ஆனால் அங்கே அப்பிரதேச பிள்ளைகள் காகித ஓடங்களை செய்து மிதக்கவிடுவதை மட்டுமே பார்க்க முடிகிறது.

அங்கே உண்மையான கப்பல்கள் செல்ல முடியாதாம். காரணம் கற்பாறை ஒன்று இடை நடுவில் காணப்படுவதே என்றும் சுட்டிக்காட்டினார். அப்போது குறுக்கிட்ட அமைச்சர் 'கல்' தொடர்பான விடயங்களில் நிபுணர் உங்கள் பக்கம்தான் இருக் கின்றார். அவரிடம் கூறுங்கள் என்று கூறினார். இது சபையில் நகைப்புக்குரியதாகிவிட்டது.

நேற்றைய கேள்வி நேரத்தின் போது எழுப்பப்பட்ட கேள்விகளுள் பெரும்பாலானவற்றுக்கான பதில்கள் சபா பீடத்தில் சமர்ப்பிக்கப்பட்டதால் இடைக் கேள்விகள் கேட்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டதால் சபையில் கேள்வி நேரம் உப்புச் சப்பற்றதாகவே காணப்பட்டது.

கேள்வி நேரத்தின் பின் சபை நிகழ்வுகள் தொடர்ந்தன. இடையில் ஆளும் கட்சி உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் தலைமையேற்றார்.

### சிரேஷ்ட அமைச்சர் பிரேரணைகளை முன்வைத்தார்

உற்பத்தித் தீர்வை விசேட ஏற்பாடுகள் மற்றும் பிரதமரால் சமர்ப்பிக்கப்படவிருந்த வியாபாரப் பொருள்கள் அறவீட்டு சட்ட மூலங்கள் மூன்றையும் சிரேஷ்ட அமைச்சர் அத்தாவுட செனவிரத்தின சபையில் முன்வைத்தார்.

சிரேஷ்ட அமைச்சர் முன்வைத்துப் பேசிய பிரேரணை தொடர்பாக கூறிய விடயங்களை விட தேர்தல் வெற்றி தொடர்பாகவும் எதிர்க்கட்சியின் மீது சேற்றை வாரி இறைத்ததே கூடுதலாக இருந்தது.

இடைக்கிடை எதிரணி உறுப்பினர்கள் குறுக்கீடு செய்ததாலும் அதுவும் நகைச்சுவை நடையிலேயே அமைந்துவிட்டது.

### தயாசிறி ஜயசேகரவின் காட்டில் மழை

நேற்று எதிரணியின் சார்பில் முக்கிய பேச்சாளர்களாக தயாசிறி ஜயசேகரவும் ரவி கருணநாயக்கவும் இடம்பிடித்தனர்.

எனினும் தயாசிறி ஜயசேகரவே கூடுதலான வாய்ப்பைப் பெற்றார். கேள்வி நேரத்தின் போது பேசமுடியாதவற்றை எல்லாம் கொட்டித்தீர்த்துவிட்டார்.

### கடல் மணல் பாவனைக்கு அறிமுகப்படுத்தும் திட்டம்

இன்று நாட்டில் பெருமளவிலான கட்டட நிர்மாணப் பணிகள், பாதை அபிவிருத்திகள், பாலங்கள், வீட்டுத்திட்டங்கள் என்பன நடைமுறைப்படுத்தப்படுவதால் மணல் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. இதனால் கடல் மணலை உபயோகிப்பது தொடர்பாக ஆய்வுகளை நடத்தி வருகிறோம். இத்திட்டம் கட்டட நிர்மாணத்துறைக்கும் பெரும் நன்மையளிக்கும் என சிரேஷ்ட அமைச்சர் கூறினார்.

### கருத்திட்டங்களும் அபிவிருத்தியும் செவிகளுக்கு மட்டுமே

இதுபோதாதா தயாசிறிக்கு. உண்மைதான் அரச ஆதரவாளர்கள் மட்டும் பெரும் நன்மை அடைவார்கள். மணல் விநியோகத்தில் பெரும் ஊழல்களும் மோசடிகளும் இடம்பெறுகின்றன. 'மகநெகும' அபிவிருத்தித் திட்டம் பெயரளவில் மட்டுமே. இத்திட்டத்துக்குள் மணல், சிமெந்து என்பன கடத்தப்படுகின்றன.

அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் பல மோசடிகளும் இடம்பெற்றுள்ளன. ஒரு கிலோ மீற்றர் பாதை அமைக்க 4 கோடி ரூபா ஏப்பம் விடப்பட்டுள்ளது. அரசின் அபி விருத்தித் திட்டங்கள் எல்லாம் செவிக்கு மட்டுமே. ஆனால் நடைமுறையில் இல்லை. இது தேர்தல் கால குண்டுகள் என்றும் சாடினார் தயாசிறி ஜயசேகர.

### பொல்லுக் கொடுத்து அடிவாங்கிய அமைச்சர் பிரியதர்சன யாப்பா

தயாசிறியின் கூற்றை ஆட்சேபித்தார் அமைச்சர் பிரியதர்சன யாப்பா. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எப்போதுமே தன்மையான விடயங்களைப் பற்றிப் பேசமாட்டார்கள். இன்றும் அப்படித்தான் பேசுகின்றார். பாவம் சஜித் பிரேமதாசா. அவர் நல்லவர். அவருக்கு இத்துப்போன கயிற்றைக் கொடுத்து பள்ளத்தில் தள்ளிவிட்டனர். எமது அரசின் அபிவிருத்தித் திட்டங்களால் மக்கள் பெரும் நன்மையடைந்துள்ளனர். இது எதிர்க்கட்சியினருக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் எம்பக்கமே என்று இடைமறித்துக் கூறினார் அமைச்சர் பிரியதர்சன யாப்பா.

### இதற்கும் பதிலடி கொடுத்தார் தயாசிறி ஜயசேகர

ஐயா இந்த அமைச்சர் கூறுவது சரிதான். எங்களுடைய குருநாகல் மாவட்டத்தில் அமைச்சர் யாப்பா பல 'நன்மை'களைச் செய்துள் ளார்.

இந்த மாவட்டத்தில் அரசாங்க ஆதரவாளர்கள் பலருக்கு மணல் விநியோகம் செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளார். இதனால் ஆளும் கட்சியினர் பலகோடி ரூபாக்களைச் சுருட்டிக்கொள்கின்றனர்.

உண்மையாகவே வீடுகளைக் கட்டும் ஏழைகள் மணல் கிடைக்காமல் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுக்கின்றனர்.

(32ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் பாடசாலை செல்லாத பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

மட்டக்களப்பு,மார்ச் 24

கிழக்கு மாகாணத்தில் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களின் கவனமின்மையால் பாடசாலை செல்லும் வயதை உடைய 3ஆயிரத்து 215 பிள்ளைகள் பாடசாலை செல்வதில்லை என ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தப் பிள்ளைகள் வீடுகளில் இருந்து பல்வேறு வேலைகளில் ஈடுபடுகின்றனர் எனத் தெரியவந்துள்ளது என்று மாகாணக்கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவிக்கின்றார்.

பிள்ளைகளின் கல்வி குறித்து பெற்றோர் கவனம் செலுத்தாமையும், வறுமையுமே இந்நிலைக்குக் காரணம் எனவும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

# நிகழ்வுகள்

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்.24

''கப்ஸ்ரன்'' நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.கல்வி வலயத்தினால் நடத்தப்படும் க.பொ.த உயர்தரக் கணக்கீடு, வணிகக்கல்வி பாட மாணவர்களுக்கான கருத்தரங்கு இன்று வியாழக்கிழமையும், நாளை வெள்ளிக்கிழமையும் காலை 8 மணி முதல் 4 மணி வரை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் நல்லூர், யாழ்.கோட்ட மாணவர்கள் கலந்து கொள்ள முடியும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ற)

### நூல் வெளியீட்டு விழா

கோப்பாய்,மார்ச்.24

நீர்வை மயுரகிரி எழுதிய ''கருணை நிறை காமாட்சி'' என்ற நூலின் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு நீர்வேலி வடக்கு காமாட்சி அம்பாள் ஆலய மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக கணக்கியல் துறைத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தொடக்கவுரையை நல்லை ஆதின குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் [illegible] மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சுகந்தினி ஸ்ரீ முரளிதரனும் நிகழ்த்துவார். (ஒ-72)

### வாண்மை விருத்திச் செயலமர்வு

யாழ்ப்பாணம்,மார்ச்.24

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை அதிபர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு நடைபெறவுள்ளதால் யாழ்.வலயப் பாடசாலை அதிபர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியா மீதான இராணுவத் தாக்குதல் முஸ்லிம் உலகுக்கு ஓர் அச்சுறுத்தல்

## சபையில் அஸ்வர் எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 24

லிபியா மீது மேற்கொள்ளப்படும் கூட்டுப்படைகளின் கண்மூடித்தனமாக இராணுவத் தாக்குதல் எதிர்காலத்தில் அரபு மற்றும் முஸ்லிம் உலகுக்கு ஓர் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என அஸ்வர் எம்.பி. எச்சரித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றில் சபை ஒத்திவைப்பு வேளையின் போது அமெரிக்கக் கூட்டுப்படைகள் லிபியா மீது மேற்கொள்ளும் இராணுவத் தாக்குதல்களைக் கண்டித்து பிரேரணை ஒன்றை சமர்ப்பித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அஷ்வர் எம்.பி தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

தற்போது லிபியா ஜமாஹிரிய்யா மீது மேற்கொள்ளப்படும் இராணுவத்தாக்குதல் உலகெங்கிலும் பெரும் பரபரப்பையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

மேற்குலகக் கூட்டமைப்பினால் மேற்கொள்ளப்படும் கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்கள் ஏற்கனவே மனித உயிர்களின் இழப்பையும் வணக்கத் தலங்களையும் மற்றும் ஏனைய கட்டடங்களுக்கு அழிவையும் ஏற்படுத்தியுள்ளது.

லிபியாவில் அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் கூட்டுப்படைகளின் இராணுவத் தலையீடு பெரும் அமளியை ஏற்படுத்தியுள்ளது. இது ஐ.நா. சாசனத்தை அப்பட்டமாக மீறும் ஒரு செயலாகும். ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான பொது மக்களின் மரணத்துக்கு பொறுப்பான இந்த நாடுகள் சில அப்பாவி பலஸ்தீனியர்களை, இஸ்ரேலியர்களைப் படுகொலை செய்வதைத் கண்டு களிக்கின்றனர். லிபியாவின் எண்ணெய் வளத்தைப் பெறுவதற்காகவும் அந்தப் பிராந்தியத்தில் பலமான இராணுவப் பிரசன்னத்தை ஏற்படுத்துவதற்கும் லிபியாவில் மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவத்தலையீடு எதிர் காலத்தில் அரபு மற்றும் முஸ்லிம் உலகுக்கு ஓர் அச்சுறுத்தலாக அமையும் என சர்வதேச ஊடகங்கள் கருத்து தெரிவிக்கின்றன.

வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் இந்த மனித உரிமை மீறல் மற்றும் ஏனைய நாடுகளின் உள்ளக விவகாரங்களில் தலையிடாமை பற்றிய ஐக்கிய நாடுகள் சாசனத்தை மீறுதல் ஆகியவை சர்வதேச சமூகத்தின் மனச்சாட்சியை பெரும் சங்கடத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

எனவே லிபியா மீது மேற்குலக கூட்டமைப்பினால் மேற்கொள்ளப்படும் தாக்குதலை உடனடியாக நிறுத்துவதற்கும் தமது எதிர்கால நடவடிக்கைகளை தாங்களே தீர்மானிப்பதற்கான லிபிய ஜமாஹிரிய மக்களின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் சுய விருப்பத்தையும் அங்கீகரிப்பதற்கும் குரல் கொடுக்க வேண்டும் என எல்லா மக்களையும் அரசாங்கங்களையும் இந்த நாடாளுமன்றம் வேண்டுகின்றது. என்று அஸ்வர் குறிப்பிட்டார். (ஒ-02)

# கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகம் இன்று முற்றுகையிடப்படும்

லிபியா மீதான ஆக்கிரமிப்பு நோக்கிலான நேட்டோப் படைகளின் தாக்குதல் குறித்து எதிர்ப்பைத் தெரிவிக்கும் முகமாக இன்று கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகம் முற்றுகையிடப்படும் என்று அமைச்சர் விமல் வீரவன்ஷ அறிவித்துள்ளார். ஈராக்கை பொய்யான காரணங்களை முன் வைத்து ஆக்கிரமித்து அதன் எண்ணெய் வளத்தைச் சுரண்டுவதைப் போலவே, லிபியாவையும் ஆக்கிரமிக்க அமெரிக்கா தலைமையிலான நாடுகள் முயல்வதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன் லிபியாவில் நேட்டோப் படைகளின் தாக்குதல் காரணமாக அங்கு அப்பாவி மக்களே பலியாவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அதன் காரணமாக லிபியா மீதான தாக்குதலுக்கு அனுமதியளித்த ஐ.நா. சபையின் கொழும்பு அலுவலகத்தை பெருந்தொகையான ஆதரவாளர்களுடன் இன்று முற்றுகையிடவுள்ளதாக அவர் நேற்று அறிவித்துள்ளார்.

அத்துடன் உலகளாவிய ரீதியில் அமெரிக்கா தலைமையிலான லிபியத் தாக்குதலுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் தொடக்கமாக அது அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (தமிழ்வின்) (த-10)

இணையச் செய்திகள்

## சுதந்திரதினம்...



பாகிஸ்தானின் 72ஆவது சுதந்திரதின நிகழ்வு இலங்கையிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது. இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் திருமதி. சீமன் இலாஹி பலோச் தேசியக்கொடி ஏற்றுவதை படத்தில் காணலாம். (தமிழ்மிரர்)

# விடுதலைக்கு உதவுமாறு ஐ.நா. சபைக்கு மகஸின் சிறை தமிழ்க் கைதி கடிதம்

கொழும்பு புதிய மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் வர்த்தகர் ஒருவர், தமக்கு இழைக்கப்பட்ட துன்புறுத்தல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையில் முறையிட்டுள்ளார்.விடுதலைப் புலிகளுடன் தொடர்பினைக் கொண்டிருப்பதாகத் தெரிவித்து கைது செய்யப்பட்ட தாம், பொலிசாரினாலும், புலனாய்வுத் தரப்பினராலும் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டதாக அவர் குறிப்பட்டுள்ளார்.

இராமசாமி பிரபாகரன் என்ற அவர், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இதனை சுட்டிக்காட்டியுள்ளார். தம்மை விடுவிப்பதற்கான உதவிகளை மேற்கொள்ளுமாறு அவர் இந்த கடிதத்தில் கோரியுள்ளார்.

தாம் கடந்த ஐந்து மாதங்களாக கொழும்பு மகஸின் சிறையில், தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், தாம் கைது செய்யப்படுவதற்கு முன்னர் சுதந்திர வர்த்தகராக இருந்ததாகவும், பலவந்தமாக அரசு தம்மீது பயங்கரவாத முத்திரை குத்த முற்படுகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளது.

தமது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ள நிலையில், தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அவர் கோரியுள்ளார். தாம் இவ்வாற சட்டத்துக்கு முரணாக தடுத்து வைக்கப்பட்டு, உடல் ரீதியாகவும், மன ரீதியாவும் பாரிய அளவில் துன்புறுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் கடந்த 1983 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட பனாமா ட்ரேடர்ஸ் என் எலக்ட்ரோனிக் நிறுவனத்தின் உரிமையாளரான தான், வருடாந்தம் 180 மில்லியன் ரூபா வருமானமாக பெற்று வந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், கொழும்பு நீச்சல் குழுமம், கொழும்பு கோல்ப் குழுமம், சிங்கள விளையாட்டு கழகம் உள்ளிட்ட பல்வேறு கழகங்களில் தாம் அங்கத்துவம் பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் தாம் வியாபார நிமித்தமும், விடுமுறைக்காகவும், ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, அரபு இராச்சியம், ஹொங்கொங், அவுஸ்திரேலியா, நியுசிலாந்து போன்ற நாடுகளுக்கு வருடாந்தம் சென்று வருவதாகவும், இந்தியாவில் குடியுரிமையை கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஒரு வர்த்தகராக இலங்கையின் அபிவிருத்தி தொடர்பில், பாதுகாப்பு செயலாளருக்கும் பல்வேறு கடிதங்களை அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பல்வேறு பயங்கரவாதிகளையும் தாம் அடையாளம் காட்டியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான நிலையில் தம்மை விடுவிக்க உதவி செய்யுமாறு கோரியுள்ள அவர், விடுதலை பெற்றதன் பின்னர், வேறு ஒரு நாட்டில் அரசியல் தஞ்சம் கோரவிருப்பதாகவும் அவர் குறிப்பட்டுள்ளார்.

(தமிழ்வின்) (த-10)

# தமிழர் படுகொலையைத் தடுக்க ஐ.நா. சபை தவறிவிட்டது

இன்று லிபியா விடயத்தில் காட்டிய அவசரத்தினை அன்று தமிழர் விடயத்தில் ஐக்கிய நாடுகள் வெளிக்காட்டவில்லை என ஐநா மனிதஉரிமைகள் கவுன்சிலின்கூட்டத்தொடரில் பங்கேற்ற நாடுகடந்த தமிழீழ அரசாங்கப் பிரதிநிதி சிறிசஜீதா சிவராஜா குற்றஞ்சாட்டினார்.

ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்சிலின் 16ஆவது கூட்டத் தொடரில், நாடுகடந்த தமிழீழ அரசாங்கப் பிரதிநிதிகளான சுகிந்தன் முருகையா, ஜனர்தனன் புலேந்திரன் (சந்தோஸ்), சிறிசஜீதா சிவராஜா ஆகியோர் பங்கெடுத்துள்ளனர்.

22 மார்ச் 2011 - செவ்வாய் கிழமை இடம்பெற்ற பொதுநில வரங்களுக்கான பிரிவில், தமிழர் பிரதிநிதி சிறிசஜீதா சிவராஜா ஆற்றிய உரையில், ஆயுதப்போர்கள் இடம்பெறும் சூழல்களில், பெரும் இனப்படுகொலைகள் இடம்பெறும் வாய்ப்புக்கள் உள்ளது பற்றி, சர்வதேச சமூகம் விழிப்புடன் இருத்தல் வேண்டும் எனப் பல ஆண்டுகளுக்கு முன்பே, முன்னாள் ஐநா பொதுச் செயலாளர் கோபி அனான் ஆலோசனை கூறியிருந்த போதும், பல்வேறு ஆயுதப் போர்ச்சூழல்களில் பொதுமக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலைமை, கவனிப்பாக கையாளப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

இலங்கைத் தீவில் இடம் பெற்ற போரினை, அதற்கான உதாரணமாக முன்வைத்த சிறிசஜீதா சிவராஜா தொடர்ந்து தனதுரையில், தமிழர் தாயகப் பகுதியில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள், மையங்கள், தாக்கி அழிக்கப்பட்டு 100000 மேற்பட்ட மக்கள் போரின் இறுதி வாரத்தில் கொல்லப்பட்டிருக்கலாம் என்று மதிப்பிடப்படுகின்றது. 40000 மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று ஐ.நா அதிகாரிகளே சொல்லியிருந்த போதும், ஐ.நா அமைதி காத்துள்ளது.

இன்று செயலாளர் நாயகத்தின் சிறப்புக் குழு போர்க்குற்றங்கள் இடம்பெற்றிருக்கலாம் என்று கூறுகின்றது என்றும், நேரிடையான முறையில் ஐ.நா வின் அன்றைய செயலற்றதன்மையை தமிழ் பிரதிநிதி எடுத்துரைத்தார். (தமிழ்வின்) (த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண் சிகிச்சை நிலையம் இன்று திறப்பு

யாழ். போதனா வைத்தியசாலையில் புணரமைப்புச் செய்யப்பட்ட கண் சிகிச்சை நிலையம் வியாழக்கிழமை காலை திறந்து வைக்கப்படவுள்ளது.

இன்று யாழ். வருகை தரும் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் மகிபால இந்த நிலையத்தை திறந்து வைப்பார். இந்த கண் சிகிச்சை நிலையத்தை 25 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-26-4)

## மகா கும்பாபிஷேகம்

யாழ்.வண்ணை அங்குசபாச(கீரி)ப் பிள்ளையார் கோயில் புனராவர்த்தன கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டப பூசையை அடுத்து சுவாமி வெளி வீதியுலா வருவார். (ஒ)

## லிபியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலின் நோக்கம் தெளிவில்லை.

லிபியாவில் நிலவும் கொந்தளிப்பான நிலைமையை அடுத்து அங்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் தனது பிரதிநிதி ஒருவரை அனுப்பிவைத்த போதும் அந்த சந்தர்ப்பம் எவராலும் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை.

அதுவே இன்று ஏற்பட்டுள்ள இக்கட்டான மிக மோசமான நிலைக்குக் காரணம் ஆகும்.

இந்தச் சந்தர்ப்பத்திலும் கூட லிபியப் பிரச்சினைக்குச் சமாதான முறையில் பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும். இவ்வாறு ராஜதந்திர ரீதியில் மேற்கொள்ளப்படும் தீர்வுகளும் அந்நாட்டு மக்களின் உணர்வுகளையும் அபிலாஷைகளையும் திருப்திப்படுத்துவதாகவே அமைய வேண்டும்.

நாம் ஐக்கிய நாடுகள் சபையின் சமாதான தனிமனித உரிமை பிரகடனங்களை மதிக்கின்றோம் என்று அமைச்சர் பீரிஸ் கூறினார். (த-02)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றமை தெரிந்ததே. இந்நிலையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் உள்ளூராட்சி சபைகள் அனைத்தும் இயங்கவுள்ளன.

வெற்றிபெற்ற சபைகளுக்கு யாரைத் தவிசாளர்களாகவும், தலைவர்களாகவும் நியமிப்பது தொடர்பாக நேற்று நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரி ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஒ-சி)

## அம்பாந்தோட்டை...

(30 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அமைச்சர் யாப்பா இங்கு வந்து அரசுக்கு வக்காலத்து வாங்கிப் பேசுகின்றார். இன்று எதிர்க்கட்சியில் இருந்து பாய்ந்தவர்கள் அமைச்சர் விட கூடுதலான வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

எனவே இந்த அமைச்சர் பிரியதர்சன யாப்பாவும் இவர்களுடன் போட்டியிட்டு வாக்குகளைப் பெறவேண்டுமானால் இப்படித்தான் பேசவேண்டும் என்று அடி கொடுத்தார் தயாசிறி.

மற்றும் ஓர் எதிர்க்கட்சி உறுப்பினரான ரவி கருணாநாயக்க அரசின் பொருளாதாரக் கொள்கையைப் பெரிதும் கண்டித் தார். வாழ்க்கைச் செலவு அதிகரித்து விட்டதாகவும் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் கூறிய ரவிகருணா நாயக்க அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி தொடர்பாகவும் குறை கூறத் தவறவில்லை.

**பந்தை திருப்பி அடித்தார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்**

எப்போதுமே அமைதியாகவும் குறிப்பிட்ட விடயங்களுக்கு அப்பால் செல்லாமலும் பேசும் திறன்மிக்கவர் அமைச் சர் ரவூப் ஹக்கீம். கடந்த உள்ளூராட்சி சபைகளில் தமது கட்சிக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து தனது பேச்சை ஆரம்பித்தார் அமைச்சர் ஹக்கீம்.

இந்தச் சபையில் உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர் நண்பர் ரவி கருணாநாயக்க பழைய விடயங்களை மறந்து விட்டுப் பேசுகிறார்.

ஐ.தே.க. அரசில் நான் துறைமுகங்கள் அபிவிருத்தி அமைச்சரான இருந்தபோதே அம்பாந்தோட்டையில் துறைமுகம் அமைப்பதற்கான சாத்தியவள அறிக்கை தயாரிக்கப்பட்டது. அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வித்திட்டதே ஐக்கிய தேசியக் கட்சி தான். இப்பொழுது குறை கூறுவது அபத்தம் என்றார் அமைச்சர்.


**ஈஸ்வரன் ரான்ஸ்போட்ஸ்**
**வாடிக்கையாளர் கவனத்துக்கு**

கடந்த ஜனவரி மாதம் 20 ஆம் திகதி எமது நிறுவனத்தின் லொறி ஒன்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பொருள்களை ஏற்றி வரும்போது மாங்குளம் பகுதியில் எதிர்பாராத தீ அனர்த்தத்தில் சிக்கியது. இதில் எமது வாடிக்கையாளர்களின் பல பெறுமதியான பொருள்கள் எரியுண்டன.

இந்த வாடிக்கையாளர்களுக்கான இழப்பீட்டுக் காசோலை இன்று வியாழக்கிழமை எமது நிறுவனங்களில் வைத்து வழங்கப்படவுள்ளன. வாடிக்கையாளர்கள் தொடர்புகொண்டு இதனை உடன் பெற்றுக்கொள்ள முடியும்.

ஈஸ்வரன் ரேடர்ஸ், 69,115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 2222813
ஈஸ்வரன் ரேடர்ஸ், 201, B, டாம் வீதி, கொழும்பு - 12 தொ.பே. 0112433889, 0115232331

**SCC** பயிற்சி நெறிகள் ஆரம்பம் 26,28.03.2011

விசேட கணனிப் பயிற்சி நெறிகள்

- Dip. In MS Office
- Dip. In Desktop Publishing
- Dip. In Computer Programming
- Dip. In Eng. Drawing & Auto CAD
- Dip. In Computerized Accounting
- Dip. In Data Base Management System
- Dip. In Audio & Video Editing
- Dip. In Visual Basic
- Dip. In Web Designing
- Free
- Dip. In Hardware Engineering
- Dip. In Internet e-mail

4000/=

மேலதிக விபரங்களுக்கு

Softview Computer College
43, Thaddatheru Junction, Jaffna. T.P: 021 2225170

யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்- சாவகச்சேரி
**க.பொ.த (உயர்தர) வகுப்புக்கான அனுமதி**

- ✱ க.பொ.த (உயர்தர) வகுப்புக்கு தகுதி பெற்ற மாணவர்களிடமிருந்து கலை, வர்த்தகப் பிரிவுகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- ✱ மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புக்கு ஏற்ற முறையில் புதிய பாடச் சேர்க்கை ஒழுங்கு செய்து தரப்படும்.
- ■ தமிழ், இந்துசமயம்/ இந்துநாகரீகம், வரலாறு, அரசியல், பொருளியல், கணக்கீடு, வணிகக்கல்வி, விவசாயம், மனையியல், சங்கீதம், நடனம் சித்திரம்

குறிப்பு:- க.பொ.த (சாதாரண தரம்) உயர் பெறுபேற்றுடன் அனுமதி பெறும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வசதி வழங்கப்படும்.

தொ.பே:- 021 321 5190 அதிபர்

**பிறைற்றின் கல்வி நிலையம்**
சங்கத்தானை சாவகச்சேரி

A/L 2013 கலை, வர்த்தகப் பிரிவு

| | |
|---|---|
| தமிழ் | :- Y.பகீரதன் |
| வரலாறு | :- S.சுஜீகரன் |
| இந்துநாகரீகம் | :- S.விஜி |
| பொருளியல் | :- S.S.சிறி |
| கணக்கியல் | :- S.சிவதாஸ் |
| புவியியல் | :-V.பிறேம்குமார் |
| அரசியல் | :- K.சபேசன் |

ஆரம்பம்:- 25.03.2011 வெள்ளி 9.00 A.M

வடமராட்சியில்......
**ஸ்ரடி சேக்கிள்**
கொற்றாவத்தை வல்வெட்டித்துறை

- ✱ 2011 O/L Day Class
- ★ பிரத்தியேக கணித வகுப்புக்கள்

ஆசிரியர்: பரம்சேர்
ஆரம்பம்:- 25.03.2011 காலை 8.00 மணி.

**தேவை**

✱கணினி இயக்குநர் (அனுபவம் உள்ளவர்கள்)
✱மெசின் மைண்டர். ✱பைண்டர்.
M.S Office தெரிந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:- 0778447710


## பிரிந்துபோன 14ஆம் நாளில் உந்தன் 15 ஆவது பிறந்தநாளின் நினைவலைகள்

### அமரர் சந்திரசேகரன் அகிலஜன் (அகில்)



ஒளி தர வந்தது 1996'03'24

இருள் தந்து சென்றது 2011'03'11

அகில்!
இன்றுந்தன் பிறந்தநாள் - உன்
உதய நாள் தேடி நாமும்
உவகையோடு காத்திருக்க,
இனிமையாய் பழகிய நீ எம்
இதயங்களைக் கனக்க வைத்து
எங்கு சென்றாய் ???
பார்த்திருக்க - எம் விழி பூத்திருக்க
பூத்த மலர் வாடும் முன்பே - இப்
புவியை விட்டு நீ சென்றதுவேன் ???
பெற்ற வயிறு பற்றி எரிய - அவளைப்
பரிதவிக்க விட்டு நீ சென்றதுவேன் ???
அகில்!
அகிலத்தில் எமக்கெல்லாம்
ஒளி தருவாய் என்றிருந்தோம்
ஒளி தந்து - அதைப் பறித்து
இருள் தந்து எங்கு சென்றாய் ???
கதறி அழும் உன்னுறவுகளை - நீ
கண்டுகொள்ள மறுத்தாலும் -
புலம்பும் உன் அன்னையைத் தானும் - அவள்
உனைப்பிரசவித்த தினத்திலேனும்
அவள் அருகில் தேற்றிடவா !!!!!
அவள் மனமாற வேண்டுமென்று:

இல.27/16, பூனாறி மரத்தடி வீதி,
வண்- வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

உன் நினைவுகளைச் சுமந்தபடி
உன் குடும்பத்தினர்.(2350)


**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

வெளிவாரி பட்டப்படிப்புகள்
External Degree
B.A, B.com
(யாழ்ப்பாணம், பேராதனை பல்கலைக்கழகம்)
GAQ, BA 1 & BA Final
Political science, Tamil, Hindu civilization, Christian civilization, Philosophy, Geography, economics, Drama & theatre arts, Commerce, Histry, English Literature, Linguistics மற்றும் அனைத்து தனை பாடங்களும் இடம்பெறுகின்றது கட்டணம் மாதம் 1000ரூபா மட்டுமே ஆரம்பம் 20-03-2011 9.00 மணி

துரித மீட்டல் வகுப்புக்கள்
BA PART 1, FINAL கலை மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
1st in Bcom.Bcom (1&11), Final வகுப்புக்களும் இடம்பெறுகின்றன

Furthur Detail
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.

**NEC** பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
**A/L 2013**
**கலைப் பிரிவு**

| | |
|---|---|
| தமிழ் | :A.K. கீர்த்திராஜன் |
| பொருளியல் | :NB. கஜீதரன் |
| அளவையியல் | :P. கமல்தாசன் |
| புவியியல் | :M. செல்வா |
| இந்துநாகரீகம் | :T. ஸ்ரீஸ் |
| அரசியல் | :A.K. றொபின்சன் |
| வரலாறு | :R.R. ஆனந்தன் |
| நாட.அரங்கி | :S.R. ரமேஸ் |
| கிறிஸ்தவம் | :S. நிரோஜன் |

ஆரம்பம் : 26-03-2011 சனி 8.00 மணி
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.

**NEC** பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
**A/L 2013**
**வர்த்தகப் பிரிவு**

| | |
|---|---|
| கணக்கீடு | : AP. பகீரதன் |
| பொருளியல் | : NB. கஜீதரன் |
| வணிகக்கல்வி | : S. யசோதரன் |

ஆரம்பம் : 26-03-2011 சனி 8.00 மணி
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.

**யூனிவேர்சல்** யாழ் இந்து மகளிர் கல்லூரி அருகே.

A/L கலை, வர்த்தகப் பிரிவுகள்

| | |
|---|---|
| Tam: | திரு.குழந்தை, திரு.சிவா |
| Log: | திரு.கமல்தாசன் |
| H.cu: | திரு.ஜெயக்குமார் |
| P.sc: | திரு.செந்தூரன் |
| Geo: | திரு.கரன் |
| His: | திரு.தாஸ் |
| Dra: | திரு.சுகந்தன் |
| Acc: | திரு.தவா |
| Eco: | திரு.சண் |
| B.st: | திரு.பிரதீபன் |

அமைதியான,நெருக்கடியற்ற பாதுகாப்பான சூழலில் கல்வியைப் பெற்றிட எம்மோடு இணையுங்கள்.

A/L 2013 ஆரம்பம்: - சனி 26.3.2011 கலை: 7am வர்த்தகம் : 2pm

DAY CLASS ஆரம்பம்: 25.3.2011 வெள்

DAY CLASS
அளவையியல் திங்,வெள் 7am
தமிழ் திங்,வெள் 8am
இந்.நாகரிகம் சனி,ஞாயி 11am
அரசியல் சனி,ஞாயி 12.pm
வரலாறு செவ்,வியா 7am
புவியியல் சனி,ஞாயி 10am
பொருளியல் செவ்,வியா 4pm
கணக்கீடு செவ்,புத,வியா 6am
வணிகக்கல்வி செவ்,வியா 5pm


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org